# கல்கி

KALKI 28-9-80 90






பார்த்தறியாப் புதுமை. பரவசக் கிளுகிளுப்பு.
லிரில். அலையெதிரும் தளதள பச்சை. அதன்
நயமோ குளுகுளு எலுமிச்சை...புதுக்
குமரியாய் உங்களைப் பூரித்தெழ வைக்கும்.

லிரில்
புத்துணர்வு சோப் மனம்குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி வெள்ளம்.

லின்டாஸ்-LR.28-203 TM

இந்துஸ்தான் லீவரின் தரமுடன் தயாரிப்பு.

# ஆனந்த ஞானரதம்



இவ்வாண்டு திருவேற்காடு கருமாரியம்மன் தேர்த்திருவிழா வைபவம் அறநிலைய அமைச்சர் ஆர். எம். வீரப்பன் வடம் இழுக்க ஆரம்பமாகியது. நாலு வருடங்களுக்கு முன் உருவான இந்தத் தேருக்கு ஆனந்த ஞான ரதத் தேர் என்று பெயர். சித்தர் பாடலில் ஒரு வரியாம் இது. பெயர் சூட்டியவர் ஸ்வாமி ராமதாசர்.

ஞான உருவாகிய அம்மன் தேரில் ஏறி ஆனந்த மாகப் பவனி வருவதால் ஆனந்த ஞானரதம் என்று பெயர்.

இதைச் செய்து முடிக்க ஒன்றரை வருட காலமும், சுமார் ஐந்தரை லட்சம் செலவும் ஆயின. முழுவதும் மரவேலைப்பாடுகள். புராண இதிகாசங்களைச் சிற்ப வடிவில் காணலாம். தேரின் உயரம் 33 அடி; சுற்றளவு உள்கூடு 14 அடி. ஒரு பக்க வடத்துக்கு 250 பேர் அதாவது மொத்தம் 500 பேர் இழுக்க வேண்டும். காரைக்குடியைச் சேர்ந்த முனுசாமி ஆசாரிதான் இத்தேரை இவ்வளவு சிறப்பாகச் செய்திருக்கிறார்.

உட்பிராகாரத்தில் பவனிவரச் சுமார் ஒன்பது லட்ச ரூபாய் செலவில் தங்கத் தேர் ஒன்றும் புதிதாக நிர்மாணிக்க அறநிலையத்துறை அனுமதி வழங்கியுள்ளது.

பெரிய தேர் ஓடச் சரியான சாலைகள் இல்லாததால் தேரோடும் வீதி அமைக்க முடிவு செய்திருக்கிறார்கள்.

வடம் பிடிக்க வந்திருந்த ஆர். எம். வீரப்பனைக் கோயிலின் உள்ளே ஒவ்வொரு சன்னிதானத்துக்கும் அழைத்துச் சென்று பிரசாதம் கொடுத்தார்கள். தமக்கு அளிக்கப்பட்ட விபூதி, குங்குமம், புனித நீர் இவைகளை யெல்லாம் மிகவும் மரியாதையுடன் பெற்றுத் தயாள குணத்துடன் தம் உதவியாளரிடம் அளித்துவிட்டார் அமைச்சர்!

- சலன்



# Kalki Shopping Page


ஆண்களுக்கு
தையற்கலை
வகுப்புகள்

நேரிடையாக 2 மாத / 8 மாத பகுதி நேர / முழுநேர வகுப்புகளில் பயின்று சுயமாக பொருளீட்ட ஆண்களுக்கு அரிய வாய்ப்பு. ஷிப்டில் உள்ளவர்களுக்கு வசதி செய்யப்படும். செய்முறை வகுப்புகள் தமிழ், தெலுங்கு, ஆங்கில மலையாள மொழிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. முற்றிலும் எளிய நவீன முறையில் நடத்தப்படும் ஒரே ஸ்தாபனம்.

ஹாஸ்டல் வசதி உண்டு

நேரில் வரவும் (அ) விபர புத்தகம் பெற ரூ. 2-00 M.O. செய்க.

வனஜ் தையற் பள்ளி
32 காந்தி இர்வின் சாலை எழும்பூர் சென்னை 8
(டென்னிஸ் ஸ்டேடியம் அருகில்)
எந்த தேதியிலும் சேர்த்துக் கொள்ளப்படும்.



ஆரோக்கிய உடலையும்
ஆனந்த வாழ்வையும் தரும்

ஆழ்நிலை தியானம்

(தபால் வழி போதனை முறைப் பயிற்சி)

அன்றைய நாளில் வாழ்ந்தோர் — அமைதி பூத்த வாழ்வும் அழியா உடலும் கொண்டதற்கு அரிய கலை "ஆழ்நிலை தியானம்" ஒன்றே காரணமாகும்.

வியாதியில்லா உடலை உருவாக்கிடவும், வந்த வியாதிகளைத் துரத்தி அடித்து தூய உடல் கொள்ளவும், தொழில் வாழ்வில் தொல்லை அற்ற செல்வ நிலை பெறவும், வறுமை, வாடிய நிலை, வாட்டும் பிணி இவற்றினின்று நிரந்தரமாக நீக்கம் பெற்று, நீடிய ஆயுளை பெற்றிட இவ்வினிய கலையைக் கற்றிட விரும்புவோர் சேரும் முறை, செலுத்தும் கட்டணம், பூரண விபரம் அறிய 45 நயா பைசா தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவரிணைத்து 20-10-1980 தேதிக்குள் மனுச் செய்து கொள்க.

குறிப்பு: அயல் நாட்டவர்கள் பதிலுக்காக இண்டர் நேஷனல் கூப்பன் வாங்கி வைத்து அனுப்பிடுக.

பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்
ஸ்ரீமத் ஜெயவீரதேவா யோகி
பிளாட் நெ. 204, கதவு எண் 5
அண்ணா நகர், மதுரை - 625 020



காஞ்சீபுரம், தர்மாவரம் ஆரணி
பட்டுச் சேலைகளில்

- நவீனம்,
- நாகரீகம்,
- புதிய டிசைன்,
- சிறந்த வேலைப்பாடு,
- அழுத்தமான நெசவு

விரும்பும் அனைவரும்
விரும்பி வருகை தருவது

S.R.B.
FASHION CREATORS IN SILK SAREES
S.R.B. சில்க்ஸ்
229, கீழமாரெட் வீதி, மதுரை-1.
போன்: 22036.




எல்லா
வயதினருக்கும்
எல்லா
தேவைகளுக்கும்
கைத்தறி!

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

கோ - ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையம்
340 பேப்பர் மில் ரோடு,
பெரம்பூர், சென்னை -11
அருகில் உள்ள
விற்பனை நிலையங்களுக்கு
வருகை தாரீர்!


- ஆத்மாஸ்

நவசக்தி நிலையத்தாரின்
உன்னதத் தயாரிப்பு!



திருஷ்டி நிவர்த்தி யந்திரம்-(ரூ. 42)
திருஷ்டி நிவர்த்தி டாலர்-(ரூ. 35)
(மும்மூர்த்தி அம்சம் கொண்டது)
(பூஜையில் வைத்தது)

- லாரி, கார், ஸ்கூட்டர் ஆகிய வாகனங்களின் விபத்துக்களைத் தடுக்க—
- கறவைப் பசுக்கள் கறவை குறையாமல் பலன்தர—
- வீடு, தொழிற்சாலை, மற்றும் வியாபார ஸ்தலங்கள் செல்வமுடன் விருத்தியடைய—
- கண் திருஷ்டியால் ஏற்படும் உடல் உபாதைகள் வராமலிருக்க—

உறுதுணையாக இருக்கும் சக்திமிக்க சாதனம்! தபாலில் பெற 25% முன்பணமனுப்பி வி.பி.பி.யில் பெறலாம். விரிவான கேட்லாக்கு பெற 25பைசா தபால் தலையுடன் எழுதவும்.

**நவசக்தி நிலையம்**
153, லாயிட்ஸ் ரோடு, கோபாலபுரம்,
சென்னை-600 086. (போன்: 812013)

With the best Compliments of:

**INDUSTRIAL RESEARCH CORPORATION**
**MADRAS - 600 041**
**BANGALORE - 560 055**

Manf:

**Bril BRAND**

Fountain Pen Inks
(In all colours)
STAMP PAD INK
RUBBER STAMP PADS
LIQUID GUM & OFFICE PASTE

**HMV STEREO 1010-IC**



Rs 1530/- Max. Rec. Ret. Price incl. Excise Duty. Taxes extra.

**HMV STEREO SYSTEMS**

**HMV STEREO POPULAR II**



Rs.1125/- Max. Rec. Ret. Price incl. Excise Duty. Taxes extra.

**HMV STEREO SYSTEMS**

*Available at*

**RADIO SERVICES**
10, Mount Road, Madras-600 002
Phone: 86091

24, General Patters Road,
Madras-600 002 Phone: 88089

**ARUNA & COMPANY**
479, Tiruvottiyur High Road,
Madras-600 019 Phone: 553644

**VIVEK & COMPANY**
106-B, Purasawalkam High Road,
Madras-600 007 Phone: 662462

# தமிழுக்கு ஒரு ராஜா

இரண்டு ஜோதிடர்கள் அந்தக் குழந்தையின் ஜாதகத்தை வைத்துக் கொண்டு பலமாக விவாதிக்க ஆரம்பித்தார்கள்.

"ஆண் மூலம் அரசாளும் என்பது வசனம். கோடிக் கணக்கில் சம்பாதிக்கும் இது!" என்றார் ஒருவர்.

'நன்றாகப் பாரும் ஐயா! கோடிக் கணக்கில் **செலவழிக்கிற** ஜாதகம் அல்லவா இது!" என்றார் அடுத்தவர்!

விவாதம் முடிவில்லாமல் தொடர்ந்தது! உண்மையில் நடந்தது என்ன?

நூறு ஆண்டுகளுக்கு முன்பு கானாடுகாத்தான் என்ற சிற்றூரிலே பிறந்த ஆண் மூலம் அண்ணாமலை என்ற அந்தக் குழந்தை அரசராகவே ஆகிற்று! இலட்சம் இலட்சமாகத் திரட்டியது! இலட்சம் இலட்சமாகவே செலவும் செய்தது! செலவு செய்வதற்காகவே சம்பாதித்த குழந்தை அது!

சம்பாதிப்பது எப்படி என்று நான் எல்லாரும் இரவு பகலாகச் சிந்திப்பார்கள்.



ஆனால் அண்ணாமலையார் செலவழிப்பது எப்படி என்பதைப் பற்றியும் இரவு பகல் சிந்தனை செய்தார்! திட்டங்கள் தீட்டினார்!

பணம் சம்பாதிக்கத் தெரிந்தவர்கள் பலரைப் பார்க்கிறோம். ஆனால் செட்டிநாட்டு அரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களைப் போல் அந்தப் பணத்தை நிலையான துறைகளில் செலவிடுகிற வள்ளல்கள் எத்தனை பேர் உண்டு? அது மட்டுமில்லை; எந்தத் துறைக்கு எவரைக் கொண்டு எவ்வாறு செலவு செய்யலாம் என்று ஆராய்ந்து செயலாற்றுகிற வல்லமை யாருக்கு உண்டு?

அந்த வல்லமைக்கு நிலையான உருவமாக நம் கண் முன் நிற்பதே அண்ணாமலைப் பல்கலைக் கழகம்!

"தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப் பல்கலைக் கழகத்தின் குறிக்கோளாக இருக்கும்!" என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது ஆட்சிக் குழுவிலே அண்ணாமலையார் அறிவித்தார்!

இந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவியதோடு நின்றுவிடவில்லை அவருடைய குறிக்கோள்! தமிழின் சிறப்பை உலகமே அறிந்தாலும், நமக்கு அக்கறை இல்லை என்று புறக்கணித்து விடுவார்களே தமிழ் மக்கள், என்பதை உணர்ந்தார்! தமிழ் நாட்டின் தலைநகரிலே தமிழ் இசைச் சங்கம் தோன்றியது. அண்ணாமலை மன்றம் எழுந்தது!

ஆலயத்திருப்பணிகள், மருத்துவ சாலைகள், சமுதாய நல நிறுவனங்கள் என்று இந்தியாவிலும் இலங்கையிலும், பர்மாவிலும் பல அமைப்புக்களைப் பல இலட்சங்கள் செலவிட்டு உருவாக்கினார். இந்த அரிய சேவைகளை யெல்லாம் பாராட்டிய அரசாங்கம் 1929ல் அவருடைய பரம்பரைக்கே "ராஜா" என்ற பட்டத்தை வழங்கியது. எந்தப் பரந்துபட்ட குடியாட்சி மக்களாட்சியிலும், சென்னையிலே ஒரு ராஜா எப்போதும் உண்டு என்று அந்தப் பட்டம் நின்று நிலவுகிறது! **ராஜா** அண்ணாமலை மன்றம் நிலையான சான்றாகத் தலைநகரிலே நிற்கிறது!


தமிழ்த் தொண்டு என்று எண்ணியதும் ராஜாவின் கண்முன் தோன்றிய உருவம் ரசிகமணி டி.கே.சி.! , ரசிகமணி எங்கு உண்டோ அங்கு கல்கி ரா.கி.யும் உண்டு, ராஜாஜியும் உண்டு அல்லவா! தமிழிசைக்குப் பக்கம் பக்கமாய் எழுதிக் குவித்தார் அமரர் ரா.கி! மகாநாடுகளிலேயே நேரில் வந்து கலந்துகொண்டார் ராஜாஜி.

"என் நண்பர் டிகேசி எங்கு இருக்கிறாரோ அங்கு தமிழ் இருக்கும். சத்தியம் இருக்கும். அது ஒன்றே காரணம், நான் தமிழிசை இயக்கத்தில் ஈடுபடுவதற்கு!" என்று பொது மேடையிலேயே அறிவித்தார் ராஜாஜி! கல்கிப் பத்திரிகையின் பழைய இதழ்களைப் புரட்டினால் தெரியும். ரா.கி. அவர்கள் எப்படிக் கச்சை கட்டி நின்று ஒரு பெரிய அறப்போர் தமிழுக்காக, தமிழிசைக்காக நடத்தினார் என்பது படலம் படலமாக விரியும்!

பணத்தைச் சம்பாதிப்பது ஒரு பெரிய கலை! அதைவிடப் பெரிய கலை அந்தப் பணத்தை வகையோடு செலவழிப்பது! இந்த இரண்டு கலைகளையும் விடப் பெரிய கலை மனிதர்களைச் சம்பாதிப்பது, மனிதர்களோடு வரவு செலவு செய்வது! இந்த அரிய கலைகள் அனைத்திலுமே அரசராக விளங்கியவர் தமிழ் மன்னர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்! இந்த அரசக் கலைகளுக்கு செப்டம்பர் 28, 29, 30 தேதிகளில் நூற்றாண்டு விழா நடக்கிறது! தமிழுக்குக் கிடைத்த ஒரு ராஜா என்று அந்த மன்னரின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துவோமாக!

— மீ. ப. சோமு



# கண்ணான அண்ணா

[அண்ணா நினைவில்லம் திறப்பு விழாவில் ரசித்தவை.]

**நீலம் சஞ்சீவ ரெட்டி**

● இந்த எளிய இல்லத்தில் வாழ்ந்தவர் இவ்வளவு பெரிய தமிழ் நாட்டுக்கு முதல்வராக வந்தது, ஜனநாயகம் இங்கு தழைப்பதையே குறிக்கிறது. நான் அண்ணா அளவுக்குப் படித்தவன் அல்ல. ஆயினும் சாமானியனாகிய நானே குடியரசுத் தலைவனாக வர முடியுமென்றால் அதற்கும் ஜனநாயகம்தான் காரணம்.

**பிரபுதாஸ் பட்வாரி**

● தலைமுதல் கால்வரை அண்ணா ஒரு ஜென்டில்மேன். அவர் காந்தி வழியான உண்மையையும் ஒத்துழையாமையையும் பின்பற்றியவர். எந்த விஷயத்தையும் எல்லோரும் ரசிக்கும்படியும், அனைவருக்கும் புரியும்படியும் கூறுவார். ஒருமுறை மக்கள் குடும்பக் கட்டுப்பாட்டைப் பின்பற்ற அவர் வேண்டுகோள் விடுத்தபோது சிவபெருமானை முன் உதாரணம் காட்டிப் பேசினார். சிவனுக்கு இரண்டு பிள்ளைகள்தான் என்று. அச்சமயம் அவர் தமது சொந்தக் கருத்துக்களை ஒதுக்கி வைத்துவிட்டு மக்கள் மனத்தில் நாம் கூறும் கருத்துக்கள் பதிய வேண்டும் என்பதிலேயே கண்ணாக இருந்தார். கடவுளைத் துணைக்கு அழைக்கவும் தயங்கவில்லை!

**கி. ஆ. பெ. விசுவநாதன்**

● 1930ல் திருச்சியில் மாநாடு நடந்தபோது ராமசாமி முதலியார் பேச்சை மொழிபெயர்க்கப் பலர் பயந்தனர். ஓர் இளைஞன் தைரியமாக முன்வந்தான். அவன்தான் அண்ணா. 45 நிமிடம் சரியான மொழிபெயர்ப்பு. பின் அண்ணாவுக்கு அண்ணா சாலையில் சிலை வைத்தபோது அதனை ராமசாமி முதலியார் திறந்து வைத்தது என்ன பொருத்தம்!

**எம். ஜி. ஆர்.**

● எம்.ஜி.ஆர். திரு நாரண துரைக்கண்ணனு (ஜீவா) க்கு திரு.வி.க. விருது அளித்துக் கௌரவித்துவிட்டு அண்ணாவை நினைவுகூர்ந்தார்: முதன் முதலில் என்னை அவருக்கு டி. வி. நாராயணசாமி அறிமுகப்படுத்தினார். அப்போது நான் கதர் வேட்டி கட்டி விபூதி, குங்குமம் அணிந்து சென்றேன். அவர் என்னை வரவேற்றார். என் தோற்றத்தைக் கண்டு கோபப்படவில்லை. அது அவரது சகிப்புத் தன்மையைக் காட்டுகிறது. பின்னால் நான் அவரைத் தலைவனாக, தெய்வமாக, குருவாக ஏற்றேன்.

தொகுப்பு : **சிக்கி**



✕ பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் திறப்பு விழாவில்......

✕ .....நாரண துரைக் கண்ணன் (ஜீவா)வுக்கு திரு. வி. க. விருது

● விநாயகசதுர்த்திக்கு முன்பே விநாயகரை பூஜிப்பதைப் போன்ற அட்டைப் படம் கண்டு சந்தோஷப்பட்டேன்.

மன்னார்குடி விஜயா கண்ணன்

● பிள்ளையார் சுழியை • வெறும் ''உ'' என்ற எழுத்தாகவே இவ்வளவு நாளாகக் கருதிவந்த எனக்கு காஞ்சிப் பெரியவரின் ''பிள்ளையார் சுழி'' பற்றிய கட்டுரையைக் கொடுத்து அதன் மூலம் எல்லா விவரங்களையும் அழகாகவும் தெளிவாகவும் விளக்கிய உங்களுக்கு நன்றி.

சிவகாசி இரா. சுரேஷ்குமார்

● மான்யக் கமிஷனு மானம் கெட்ட கமிஷனு தலையங்கம் படித்தேன். கல்கிக்குக் கோபம் வந்தால் எப்படி இருக்கும் என்பதை இப்போதுதான் பார்க்கிறேன். நடுநிலைமையோடு வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டீர்கள்.

மதுரை-1 ஆர். கண்ணன்




● லட்சுமி கிருஷ்ணமூர்த்தியின் அசைக்க முடியாத மன உறுதி, ஜனநாயகத்தில் அவர் கொண்டுள்ள பற்று ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாக இருந்தது, அவரது பேட்டி. இந்தப் பெண்மணிக்கு இருக்கும் துணிவும் மனோ திடமும் பா.ரா. போன்ற ஆண்மகனுக்கு இல்லாமல் போனதுபடு ஷேம்.ஷேம்.

சிதம்பரம் சிவ. ராஜகுமார்

● தமிழகத்தில் மீண்டும் தேசிய சக்திகள் ஆட்சிக்கு வரவேண்டுமானால் சிதறுண்ட காங்கிரஸ் கட்சிகள் மீண்டும்இணைய வேண்டியது அவசியம். இந்த வகையில் பா.ரா. அவர்களின் முடிவு சாலச் சிறந்தது. அவரைப் பின்பற்றி நெடுமாறனும் குமரி அனந்தனும் காங்கிரஸில் இணைய முன்வருவார்களேயானால் தமிழகம் மீண்டும் காமராஜர் அவர்களின் காலத்தைப் போன்ற பொற்காலத்தைப் பெறும்.

மக்களின் மனோபாவத்தையும் 'பிரத்தியட்ச' நிலைமையையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் 'ரப்பர் மனச்சாட்சி' என்றெல்லாம் பேசுவது கேட்பதற்கு இனிமையாக இருக்குமே தவிர ஓர் அரசியல்வாதிக்கு ஏற்றதாக இல்லை.

சென்னை 61 வி. ஜி. நேசன்

● எங்கள் மருத்துவக் கல்லூரிக் கண்காட்சியைப் பற்றி திரு டி. எஸ். கே. எழுதியிருந்த கட்டுரை அருமையிலும் அருமை. ஆனால் ஒரு சிறு மன வருத்தம். 'எலும்புக் கூடுகளின் வாத்ய இசை', 'எலும்புக் கூடுகளின் பூஜை' இவையெல்லாம் உங்கள் காசை விணடிக்க வேண்டுமென்று எங்கள் நேரத்தை விணடித்து ஏற்பாடு செய்யவில்லை. பல பிரிவுகளையும் பார்த்துக் களைத்து வரும் மக்களுக்கு ஒரு மாறுதலுக்காகத்தான் அவற்றை ஏற்பாடு செய்திருந்தோம். ஆமாம் சார், எந்த ரிப்பன், வளையல், பொரி கடலை கண்காட்சியில் இவற்றையெல்லாம் காண்பிக்கிறார்கள்?

தஞ்சை கே.வி.கே., வி.ஆர்.பி.

● கண்ணதாசனின் ''வனவாசம்'' தொடர்ச்சியாக ''மனவாசம்'' விரைவில் கல்கியில் தொடரப் போவதாகக் கவிஞர் கண்ணதாசன் அறிவித்திருக்கிறதைப் படித்தேன். அந்த நாளை விரைவில் எதிர்பார்க்கிறேன்.

உத்திரமேரூர் எம். தாமஸ்

● சமீபத்தில் நண்பர்களோடு தமிழில் வெளிவரும் வார இதழ்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். எல்லோருமே ஒரு மனதாகத் தற்போதைய 'கல்கி' இதழ்தான் உருவத்திலும், அமைப்பிலும் உள்ளிருக்கும் விஷயங்களிலும் தனித்து நிற்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நட்சத்திர வடிவம் பரிசுத் திட்டம்; எம். ஜி. ஆர். அருகில் இருப்பது யார்? போன்ற போட்டிகள் எதற்கு? அனைவரும் கலந்துகொள்ளும்படியான அறிவு பூர்வமான போட்டி வைத்துப் பரிசளித்தால் என்ன?

கல்பாக்கம் சி. பி. ராஜு

[வாசகர்கள் பங்குபெற அறிவுபூர்வமான போட்டிகளையும் அவ்வப்போது அறிவித்துத்தானே வருகிறோம். அடுத்த வாரம்கூட ஓர் அறிவிப்பு வருகிறது. -ஆர்.]

● அவன் — அவள் — ஆடு', 'மழலைப் பொட்டலம்' ஆகியவை ரசிக்கும்படி உள்ளன. இதுபோன்று தொடர்ந்து வெளியிடுங்கள். இப்பகுதி வாசகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெறும்.

பட்டுக்கோட்டை சே. ராஜேஸ்வரன்

● திரைப்படம் விமர்சனம் செய்துள்ள நளினி சாஸ்திரியின் பாணி நன்றாக இருக்கிறது. புண்படுத்தாத ஆனால் நறுக்கென்று சொல்லும் ஸ்டைலை வரவேற்கலாம். கச்சிதமான நடை, ஆழமான கருத்துக்கள்.

சென்னை-17 குயிலி ராஜேஸ்வரி



✖ மரோ சரித்ரா



✖ தி லேடி வானிஷஸ்

# • வசந்த அழைப்புகள்! • மரோ சரித்ரா! • குர்பானி! • தி லேடி வானிஷஸ்!

நீங்கள் பார்த்த ● வசந்த அழைப்புகள் ● குர்பானி ● மரோ சரித்ரா ● தி லேடி வானிஷஸ் ஆகிய படங்கள் பற்றிய கீழ்க்கண்ட கேள்விகளுக்கான உங்கள் பதிலைக் கடைசியில் கொடுக்கப்பட்ட விடைகளுடன் சரி பார்த்துக் கொள்ளுங்கள்; உங்கள் விமர்சனமும் என்னுடையதும் ஒத்துப் போனால் மகிழ்ச்சி மாறுபட்டால் We will agree to disagree!

**1. படம்**

(அ) தமிழ்
(ஆ) மலையாளம்
(இ) இந்தி
(ஈ) ஆங்கிலம்
(உ) தெலுங்கு

**2. நடிகர்கள்**

(அ) நடிக்கிறார்கள்
(ஆ) வாழ்கிறார்கள்
(இ) மிகைக்கிறார்கள்
(ஈ) வந்து போகிறார்கள்
(உ) மேற்கண்ட எதையும் செய்வதில்லை.

**3. நடிகைகள்**

(அ) நடித்துக் காட்டுகிறார்கள்
(ஆ) காட்டி நடிக்கிறார்கள்
(இ) பாத்திரமாய் மாறுகிறார்கள்
(ஈ) நடித்துப் பார்க்கிறார்கள்
(உ) பார்த்து நடிக்கிறார்கள்

**4. நகைச்சுவைப் பகுதிகள்**

(அ) அபத்தம்
(ஆ) விரசம்
(இ) சிரிப்பூட்டுகின்றன
(ஈ) வெறுப்பூட்டுகின்றன
(உ) படத்துடன் சம்பந்தமில்லை.

**5. குறிப்பாக**

(அ) தரமான ஒலிப்பதிவு
(ஆ) தரமான ஒளிப்பதிவு
(இ) அ. ஆ இரண்டும் சரி
(ஈ) அ. ஆ இரண்டும் தவறு.

**6. இசையமைப்பாளர்**

(அ) இசை தருகிறார்
(ஆ) ஓசை எழுப்புகிறார்
(இ) இனிய பாடல் தருகிறார்
(ஈ) வழக்கம்போல் இருக்கிறார்.

**7. படத்தில் குறிப்பிடும் அம்சம்**

(அ) நடிப்பு
(ஆ) கதை
(இ) கேமரா
(ஈ) டைரக்‌ஷன்
(உ) ஒன்றுமேயில்லை.

**8. டைரக்டர்**

(அ) சாதிக்கிறார்
(ஆ) சோதிக்கிறார்
(இ) இருக்கிறார்
(ஈ) எங்கே?
(உ) மதில்மேல் பூனை

**9. மொத்தத்தில்**

(அ) கலைப்படம்
(ஆ) தழுவல் படம்
(இ) ஜனரஞ்சகப் படம்
(ஈ) பேசும் படம்
(உ) பப்படம்.

— நளினி சாஸ்திரி




✖ குர்பானி




✖ வசந்த அழைப்புகள்

60ம் பக்கம் பார்க்க



அரசுத் துறை நிறுவனங்கள்
இடுப்பை விட்டு இறங்கி நீயாவே நடக்கப் பழகிக் கணும், கண்ணு!
மக்கள்
மாத்தேன் போ!...
ஆந்திரப் பகுதிகளில் வெள்ளம்! — செய்தி
முதல்வர் பதவி
ஆந்திர இ. காங்கிரசில் குழப்பம்
வேலைவாய்ப்பு
புரட்சித்தலைவர் தண்ணீர்ப் பந்தல்
வேலையில்லாப் பட்டதாரிகள்
உதவித் தொகை
இப்போதைக்கு தாக சாந்தி பண்ணிக்குங்க!...

1980 செப்டம்பர் 28
ரௌத்திரி புரட்டாசி 12
மலர்: 39 இதழ்: 9



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

# மதுவிலக்கில் மதிமயக்கம்

சாந்திநிகேதனில் ஒரு மதுக்கடை முதலாளி அண்மையில் பேரதிர்ச்சிக்கு உள்ளானார்! ஹரிஜனப் பெண்மணிகள் பலர் ஒரு கோஷ்டியாக வந்து அவர் கடையில் புகுந்து சகலத்தையும் கொட்டிக் கவிழ்த்து, உடைத்து நொறுக்கினார்கள்! தங்கள் கணவன்மார்கள் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் அபகரித்துக் கொண்டு வெறுங் கையுடன் வீட்டுக்கு அனுப்பும் மதுக்கடை மீது அவர்களுக்கு அவ்வளவு கோபம்!

அந்த மாதர்களின் செய்கை நியாயமற்றதாக இருக்கலாம்; ஆனால் அவர்கள் கோபம் நியாயமானது என்பதை உணர்ந்து, அரசு நாடு தழுவிய முறையில் மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டும். கூடவே மதுவினால் விளையும் தீமைகள் பற்றிப் பிரசாரமும் அதிகரிக்க வேண்டும். ஆனால் நடப்பது வேறாக இருக்கிறது. தமிழகத்தில் பெர்மிட் பெறுவது தண்ணீர் பட்ட பாடாகிவிட்டது. உத்தரப் பிரதேசத்தில் மதுவிலக்கை ரத்து செய்தாகிவிட்டது. வேறு பல மாநிலங்களில் மதுவிலக்கு அமலாவது பற்றிய பேச்சே இல்லை.

பிரதமர் இவற்றைப் பார்த்துக் கண்டிப்பதற்குப் பதில் கண்துடைப்பாகப் பேசுகிறார். அவர் 'தொனி' மாறிவிட்டது. சிலகாலம் முன்புதான் ''பணக்காரர்கள் குடித்துச் சாவேன் என்றால் சாகட்டும்; நமக்கு அக்கறை இல்லை; நம் கவலையெல்லாம் கோடானு கோடி ஏழை பாழைகளைப் பற்றித்தான்'' என்று நாடு தழுவிய நோக்கில் தீவிர மதுவிலக்குக்கு ஆதரவாக அழுத்தமாகப் பேசியவர் இன்று, ''மதுவிலக்கு எங்குமே வெற்றிபெறவில்லை; மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்துவதைவிட மிதமாகக் குடிக்குமாறு பிரசாரம் செய்வது பலனளிக்கலாம்'' என்று சொல்கிறார். 'ஏன் இந்த மயக்கம், தடுமாற்றம்?' என்று திகைக்கிறோம் நாம்.

'மிதமாகக் குடியுங்கள்' என்ற கோரிக்கைப் பிரசாரம் உலகில் எந்தத் தேசத்திலும் என்றைக்குமே வெற்றி பெற்றதில்லை. மாறாக மேனாடுகளில் குடிப் பழக்கம் மிக அதிகமாகிவிட்டது என்பதால் பயந்து, உலக ஆரோக்கிய நிறுவனமே (WHO) ஒரு நிபுணர் கமிட்டியை அண்மையில் அமைத்து மதுவினால் சரீரத்துக்கும் சமூகத்துக்கும் விளையும் கேடுகளை, பொருளாதார — சட்ட ஒழுங்குப் பிரச்னைகளை ஆராயச் சொல்லி இருக்கிறது.

'மதுவிலக்கு தோல்வி அடைந்துவிட்டது' என்று கூச்சல் போடுகிறவர்கள் ஏழை மக்களின் நலனைக் கவனியாத உள்நோக்கமுடைய சுயநலமிகள். இவர்கள் 'மதுவிலக்கினால் மாநில அரசுக்கு வருவாய் குறைகிறது' என்று மாயாவாதம் செய்கிறார்கள். இது பற்றி 1964லேயே ஜஸ்டிஸ் டேக்சந்த் ஆராய்ந்து மத்திய அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார். 'மதுவுக்குச் செலவாகும் பணத்தை மக்கள் வேறு விதங்களில் செலவிடும்போது அரசுக்குப் பலவித வரிகள் மூலம் அதே வருமானம் கிட்டுகிறது; அல்லது அப்பணத்தை மக்கள் சேமிப்பு செய்தாலும் தொழில் வளர்ச்சி — பொருளாதாரத்துக்கு நல்லதே' என்று இவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

'மதுவிலக்கினால் கள்ளச் சாராய வியாபாரம் நடக்கிறது' என்பது மற்றொரு அபத்த வாதம். 'மதுவிலக்கு ரத்தானால் கள்ளச் சாராயம் மேலும் அதிகரிக்குமே யன்றி குறையாது; போலீஸில் லஞ்ச ஊழலும் பெருகுமேயன்றி மட்டுப்படாது' என்று புள்ளி விவரங்களுடன் சுசிலா நய்யார் நிரூபிக்கிறார். லைசென்ஸ் பெற்ற சாராயம் என்ற போர்வையில் கள்ளச் சாராயத்தை விற்பார்கள். வரி தராமல் ஏய்ப்பார்கள். டில்லியில் உள்ள மூன்று கள்ளுக் கடைகள் அனுமதிக்கப்பட்ட

கள்ளை விற்றால் 42 லட்சம் சம்பாதிக்கும் என்று அரசு மதிப்பிட்டது. ஆனால் அரசுக்கு ஏலத்தில் கிடைத்ததோ 70 லட்சம்! இது எதைக் காட்டுகிறது?

நமது அரசியல் சாசனத்தில் மதுவிலக்கு, வழிகாட்டும் கொள்கைகளில் ஒன்றாக இருக்கிறது. வழிகாட்டும் கொள்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக, சாசனம் உறுதிகூறும் மக்களின் அடிப்படைசுதந்திரங்கள் பலவற்றை ரத்து செய்யவோ, கட்டுப்படுத்தவோ தயாராக உள்ள இந்த அரசு, அதே வழிகாட்டும் கொள்கைக்கு நேர் விரோதமாகக் குடிப்பதற்கு மட்டும் மக்களுக்குப் பூரண சுதந்திரம் வழங்கத் தயாராயிருப்பது விந்தையிலும் விந்தை!

---







# இவர்களைத் தேச உடைமையாக்குங்கள்!

தொழில், வியாபாரம் முதலியன அரசுடைமையாவதற்கு நாம் எதிரியே. ஆயினும் இந்த நால்வரையும் நாட்டுடைமையாக்குங்கள் என்று தமிழக அரசுக்குத் தயங்காமல் சிபாரிசு செய்கிறோம்!

காரணமில்லாமலா? கேளுங்கள்!

பாரதியார் சங்கத் தலைவர் என். மகாலிங்கம் இந்த ஆண்டு செப்டம்பர், 10, 11ல் பாரதி விழா எடுத்தபோது நன்கு யோசித்து ஒரு காரியம் செய்தார். பாரதியாரைப் பற்றியும், அவரது கவிதைகளைப் பற்றியும் எவ்வளவுதான் பேசினாலும் போதாது. பாரதியாரின் பாடல்கள் பாடப்பட வேண்டும்; மக்களின் காதுகளில், மனங்களில் அவை ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று எண்ணினார். இதை விடச் சிறந்த விதமாக பாரதியிடம் இன்றைய இளைஞர் சமுதாயத்துக்குப் பற்றுதல் ஏற்படும்படி செய்ய முடியாது. இதைவிடச் சிறப்பாகப் பாரதியின் நினைவை நாம் போற்றி அஞ்சலி செய்யவும் முடியாது. சொற்பொழிவுகளும் ஞாபகார்த்த மண்டபங்களும் அவர் பெயரால் அரங்குகளும் அவசியம்தான். ஆனால் இவையெல்லாம் விட பாரதி பாடல்களை நல்ல முறையில் பாடிக் கேட்கும்போதுதான் அவரது கவி நயத்தை மக்கள் புரிந்துகொள்வதுடன், அவர்கள் உள்ளங்களில் தேசப் பற்றும் மொழிப் பற்றும் இறையுணர்வும் நல்லொழுக்கமும் வளரும்.

இந்த விதமாகச் சிந்தித்துத்தான் பாரதி விழா முடிவில் அரை மணி நேரம் இசை நிகழ்ச்சி தயாரித்துத் தருமாறு டி. கே. எஸ். கலைவாணனிடம் கூறினார் பாரதியார் சங்கச் செயலாளர் பகீரதன். பாரதி அன்பர்கள் வீடு திரும்பும்போது இன்பத் தேனைப் பாய்ந்த செந்தமிழ்ப் பாடல்களைக் கேட்ட மனநிறைவுடன் சென்றார்கள்.

அன்று பாடியவர்களைச் சற்றுப் பார்ப்போம்:

முதலில் டி.கே.எஸ். கலைவாணன். டி.கே. ஷண்முகம் அவர்களின் குமாரர். கணீரென்ற வெண்கலக் குரல்! அதில் தொனிக்கும் கம்பீரம்! பாய்கின்ற உணர்ச்சி! ''கொட்டடா! கொட்டடா! ஜெயபேரிகை கொட்டடா!'' என்று பாடியபோது என்னமாய் மெய் சிலிர்த்தது!

கலைவாணன் பி.எஸ்ஸி. பட்டம் பெற்று ஸ்டேட் பாங்கில் அதிகாரியாகப் பணியாற்றுகிறார். மெல்லிசைக் குழு ஒன்று அமைத்து நிகழ்ச்சிகளும் நடத்தி வருகிறார்.





அடுத்து செல்வி எம். பிரமீளா. கொழும்புவில் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் அரங்கேறிய இவர் பின்னர் சென்னை வந்து பாட்டிலும் அதன் 'தியரி'யிலும் தேர்ச்சி பெற்றார். முசிறியிடம பயிலும் பாக்கி


✖ கே. எஸ். கலைவாணன்

✖ மனோன்மணி

✖ ராஜ்குமார்

✖ பிரமீளா






# மாதாந்திரப் பரிசுத் திட்டம் (செப்டம்பர்)

நான்காவது கடைசி போட்டோ குவிஸ் இது.

மரத்தின்மேல் விளையாட்டு வீடு கட்டிக்கொண்டு அமர்ந்திருக்கும் குழந்தைகள் இருவரும் பெரும் புள்ளி ஒருவரின் மகனும் பேரனும் ஆவர். அந்தப் பெரும் புள்ளி யார்?

மார்கரெட் தாட்சர்? கார்டர்? மோஷே தயான்? பிரஷ்னேவ்?

நான்கு குவிஸ்களையும் கத்தரித்து எடுத்து விடைகளை அது அதிலேயே எழுதி நான்கையும் ஒன்றாக ''கல்கி மாதாந்திர பரிசுத் திட்டம், தபால் பெட்டி எண் 3159, சென்னை 32'' என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

நான்கு விடைகளையும் சரியாக எழுதியவர்களுக்கு மூன்று மாத கல்கி இலவசம். அவர்களில் ஒருவர் ரூ. 1000 பரிசு பெறக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார். முடிவு தேதி அக்டோபர் 22.

என் பெயர் ..........................................

விலாசம் ..........................................

..........................................

..........................................

கையெழுத்து ..........................................

---

யம் அடைந்தவர். இந்தியத் தத்துவத்திலும் கர்நாடக இசையிலும் டபுள் எம். ஏ. பட்டங்கள் பெற்ற பின் இப்போது டாக்டரேட்டுக்காக ஹரிகதா காலட்சேபம் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார். வசதியான சாரீர அமைப்புக் கொண்ட பிரமீளா சின்னஞ் சிறு கிளியே பாடியபோது இனிமை கொஞ்சியது.

திருமதி மனோன்மணி சங்கர், டி.கே. ஷண்முகம் அவர்களின் புதல்வி பி. எஸ்ஸி. பட்டதாரி மேல் ஸ்தாயியில் பாடுவதற்கு வாகான குரல் அமைப்பு. நல்லதோர் வீணை செய்தே என்ற பாடலை வெகு உருக்கமாகப் பாடினார்.

கடைசியாக வி. ராஜ்குமார். ஓர் எலெக்ட்ரானிக்ஸ் இன்ஜினியர். கர்நாடக சங்கீதம், லலித சங்கீதம், மெல்லிசை மூன்றிலும் வானொலியில் முதல் பரிசுகளைத் தட்டிச் சென்றவர். பாரதி விழாவில் இவர் பாட்டு அவையோரை வெகுவாகக் கவர்ந்ததில் வியப்பென்ன? இவர் பாரதியின் கொள்ளுப் பேரன் என்பது நமக்குப் பெருமை தரும் தனிச் சிறப்பு.

நால்வரையும் இந்த பாரதி நூற்றாண்டினையொட்டி 3 அல்லது 4 வருஷங்களுக்குத் தமிழக அரசு சுவீகரித்துக்கொண்டு விட வேண்டும். அவர்களுக்கு ஒரு வாத்தியக் கோஷ்டியை அளிப்பதுடன் எல்லாருமாக எம். எஸ். வி. போன்ற ஒரு சிறந்த இசை அமைப்பாளரிடம் சில காலம் பயில வசதி செய்து தரவேண்டும். பாரதியின் சுமார் 50—60 பாடல்களையும் பாரதியைப் பற்றி எழுதப்பெற்ற சில முக்கியமான பாடல்களையும் மரபு மாறாமலும் கவர்ச்சிகரமாகவும் இனிய எளிய மெட்டுக்களில் அமைத்துப் பாடிப் பழகிக்கொண்ட பின் இவர்களை ஊர் ஊராக அனுப்ப வேண்டும். பயணத் திட்டம் வகுத்து அந்த அந்த ஊர்களுக்கு அரசு சுற்றறிக்கையும் அனுப்பிவிட வேண்டும். பள்ளிகளில், கல்லூரிகளில் பொதுமக்களுக்காக அரங்குகளில் எல்லாம் இவர்களது பாரதி பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும்.

போதிய அளவு ஊதியம் தருவதுடன் இவர்கள் திரும்பி வரும்போது இன்று இவர்கள் செய்து கொண்டிருக்கும் உத்தியோகத்தைத் தொடரலாம் என்ற வாக்குறுதியையும் அளித்து அனுப்ப வேண்டும்.

வட மாநிலங்களுக்கும் இவர்கள் போகலாம். இவர்கள் பாடுகின்ற பாரதி பாடல்களின் ஆங்கில, ஹிந்தி மொழிபெயர்ப்புக்கள் அடங்கிய பிரசுரங்களுடன் செல்ல வேண்டும். இங்கே ஹிந்தி எதிர்ப்பு தேவையில்லை.

இதைத் தமிழக அரசு நிறைவேற்றுவது பாரதிக்கு அல்ல பாரதத்துக்குச் செய்யும் மிகச் சிறந்த சேவையாகும்.

**- குட்டி கிருஷ்ணன்**

VANDEVI

பம்பாய் உயர்தர கூட்டு
பெருங்காய பவுடர்!

உபயோகிப்பது மிகவும் எளிதானது
இதை உபயோகிப்பதால்
10% சேமிப்பு கிடைக்கிறது

SYMBOL OF QUALITY

எப்படி என்றால் 10% தண்ணீர், கட்டி கூட்டு பெருங்காயத்தில் கலந்துள்ளது
பவுடராக இருப்பதால் கெட்டு போவதில்லை
ஆகவே உங்களுடைய தினசரி சமையல்களுக்கு

பம்பாய்
வன்தேவி



பிராண்டு

VANDEVI
COMPOUNDED
ASAFOETIDA


உயர்தர கூட்டு பெருங்காய பவுடரையே உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்கள் :
M/s V. N. தக்கர் ஹிங்வாலா அண்டு கம்பெனி
69, யூசுப் மெஹர் அலி ரோடு, பம்பாய்-3 PIN : 400003

தமிழ்நாடு முழுமைக்கும் விநியோகஸ்தர்கள்:
M/s ஜாப்ஸ் கார்னர்
159, T. H. S. Road, கும்பகோணம், PIN: 612001 Phone Nos: 608 & 1108
(Branches: சென்னை-88, திருச்சி-17, கோவை-1)

ARC பார்சல் சர்வீஸ்

உங்களது சாமான்களை விரைவாக
பாதுகாப்புடன் குறைந்த செலவில்
தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளா
கர்நாடகா மாநிலங்கள் மற்றும்
அகமதாபாத் பம்பாய் நகரங்களில்
உள்ள எங்களது புக்கிங் மற்றும்
டெலிவரி நிலையங்கள் மூலம்
அனுப்பி வைக்கதொடர்புகொள்ளவும்



ARC பார்சல் சர்வீஸ்

(Props.: ஆனைமலைஸ் ஏஜன்ஸீஸ்)

H.O: ரேஸ் கோர்ஸ், கோயமுத்தூர்-641018.
போன்: 36258, 36259 & 36250 தந்தி "CARGOKING"
(தபால் பெட்டி எண்: 3877, டெலக்ஸ்: 855-330-ARC-IN)

VIEMEL

எதிர்க்கும் சக்தியைத் தாங்கள் பாதுகாத்துக் கொண்டிருப்பதை அவ்வப்போது ஆட்சியாளருக்கு உணர்த்தி மக்கள் எச்சரிக்கவில்லையானால் அத்தேசத்தில் ஜனநாயக சுதந்திரங்கள் எவ்வாறு பாதுகாக்கப்படும்?

— ஜெஃபர்ஸன்

# சட்டமன்றத்தில் புது முகங்கள்





✖ க. பாலசுப்ரமணியன் ✖ க. கோபாலகிருஷ்ணன்

**க. பாலசுப்பிரமணியன்**
(அ.இ.அ.தி.மு.க.) சீர்காழி தொகுதி

''1975, மார்ச் 31, தஞ்சை மாவட்ட நகர அமைப்பாளர்கள் கூட்டத்தில், என்னை ஒன்றிய அமைப்பாளர் பதவியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று புரட்சித் தலைவரை நான் கேட்க, 'முறையாகக் கட்சியை நடத்துகிறவரை எப்படி என்னால் ஒதுக்க முடியும்?' என்று அவர் திருப்பிக் கேட்டு என்னைத் தொடர்ந்து செயல்படும்படி சொன்னார். டாக்டர் ஹண்டே. You have pocketed our leader. என்று என்னைப் பாராட்டியது என்னால் மறக்கமுடியாத அனுபவம்'' என்று கூறுகிறார் இந்த பி.ஏ., பி.எல். பாலுவுக்குக் கால்பந்தாட்டம் என்றால் இன்னும் ஒரு துடிப்பு.

**க. கோபாலகிருஷ்ணன்**
(அ.இ.அ.தி.மு.க.) பெரியகுளம் தொகுதி

செஸ் ஆட்டத்தில் தம்மை மறப்பார் இந்த வழக்கறிஞர்.

கொடைக்கானலிலும் பின்னர் அமெரிக்கன் கல்லூரியிலும் கல்வி கற்று சட்டப் படிப்புப் படிக்கும்போதே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டவர். கல்லூரி நாட்களில் தமிழ்ப் பேரவைச் செயலாளராய் இருந்தவர்.

**டி. கே. நல்லப்பன்**
(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)
பெருந்துறை தொகுதி

சிறு விவசாய குடும்பத்தில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை முடித்து அதற்கு மேல் படிப்பைத் தொடர முடியாத காரணத்தால் நெசவுத் தொழிலில் ஈடுபட்டார்.

கட்சியின் ஆதரவாளராக வேலை செய்து வட்டாரக் கமிட்டி உறுப்பினராகித் தொடர்ந்து வட்டாரக் கமிட்டி செயலாளராக உயர்ந்தார்.

✖ எஸ். முத்துகிருஷ்ணன் ✖ ஜே. ஹேமச்சந்திரன்






**வி. பாலகிருஷ்ணன்**
(அ.இ.அ.தி.மு.க.) சிவகாசி தொகுதி

கல்லூரியில் படிக்கும்போது நடந்த தி.மு.க. மாநாட்டில் கல்லூரி முதல்வரின் தடை உத்தரவை மீறிக்கலந்துகொண்டதால் இவர் கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்டார்.

''என் தொகுதியில்தீப்பெட்டித் தொழில் முன்னேற்றம் அடையவும், சாலை, மற்றும் குடிநீர்ப் பிரச்னைகள் தீரவும் பாடுபடுவேன்'' என்று சொல்லும் இவர் விவசாய நிபுணர்.

**எஸ். முத்துகிருஷ்ணன்**
(அ.இ.அ.தி.மு.க.) கன்னியாகுமரி தொகுதி

அரசியலில் ஈடுபடுமுன் மின் வாரியத்தில் எழுத்தராகவும் பின்பு தலைமை எழுத்தராகவும் பதின்மூன்று வருடங்கள் பணிபுரிந்திருக்கிறார். ''கன்யாகுமரி மீனவர் வாழ்க்கை நிலை உயரவும், தோவாளைச் 'சானலை' சீர்படுத்தவும் உழைப்பேன்'' என்கிறார்.





✖ டி. கே. நல்லப்பன் ✖ வி. பாலகிருஷ்ணன்

பேட்டி: ''சிக்கி''

**ஜே. ஹேமச்சந்திரன்**
(இடது கம்யூனிஸ்ட்) திருவட்டார் தொகுதி

வழக்கறிஞர். தமிழ்நாடு சட்ட மன்ற ஜனதா கட்சியின் முன்னாள் தலைவர் திரு ஜேம்ஸிடம் இருமுறை போட்டியிட்டுத் தோல்வியுற்ற இவர் மூன்றும் முறையாக மும்முனைப் போட்டியில் அவரைத் தோற்கடித்துள்ளார். ஹேமச்சந்திரன் குமரி மாவட்டத் தொழிற் சங்கத் தலைவரும் ஆவார். 45 வயது ஆகியும் திருமணம் ஆகாதவர்.

—வி. பகவதி

# வேலை கிடைத்துவிடும்!

**போட்டிக் கதை 4**

இன்றைக்கு எப்படியும் செய்து பார்த்து விடுவது என்ற முடிவுக்கு வந்தேன். மேலும் அந்த நிலையிலும் இருந்தேன். சரியாக இருபத்தைந்து பைசாவை எடுத்துக்கொண்டு தெரு முனையில் உள்ள கடைக்குச் சென்றேன். அந்தக் கடைதான் எனக்கு வாடிக்கையான கடை. சிகரெட்டிலிருந்து சினிமாப் பத்திரிகை வரை கடனுக்கு வாங்கும் அளவுக்குப் பழக்கம். இருபத்தைந்து பைசாவை அவரிடம் நீட்டினேன். அவர் நிமிர்ந்து என் முகத்தைப் பார்த்தார். குறிப்பறிந்து எனக்கு வேண்டியதை எடுத்துத் தந்தார். நான் அதை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தேன்.

பெரிய கண்ணாடியின் முன் செய்து பார்த்தால் தேவலாம் என்று தோன்றியது. கண்ணாடி முன் நின்று கொண்டேன். கவரைப் பிரித்து ஒருவித பயத்துடன் அதை எடுத்துப் பொருத்தினேன். ஒரு கையால் முகத்தைப் பிடித்து, நடுங்கும் மறு கையால் மெதுவாக இழுத்தேன். அவ்வளவுதான் 'சரக்'கென்று வெட்டுப்பட்டு ரத்தம் வந்தது. இந்தத் தொல்லைக்குத்தான் நான் சலூனுக்குச் சென்றுவிடுவது வழக்கம். ஐம்பது பைசாக் கொடுத்தாலும் சுகமாக ஃபேன் காற்றில் படுத்துக் கொண்டு நிம்மதியாக ஷேவிங் பண்ணிக்கலாம். ஆனால் இன்றைக்கு இண்டர்வியூவுக்குப் போகவேண்டும். காலை நேரத்தில் சலூனில் ஒரே கூட்டமாக இருக்கும்; நேரமாகிவிடும். ஆகையால்தான் செல்ஃப் ஷேவிங்குக்குத் துணிந்தேன்.

பல வெட்டுக்களுடன் ஒரு வார வளர்ச்சியை வழித்தேன். பிறகு மீசையைக் குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாக, சுத்தமாக எடுத்துவிட்டேன். இப்பொழுது என்னைப் பார்ப்பதற்கு ஹிந்திப் பட ஹீரோ மாதிரி இருந்தது. வெட்டுப்பட்டு வரும் ரத்தத்தைக் கையினால் துடைத்தேன். ஒரே எரிச்சல். இன்றைக்காவது அவசியம் கைவியைத் துவைத்துவிட வேண்டும் என்று தீர்மானித்தேன்.

பெட்டிக்குள்ளிருந்து ஒரு பேண்ட், சர்ட்டை எடுத்தேன். ஒரே பேண்ட், சர்ட் என்றும் சொல்லலாம். நான் எங்கு சென்றாலும் அதையே அணிந்து அயர்ன் பண்ணிப் போட்டுச் செல்வேன். போருக்குச் செல்பவனுக்கு வீரத் திலகம் வைத்து, வாழ்த்தி அனுப்புவது போல் என்னையும் அனுப்பி வைத்தார்கள்.

பட்டாபிராம் ஸ்டேஷன்.

ரயில் வர இன்னும் தொள்ளாயிரம் விநாடிகள் உள்ளன. அதற்குள் என்னைப் பற்றிச் சுருக்கமாக உங்களுக்குச் சொல்கிறேன்.

என் பேரு சேகர். எஸ். எஸ். எல். சி, முதல் முயற்சியிலேயே பாஸ்பண்ணிட்டேன். அந்தப் பெருமைதான். மார்க் எவ்வளவுன்னு கேக்காதிங்க; அசிங்கமா இருக்கும். நான் வாங்கியிருக்கிற மொத்த மார்க்கை ஒவ்வொருத்தன் மூணு சப்ஜெக்ட்லே வாங்கியிருக்கானுங்க. வருத்தப்பட்டு என்ன பண்றது?

'ஹிந்து'வில் வந்த விளம்பரத்தைப் பார்த்து அப்ளிகேஷன் போட்டிருந்தேன். அந்தப் பிரைவேட் கம்பெனி பல்லாவரத்தில் இருக்கிறது. அதற்கான இண்டர்வியூவுக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறேன்.

பிளாட்பாரத்தில் சலசலப்பு உண்டாகியது

ஓ! ரயில் வந்து கொண்டிருக்கிறது.

ஒரு கம்பார்ட்மெண்டில் தாவி இடம் பிடித்து அமர்ந்தேன். மெடிகல் காலேஜிலேயே சீட் வாங்கிவிட்டது போல் மகிழ்ச்சி. அங்கு அமர்ந்திருந்தவர்களின் மீது பார்வையை ஓட விட்டேன். என் பார்வை ஓரிடத்தை விட்டு நகர மறுத்தது. அங்கே ஜன்னலின் ஓரத்தில் ஒருத்தி. எலுமிச்சை நிறம். நிறத்துக்கேற்றாற்போல் 'பெல் எல்லோ' கலரில் பிளவுசும் (லோ கட்), சாரியும் (அதுவும் லோ ஹிப்தான்) அணிந்திருந்தாள்.

எனது பார்வையை சினிமா கேமிராவைப் போல் காலிலிருந்து (ம்ஹூம், தெரியவில்லை) கூந்தல்வரை 'இஞ்ச் பை இஞ்ச்சாக சாரி, சாரி, 'மி.மீ. பை மி.மீ.யாகப் பார்த்தேன். ரசித்தேன் என்றும் சொல்லலாம்.

**ராஜேஸ்வரன்**

**அறிமுக எழுத்தாளர்**

எனக்கு வயது 26. அதிராம்பட்டினம் கல்லூரியில் படித்து, 74ம் ஆண்டு பி. எஸ் ஸி. (கெமிஸ்ட்ரி) பட்டம் பெற்றேன். பிறகு மதுரை காமராஜ் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வித் துறையில் சேர்ந்து எம். ஏ. (ஆங்கில இலக்கியம்) பயின்றேன், இன்னும் முடிக்கவில்லை. இன்னும் வேலை தேடிக் கொண்டிருக்கின்றேன்.



எழுத்துலகில் இடம் பிடிக்க இதுவரை நடந்துவந்த பாதையிலே மேடுகள்-சில; பள்ளங்கள்-பல. எடுத்த முயற்சியிலே பலமுறை தளர்ச்சி, சில முறை மகிழ்ச்சி! நான் எழுதிய புதுக்கவிதைகள் 'அலிபாபா'வில் இடம் பெற்றுள்ளன. கவிதையில் அதிக நாட்டம். எழுத வரும்-படிக்கப் பிடிக்கும். சே. ராஜேஸ்வரன்

ரயில் ஆவடியில் நின்று மீண்டும் ஓடத் தொடங்கியது.

என் மனத்தில் சலனம் உண்டாகியது. பின் சபலமாகியது. 'சென்ட்ரல் போக எப்படியும் முக்கால் மணி நேரம் இருக்கு. அதற்குள் எப்படியும் கேட்டுவிட வேண்டும்' என்ற முடிவுக்கு வந்தேன். நாம் கேட்ட பின் அவன் ஏதாவது சொல்லிவிட்டால் அசிங்கமாகப் போய்விடுமே என்று யோசித்தேன். முடிவு நன்றாக இல்லாவிட்டாலும் 'பேசினோம்' என்ற திருப்தியாவது மிஞ்சட்டுமே என்ற அல்ப ஆசையில், கேட்பதற்குத் தொண்டையைக் கனைத்துக் கொண்டேன். அவன் என்னைப் பார்க்கும்போது வார்த்தைகள் வராமற் போகவே, ஜாடையிலேயே கேட்டேன். நான் எதிர்பார்த்தது போல் எதுவும் நடக்காமல் நான் நினைத்தது நிறைவேறியது.

அப்பாடி! இந்த வாரம் காசு கொடுத்து 'கல்கி' வாங்கிப் படிக்க வேண்டியதில்லை. ஓ.சி.யிலேயே படித்துவிடலாம் என்ற வெற்றிக் களிப்பில் புத்தகத்தில் மூழ்கினேன்.

சென்ட்ரல் வந்தது. 'கல்கி'யுடன் தாங்ஸையும் சேர்த்து அவனிடம் கொடுத்துவிட்டு விரைந்து வெளியில் வந்தேன்.

சென்ட்ரல் ஸ்டேஷன் டு மூர் மார்க்கெட் வரையில் மக்கள் வெள்ளத்தில் சிக்கி, எதிர் நீச்சல் போட்டு, சுரங்கப் பாதையில் இறங்கி ஒரு வழியாக பார்க் ஸ்டேஷனுக்கு வந்தேன்.

மின்சார ரயிலில் தொத்திக் கொண்டேன். அந்தக் கூட்டத்திலும் நேரத்தை வீணாக்காமல் சிலர் வார இதழ், நாவல்கள், நாளிதழ்களைப் படித்துக் கொண்டு வந்தனர்.

**ப**ல்லாவரம்.

இன்டர்வியூ நடக்கும் இடத்துக்கு வந்தேன். அங்கு எனக்கு முன் ஏராளக் கூட்டம். அவரவரும் ஏதேதோ புத்தகத்தை வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருந்தார்கள்.

நான் ஒன்றும் படிக்கவில்லை. கேள்விகளுக்குத் தெரிந்தால் பதில் சொல்வோம். தெரியாவிட்டால், முதல் கேள்விக்கு ''சாரி, சார்! ஐ டோன்ட் நோ'' என்போம். அடுத்த கேள்விக்கு ''வெரி சாரி, சார்! ஐ ஹேவ் ஃபர்காட்டன்'' என்போம். அதற்கும் அடுத்த கேள்விக்கு, ''எக்ஸ்ட்ரீம்லி சாரி, சார்!'' என்போம். இதுக்கு மேலேயும் நம்மைக் கேள்வி கேட்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் அமர்ந்திருந்தேன்.

எனது முறை வந்தது.

உள்ளே சென்றேன்.

மூன்று பேர்கள் அமர்ந்திருந்தனர்.

''வணக்கம் சார்.''

''டேக் யுவர் ஸீட்.''

''தாங்க்ஸ்'' — அமர்ந்தேன்.

என்னைப் பற்றிய சில கேள்விகளைக் கேட்டுவிட்டு, ''இந்தியாவின் நுழைவுவாயில் எது?'' என்றார் ஒருவர்.

எனக்கு பம்பாயா, காஷ்மீரா என்று சந்தேகம். பிறகு ஒரு முடிவுக்கு வந்து, ''காஷ்மீர்'' என்றேன்.

அடுத்ததாக ஒருவர் ''மலைவாசஸ்தலங்களில் ராணி எது?'' என்றார்.

மலையில் வசிக்கக் கூடியதில் ராணி எது பெண் சிங்கமா, பெண் குரங்கா? இந்தத் தலைப்பின் கீழ் ஒரு பட்டிமன்றத்தையே என் மனத்துள் நிகழ்த்தி, ''குரங்கு'' என்றேன்.

''இந்தியாவின் முதல் குடிமகன் யார்''— இது மூன்றாமவர்.

'இதுக்கெல்லாம் சரியாப் பதில் சொன்னா வேலையைத் தந்துவிடவா போறீங்க?' அப்படீன்னு (பழைய ஜோக்தான்) சொல்லலாமுன்னு நினைக்கும்போது திடீர்னு ஒரு நினைப்பு வந்தது: கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி! உடனே, ''தமிழன்'' என்றேன்.

''நீங்க போகலாம்.''

''தாங்க்யூ ஸார்.''

எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லிவிட்ட வெற்றிக் களிப்பில் வெளியே வந்தேன்.

இந்த வெற்றியைக் கொண்டாட முடிவு செய்தேன். ஒரு சினிமா பார்ப்பது என்று



# போலந்தில் ஒரு புரட்சி

கே. ஸ்ரீனிவாசன்

என்று லெனின் பாட்டாளிகளுக்கு தந்தை நாடு என்று ஒன்று கிடையாது. உலகில் உள்ள பாட்டாளிகள் ஒன்று சேர வேண்டும் என்று சொன்னாரோ அன்று பிடித்தது தலைவலி ஜனநாயக நாடுகளுக்கு. எந்த நாட்டிலும் கம்யூனிஸ்ட்கள் ரஷ்யாவைத் தங்கள் வணக்கத்துக்குரிய புண்ணிய நாடாகக் கருதலானார்கள்.

இதில் அனர்த்தம் என்ன? தந்தை நாட்டு மோகத்தில் சொந்த நாட்டின் நலன்கள் மறக்கப்படும். இரண்டாவது மகா யுத்தத்தில் இந்த ''கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல்'' என்ற சித்தாந்தம் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் கோரி வெற்றியும் பெற்றார்.

இரண்டாவது மகா யுத்தம் யாருக்கு என்ன பலன் அளித்ததோ இல்லையோ ரஷ்யாவுக்குப் பாதி ஐரோப்பிய நாடுகளை அளித்தது. அன்று செஞ்சேனை வியாபித்த பகுதிகள் எல்லாம் தன்னுடையது என்று ஸ்டாலின் அடித்துக் கூறினார். தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற அருமையான வாதம்.

போலந்து, செக்கோஸ்லவேகியா, ஹங்கேரி, கிழக்கு ஜெர்மனியில் உள்ள பாட்டாளிகளுக்கு எது வெண்ணெய், எது சுண்ணாம்பு என்று நன்றாகத் தெரியும். ஹங்கேரியில் மக்கள் எழுந்தபோது அதற்குப் பதில் பல்லாயிரம் டாங்கிகள், பீரங்கிகள். செக்கோஸ்லவேகியாவிலும் அதே கதை. ருமேனியாவின் அதிபர் ரஷ்யாவுக்கு வெற்றிகரமாகக் கடுக்காய் கொடுத்து வந்துள்ளார். ஓரளவு சுதந்திரம் அவருக்கு இருக்கிறது என்றால் அது ரஷ்யாவின் தயவால் இல்லை.

பசியெடுத்தவன் புரட்சி செய்வான் என்று கம்யூனிஸ்ட்களே சொல்வார்கள். போலந்தில் பாட்டாளிகள் சுமார் 20 வருடங்களுக்கு முன் எழுந்தார்கள். போஸ்னான் (Poznan) கிளர்ச்சி என்பது சரித்திரத்தில் இடம் பெற்றது. வழக்கம்போல் ரஷ்யர்கள் தங்கள் ஆயுதங்களைக் கொண்டு அடக்கினார்கள். ஆனால் அண்மையில் போலந்தில் கப்பல் கட்டும் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தபோது ரஷ்யா பாட்டாளிகளுக்கு வேலைநிறுத்த உரிமை உண்டு என்று ஒப்புக்கொள்ள நேர்ந்தது. இது உழைப்பாளிகளுக்கு மாபெரும் வெற்றி.

இன்று ரஷ்யாவுக்கு அதிக நாடுகளைச் சாப்பிட்டு அஜீர்ணம். ஆப்கனிஸ்தானத்தில் நாடு பிடிக்கப் போய் ஆப்கானியர்களை ஒடுக்க முடியவில்லை. ஆனால் ரஷ்யப் படை அங்கு பல லட்சக் கணக்கில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. சீன எல்லையில் எப்பொழுதும் முஸ்தீபு. அங்கே இரு தரப்பிலும் ஜனத் தொகையில் எல்லோரும் ஜவான்கள். ராணுவ பலத்தைக் காட்டினாலும் ருஷ்யாவுக்கு ஐரோப்பிய நாடுகளில் இனி தலைவலிதான். சுதந்திரமாகச்




செயல்பட்ட நாடுகளில் சுதந்திரம் மீண்டும் வந்தே தீரும். இதைத்தான் சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ அடித்துச் சொன்னார்: ''20 வருடங்களில் கம்யூனிஸம் மறைந்துவிடும்.''

இதற்கு அர்த்தம் - முதலாளித்துவம் திரும்பி வந்துவிடும் என்பதல்ல. மேற்கு ஐரோப்பாவில் மக்களை மன்னர்கள் போல் மதித்து அவர்களுக்கு உயர்ந்த வாழ்க்கை அளிக்கும் சோஷலிஸ முறை இல்லையா? அது பரவும்.

இந்தியாவைப் பொறுத்தவரை கவலை இல்லை. இன்னும் ஒரு நூறு ஆண்டுகளுக்கு வெத்து வேட்டாக சோஷலிஸம் என்று உளறி வம்சாவழி அரசியலுக்கு அடிகோலுவதற்குப் பலர் இருப்பார்கள்.

---

தீர்மானித்தேன். குரோம்பேட்டை வெற்றி தியேட்டருக்குச் சென்றேன்.

அன்றிரவு.


விவித பாரதி தேன் கிண்ணத்தில் 'உங்கள் விருப்ப'த்தை வழங்கிக் கொண்டிருந்தது. அதில் ''காஷ்மீர்... பியூட்டிஃபுல் காஷ்மீர்'' பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. நான் மிகவும் உற்றுக் கேட்டேன். நான் எதிர்பார்த்த அந்த வரியும் வந்தது. ''என் தாய்த் திருநாட்டுக்கு வாசல் இது...'' அம்மாடி! எனக்கு ஒரு நிம்மதி: இன்டர்வியூவில் கேட்கப்பட்ட முதல் கேள்விக்குச் சரியாகப் பதில் சொல்லிவிட்டேன்! நிச்சயம் எனக்கு வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் தூங்கச் சென்றேன்.

# அறுசுவையின் அடிப்படை சுவை அம்பீஸ் சுவையே !


# மனம் மகிழ நன்கு உண்ணுங்கள் அம்பீஸ் துணையுடன் ...

சுவைத்துப்பாருங்கள்


**இட்லி தோசையுடன்**



**பூரி சப்பாத்தியுடன்**



**பிரட் ஸான்விச்சுடன்**



**உங்கள் கறியினைக் கேற்றவாறு**



APRC 104

சுவையூறும்
ஊறுகாய்
வகைகள்

ஆவக்காய் மாங்காய்
வடு மாங்காய்
மாங்காய் தொக்கு
எலுமிச்சை
கோங்கூரா
பச்சை மிளகு
வெஜிடபிள் ஊறுகாய்
நெல்லிக்காய்
பச்சை மிளகாய்
பூண்டு ஊறுகாய்
மற்றும் பலவகைகள்

3869

**Ambi's**

FPO



அம்பீஸ் சுவை,
ஒரு தாயின்
கை தேர்ந்த
சுவை போல்
ஆவலைத் தூண்டும்
சுவை

தயாரிப்போர்:
அம்பீஸ் பிக்கிள்ஸ் அண்ட்
காண்டிமெண்ட்ஸ் ஆப் இந்தியா
ஏற்றுமதி செய்வோர்:
வெஸ்டர்ன் எக்ஸ்போர்ட்ஸ்
(இந்தியா) பிரைவேட் லிட்.
19, நீலகண்ட மேத்தா தெரு,
தி. நகர், சென்னை PH: 447355

# 007 பாலு

கதை: குமரன்
படம்: வினு
9




அடியாள் தடுமாறிய அந்த விநாடியைப் பயன் படுத்திக் கொண்ட பாலு....
ளொள்! ளொள்!
துப்பாக்கி எகிறிப்போய் விழ, மேலும் துணிவடைந்த பாலு.....
ஹூ! ஹா! கராட்டே சாம்ப்பா நான்! டோனி பொன்னையா சிஷ்யன்! அவர் கத்துத்தந்த முதல்பாடம் தேசபக்தி!
ளொள்! ளொள்!
ஹூ! ஹா! இரண்டாவது பாடம்: ஒற்றனைக் கண்டால் ஒழித்துக்கட்டு!
ளொள்! ளொள்!
ஹீ! ஹா! அடுத்த லெஸ்ஸன்: ஊருக்கு உடந்தையாக இருப்பவனை உதைத்துத் தள்ளு!
ளொள்! ளொள்!
என்ன கலாட்டா இங்கே! ஹாண்ட்ஸ் அப் பாலு!
கர்ர்ர்ர்....
தொடரும்

# ரயிலில் வந்த ராஜபுதனத்துப் பெண்



பாசி. இராமச்சந்திரன்

ஜம்மு தாவை போபாலை விட்டுப் புறப்பட்டபோதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. ஒரு மிக அழகான இளம் பெண்ணும், அவள் பின்னே அவள் அழகுக்குக் கொஞ்சம் கூட சம்பந்தமில்லாத ஒரு முரட்டு இளைஞனும் நான் இருந்த கம்பார்ட்மெண்டில் தாவி ஏறியதும் நான் திகைத்துப் போனேன்.

''ஏய்...என்ன இது... ஓடுகிற வண்டியில் இந்தப் பெண்ணையும் இழுத்துக் கொண்டு தாவுகிறாயே... மடையா... கீழே விழுந்தால் உயிர் போய்விடாது?....'' — இந்தியில், உரத்த குரலில் அவனைத் திட்டினேன் நான்.

''மன்னித்துக் கொள்ளுங்கள் மகராஜ்... தப்புத்தான். என்ன செய்வது? அவசரமாக ஆக்ரா போக வேண்டியிருக்கிறது...'' — அந்தப் பெண்ணைப் பார்த்துக் கொண்டே என்னிடம் மன்னிப்புக் கேட்டான் அவன்.

நான் அப்பொழுதுதான் அவளை நன்றாகப் பார்த்தேன். பொன் நிறம்; அலை அலையாய் நீண்ட கூந்தல்; ராஜஸ்தானத்துப் பெண் என்று பார்த்த மாத்திரத்திலேயே சொல்ல வைக்கும் — சொக்க வைக்கும்— பேரழகி! அவள் என்னைப் பார்த்து மோகனமாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பைப் பார்த்து அவர்களை மன்னித்து விட்டேன்.

என் எதிரே அவர்கள் அமர்ந்தார்கள். என்னுடைய பெட்டியில் நான், இடார்ஸியில் ஏறிய ஒரு கிழம், இந்த போபால் தம்பதிகள் தவிர வேறு எவரும் இல்லை.

''இப்போ சீஸன் இல்லை ஸாப்...அதுதான் பெட்டி காலியாயிருக்கு...'' — என்றான் அவன்.

''ஓஹோ!'' என்று சொல்லிவிட்டு அவனிடம் கேட்டேன். ''இவள் உன் மனைவியா?''

''ஆமாம். பந்திகுய் இவள் சொந்த ஊர். போன வருஷம்தான் கல்யாணமாச்சு மகராஜ்....''

''ரொம்ப சந்தோஷம்.''

''நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் மகராஜ்?''

''நான் மதராஸ்காரன்.''

''ஓ.. மதராஸியா?... அச்சா... எங்களைப் போலவே அழகாக இந்தி பேசுகிறீர்களே?''

''என் கதையெல்லாம் கூட 'தர்மயுக்'கில் வருகிறதே... ப்ரவீண் என்று எழுதுவேன்.''

சட்டென்று அந்தப் பெண் என்னைப் பார்த்துச் சந்தோஷத்துடனும் ஆச்சரியத்துடனும் கேட்டாள்:

''மகராஜ்... நீங்கள்தான் ப்ரவீணா?... ஆச்சரியமாய் இருக்கிறதே... உங்கள் கதைகளை நான் படித்திருக்கிறேனே!'' என்றாள் சிறு குழந்தையைப் போல.

நான் பெருமையுடன் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

''இப்போது எங்கே போகிறீர்கள் மகராஜ்?'' — கேட்டவள் என் ரசிகை.

''டெல்லி போகிறேன். நாளை மறுநாள் டெல்லியிலிருந்து ஜெய்ப்பூர் போகிறேன். ஆபீஸ் விஷயமாகப் போகிறேன்.''

''ஆக்ராவிலிருந்தே ஜெய்ப்பூர் போகலாமே?ஏன் டெல்லி போய்ச் சுற்றுகிறீர்கள்?''

''இல்லை. என் ஹெட் ஆபீஸ் டெல்லியில் இருக்கிறது. அங்கு ஒரு ரிப்போர்ட் கொடுத்துவிட்டு நாளை மறுநாள் அஹமதாபாத் எக்ஸ்பிரஸில் ஜெய்ப்பூர்போகிறேன்.''

''மகராஜ் அந்த ரூட்டில்தான் என் சொந்த ஊர் பந்திகுய் வரும்'' என்றாள் அவள் வெட்கத்துடன்.

''அப்படியா?... அந்த ஊர் வரும்போது உன்னை நிச்சயமாக ஞாபகம் கொள்வேன்'' என்றேன்.

வெள்ளி மணியாய்க் கலகலத்தாள் அவள்.

இடார்ஸி ஜனம் பயங்கரமாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தது.

கூட்டமில்லாத ரயில் பெட்டி சந்தோஷமாக இருந்தது. அந்தச் சந்தோஷத்தில் ஒரு தேவதையும் இருந்தால்? சொர்க்கமாக இருந்தது.

"மகராஜ்... இதுதான் சம்பல் பள்ளத்தாக்கு. பாருங்களேன்... அப்பப்பா...பயங்கரம்" என்று கூவி அழைத்தான் அவள் கணவன், என்னைத் திடீரென்று!

ஜன்னல் வழியாக அந்தப் பயங்கரப் பள்ளத்தாக்கைப் பார்த்தேன். குலை நடுங்கியது எனக்கு. கீழே விழுந்தால் எலும்பு இருந்தாலும் இருக்கும். ஆனால் பயங்கர மிருகங்கள் அதைக் கூட விட்டுவிட முடியாது. என் கண்ணெதிரில் ராஜா மான் சிங்கும், துப்பாக்கியைப் பிடிப்பதற்கென்றே பிறந்த தோட்டா சிங்கும், பெயர் ஞாபகமில்லாத ஒரு பெண் கொள்ளைக்காரியும் தோன்றி மறைந்தனர்.

"பார்த்தீர்களா மகராஜ்..."

"அப்பப்பா... பயங்கரம்...."

"போன வருஷம் இந்த வழியாக வந்த ஒரு ரயிலை நிறுத்திக்கொள்ளையடித்தார்கள் மகராஜ்."

என் உடம்பு லேசாக நடுங்கியது. அவள் காதோடு ஏதோ பேசக்கேட்டு அவன் சிரிக்கவே, "ஏன் சிரிக்கிறாய்? என்ன விஷயம்?" என்றேன்..

"ஒன்றுமில்லை மகராஜ்... 'இதையெல்லாம் ஏன் சொல்கிறாய் அவரிடம்? அவர் பயப்படுகிற மாதிரி இருக்கிறது' என்று என் பெண்டாட்டிசொல்கிறாள்" என்றான்.

"பயமா? எனக்கா? நோ...நோ... எனக்குக் கராத்தே நன்றாகத் தெரியும்!" என்று சரடு விட்டேன்.

"அப்படியா... சபாஷ்... இதெல்லாம் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லதுதான்" என்றான்.

"கொஞ்சம் பாத்ரூம் போய்விட்டு வரட்டுமா?" என்று கணவனிடம் கேட்டாள் அவள்.

"ஓ...போயேன். இதற்கு ஏன் என்னிடம் பெர்மிஷன்?" என்றான் சிரித்துக்கொண்டே.

அவள் மெதுவாக எழுந்து அந்தப் பெட்டியின் கடைசியில் இருந்த கதவைத் திறந்து வைத்துக் கொண்டு நின்றாள்.

நான் பதறிவிட்டேன். "அதோ பார் உன் மனைவியை... கதவைத் திறந்து வைத்துக் கொண்டு நிற்கிறாள். கீழே விழுந்து விடப் போகிறாள்..."

அவன் எழுந்து வேகமாக ஓடினான். இருவரும் அங்கேயே நின்று சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். இவன் அவளைத் தொடுவதும், அவள்



நாணுவதும், அவர்களது சிருங்கார விளையாட்டுக்கள் அதிக மாயில்லை. நானும் அதிகமாகக் கண்டு கொள்ளவில்லை. சிறுசுகள். விளையாடட்டும் என்றிருந்தேன்.

ஓ...இது என்ன.... இது என்ன அநியாயம்? ஒரு கணம்... ஊஹூம்... அதைவிடக் குறைவான இந்த நேரத்தில் எப்படி இது நடந்து விட்டது? ஓ.. என் கண்களால் நம்ப முடியவில்லை.... கடவுளே!

''அடிப் பாவி! கீழே கிடுகிடு பள்ளத்தாக்கு... உன் புருஷனைப் பிடித்து, அவன் ஏமாந்திருக்கும்போது கீழே தள்ளிவிட்டாயே?... பாவி...பாவி...'' விரட்டினேன்.

''இல்லை...இல்லை... நான் தள்ளவில்லை. மகராஜ்....அவராகவே தவறி விழுந்து விட்டார். நான் தள்ளவில்லை... ஐயோ... கடவுளே... என் தாலி மீது சத்தியம்!''

''பொய் சொல்லாதே. அடுத்த ஸ்டேஷன் வரும்போது உன்னைப் போலீஸில் பிடித்துக் கொடுத்து விடுவேன்.'' மிரட்டினேன்.

போலீஸ் என்றதும் பயந்துவிட்டாள்.

''என்னை மன்னித்துவிடுங்கள் மகராஜ். நான்தான் அவரைத் தள்ளிவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள். போலீஸில் என்னைப் பிடித்துக் கொடுத்து விடாதீர்கள்!''

''பாவி...படுபாவி... நியாயமா இது? தாலி கட்டிய புருஷனைக் கொன்றுவிட்டாயே?... ஐயோ....''

''மகராஜ்... என் குலதெய்வம் மீது ஆணை. அவன் என் கணவன் இல்லை..''

''அப்படி யென்றால் அவன் யார்?''

அவள் சொல்ல ஆரம்பிப்பதற்கும் குவாலியர்—ரயில்வே ஸ்டேஷன் வருவதற்கும் சரியாக இருந்தது. நான் டீ குடிப்பதற்காகக் கீழே இறங்கினேன். எங்கள் பெட்டிக்குள் இரண்டு மூன்று அந்நிய நாட்டவர் ஏறினர். பிரெஞ்சுக்காரர்கள் என்று அவர்கள் பேசிய ஆங்கிலமே சொல்லிற்று. நான் கீழே இறங்கிச் சற்று இளைப்பாறுவதற்குள் அவள் ஓடிவிட்டால் என்ன செய்வது என்று ஒரு பிரெஞ்சுக்காரனிடம் 'அவள் என் மனைவி — புத்தி சுவாதீனம் இல்லாதவள்' என்று பொய் சொல்லி அவளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுப் பதினைந்து நிமிடங்களில் மறுபடியும் என் கம்பார்ட்மெண்டுக்குத் திரும்பினேன்.

வண்டி குவாலியரை விட்டுப்புறப்பட்டது.

அவள் சொன்னாள்: ''அவன் என் கணவனே அல்ல. போபாலில் என் மாமனார் குடும்பம் மிகப் பெரிய குடும்பம். பெரிய நிலச்சுவான்தார் அவர். பல்பீர் சிங்கோ என்றால் மாவட்டப் போலீஸ் அதிகாரியே அவரிடம் பயப்படுவார். அத்தனை செல்வாக்கு அவருக்கு. அவருக்கு நான்கு பிள்ளைகள்—மூன்று பெண்கள். அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. நான்காவது மகனைத்தான் நான் திருமணம் செய்து கொண்டேன். என் கணவர் ஒரு பட்டதாரி. அரசாங்க உத்தியோகஸ்தர். லகோடிலா என்பது அவர் பெயர். நல்ல அழகர். குடும்பத்தில் தகராறு காரணமாக நானும் என் கணவரும் தனிக் குடித்தனம் போனோம். அங்கேதான் தகராறு ஆரம்பித்தது. எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரன்தான் என்னுடன் வந்த கிஷோரிலால். என் கணவரோடு இனிக்க இனிக்கப் பேசி அவருடைய சிநேகிதனானான். அவர் இல்லாதபோது வீட்டுக்கு அடிக்கடி வரலானான். நான் எத்தனையோ எடுத்துச் சொல்லியும் அவன் கேட்கவில்லை. என் கணவரிடம் இதைத் தெரிவித்தேன். முதலில் அவர் நம்பவில்லை. முடிவில் ஒரு நாள் அவன் என்னிடம் பேசியதை அவர் ஒளிந்திருந்து கேட்டார். இதற்கு முடிவுதான் என்ன? எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. போலீஸுக்குத் தெரிவித்தால் குடும்ப கௌரவம் பாழாகும். அவனை எதிர்த்துக் கொண்டு வாழ முடியாது என்கிற நிலை; கடைசியில் கிஷோரிலால் என்னை ஆக்ராவுக்கு ஓடிவிடுவோம் என்று தேதி வேறு குறிப்பிட்டு விட்டான். முதலில் மறுத்தாலும் பின்னர் ஒப்புக்கொண்டேன். ஏன் தெரியுமா? மனத்துக்குள்ளேயே ஒரு திட்டம் போட்டு கிஷோரிலாலைத் தீர்த்துக் கட்ட வேண்டும் என முடிவு செய்தேன். என் முடிவில் வெற்றியும் பெற்றேன். ஆனால் நான் செய்த தவறு உங்களுக்குத் தெரிந்துவிட்டது.''

''உன் கணவனுக்குத் தெரியாமல்தான் இப்போது வருகிறாயா?'' என்று கேட்டேன்.

''இல்லை மகராஜ்... என் கணவரும் இதே ரயிலில் கடைசி கம்பார்ட்மெண்டில் அந்தப் பாவி கிஷோரிலாலுக்குத் தெரியாமல் பயணம் செய்து கொண்டிருக்கிறார். நாங்கள் ஆக்ராவில் சந்தித்துக் கொள்ளுவோம்.... எங்கள் எதிரி தொலைந்தான் என்ற சந்தோஷத்தில் தாஜ்மஹாலைப் பார்த்துவிட்டு மறுபடியும் போபால் போய்ச் சேருவோம்...''

என்னுள் வியப்பு பன்மடங்காகியது. திட்டம் போட்டே ஒருகொலையைக் கணவனும் மனைவியுமாகச் செய்துவிட்டு எத்தனை சந்தோஷமாக இருக்கிறார்கள்!

ஆக்ரா வந்தபோது ஓர் அழகான இளைஞன் எங்கள் கம்பார்ட்மெண்டுக்கு ஓடி வந்து அவளை முத்தமிட்டவாறு சந்தோஷமாக அழைத்துச் சென்றான். என்னை அவள் தன் கணவனிடம் அறிமுகப்படுத்தி வைத்தபோது அவன் முகம் வெளிறியது.

''நம் விஷயம் இவருக்குத் தெரியுமா?'' என்று கேட்டான் அவன்.

''தெரியும்... நான்தான் சொன்னேன்!''

கட்சித் தலைவர் குட்டித் தலைவரை சாடுகிறார்: ''குண்டப்பா நகர் பொதுக் கூட்டத்துக்கு இரண்டு மணிநேரம் லேட்டாப் போய் பேசினீங்களாமே... தலைவரை விட அதிக நேரம் தாமதமாக வருகிறவர்னு உங்களைப்பற்றி எல்லோரும் உசத்தியா பேசணும்கிறது உங்க நினைப்பா...?''

-உ. ராஜாஜி



# புதிய கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்




குழந்தைகளுடைய
பற்களின் மென்மையான
எனுமல் எளிதில் துவாரங்களுக்கும்,
சிதைவுக்கும் உள்ளாகிறது.
பெரியவர்களுக்கும் பற்சிதைவுக்கு எதிராகப்
பாதுகாப்பு தேவை. புதிய ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்
பல் துவாரங்களுக்கும், பற்சிதைவுக்கும் எதிராக உங்கள்
குடும்பத்தினருக்கு நிச்சயமான பாதுகாப்பைத் தருகிறது.
துவாரங்களையும், பற்சிதைவையும் உண்டாக்கும் வாய் அமிலங்களுக்கு
எதிராகப் பற்களை உறுதிப்படுத்துவதற்கென பல் எனுமலுடன்
இணைந்து செயல்படும் விசேஷ கோல்கேட் எம்எஃப்பி
ஃப்ளோரைட் அதில்
உள்ளது. கோல்கேட்
ஃப்ளோரி கார்ட் புல்லரிக்கும்
புதுச்சுவை கொண்டது.
உங்கள் குடும்பத்திற்கு
இன்றே வாங்குவீர்.



உலகெங்கும் உள்ள ஆராய்ச்சி சாலைகளில்
சோதிக்கப்பட்டுள்ள எம்எஃப்பி ஃப்ளோரைட்
துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராகப்
பற்களை உறுதிப்படுத்துகிறது என்பது
மருத்துவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது.
கோல்கேட்டின் நீண்ட ஆராய்ச்சி மட்டுமே
இந்த தனிப்பட்ட எம்எஃப்பி ஃபார்முலாவை
உங்களுக்கு வழங்க முடியும்.

**ஃப்ளோரிகார்டில் உள்ள எம்எஃப்பி ஃப்ளோரைட்
எனுமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும்
எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.**

இப்பொழுது தமிழ்நாடு மற்றும் கேரளாவில் மட்டுமே கிடைக்கும்.

CFT-G-2 TM

# அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!

சாரதா'ஸின் பட்டுப் புடவையில் கொள்ளை அழகுடன் விளங்கும் அவளை மனைவியாக அடைந்தது அவன் அதிர்ஷ்டம். கண் நிறைந்தவனை கணவனாக அடைந்தது அவள் அதிர்ஷ்டம். இருவரின் அதிர்ஷ்டத்தையும் இணைய வைத்தது சாரதா'ஸின் பேரதிர்ஷ்டம்.



## சாரதாஸ்

**SARATHA'S**
MADRAS & TRICHY

(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177

N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077

சாரதா'ஸ் சென்னையிலும் திருச்சியிலும் மட்டுமே.
வேறு எங்கும் கிளைகள் கிடையாது.

''மகராஜ்... எங்களைப் பற்றியும் வைத்து அழகான ஒரு கதை எழுதிவிடுங்கள்... நான் படிக்கிறேன்....''

நானும் சூழ்நிலை மறந்து சிரித்தேன். அவள் போய்விட்டாள்.

தடுமாறும் நெஞ்சோடு நானும் டெல்லி வந்து சேர்ந்தேன். பழைய டெல்லியில் இருக்கும் என் நண்பன் கைலாஷ் (கைலாசம் தான் — மாயவரத்துப் பையன் — டெல்லியில் வேலை கிடைத்து அங்கேயே நிரந்தரமாகி விட்டதால் கைலாஷ் ஆனான்) ஸ்டேஷனுக்கு வந்து ஆட்டோவில் அவன் வீட்டுக்கு அழைத்துப் போனான்.

கைலாஷ்வீட்டில் எனக்கு ராஜோபசாரம். அவன் மனைவி ஏகப்பட்ட சமையலைச் செய்து போட்டுத் திக்குமுக்காட வைத்தாள்.

மத்தியானம் எக்ஸ்பிரஸைப் புரட்டிய போதுதான் நான் திடுக்கிட்டேன். ஒரு விளம்பரம் திடுக்கிட வைத்தது.

''கைலாஷ் இதோ இந்த விளம்பரத்தைப் படித்துப் பாரேன்...'' — எக்ஸ்பிரஸை அவனிடம் நீட்டினேன்.

அவன் சத்தம் போட்டுப் படித்தான்.

''இவன் என்கூட ரயிலில் வந்தான் கைலாஷ். கிஷோரிலால் என்பது இவன் பெயர். அது சரியாகத்தான் இருக்கிறது.''

''காணவில்லை. மேற்கண்ட படத்தில் இருக்கும் கிஷோரிலால் எங்கள் கம்பெனியின் பிரதான காஷியர். கம்பெனியிலிருந்து பாங்கில் கட்டுவதற்காக ஐம்பதினாயிரம் ரூபாயோடு சென்றவர் இதுவரை திரும்பவில்லை. அவரைக் கண்டுபிடித்துத் தருவோருக்குச் சன்மானம் வழங்கப்படும். அல்லது போலீஸில் அவரைப் பற்றிய தகவல் தரலாம். மேனேஜர், ராம்கிஷன் பேரிங்ஸ் லிமிடெட், போபால்.''

''என்ன இவன் உன்னோடு ரயிலில் வந்தானா?''

''கைலாஷ்! எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது'' என்று ஆரம்பித்து என் கண் முன்னால் நடந்தவற்றைக் கூறினேன். ''இப்பொழுது என்னடா என்றால் கதை புது மாதிரியாகத் திரும்புகிறதே?'' என்று முடித்தேன்.

முடிவில் நானும், கைலாஷும் நடந்ததைக் கூறப் போலீஸ் நிலையத்துக்குச் சென்றோம். போலீஸ் அதிகாரி என்னிடம் கேட்ட முதல் கேள்வி: ''எப்பொழுது அந்தப் பெண் தன் கூட வந்தவனை வண்டியிலிருந்து கீழே தள்ளிக்கொன்றாளோ, அப்பொழுதே அடுத்த ஸ்டேஷனில் அவளைப் பற்றி போலீஸில் நீங்கள் ஏன் சொல்லவில்லை?''

நான் சிரித்தேன்.

''குவாலியர் ஸ்டேஷன் வந்ததும் என்கூட வந்த வெளிநாட்டுக்காரர்களிடம் அந்தப் பெண்மணியைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு ஸ்டேஷனிலிருந்த போலீஸ் நிலையத்தில் இந்தச் சம்பவம் பற்றி ஒரு புகார்க்கடிதம் கொடுத்து விட்டு வந்தேன். ஆக்ரா வரும்வரை அவளை யாராவது ஒரு போலீஸ்காரர் வந்து என்ன நடந்தது என்று விசாரிக்கக் கூட இல்லை என்று - போலீஸ் அதிகாரியை நான் மடக்கியதும், ''சரி....சரி... அந்தப் பெண் எப்படி இருப்பாள் என்று



ரேடியோவில் : நேயர்களே! பாடலின் ஆரம்பத்தில் மின்சாரக் கோளாறு காரணமாக ஏற்பட்ட தடங்கலுக்.............. இப்போது ஏற்பட்ட தடங்கலுக்கும் சேர்ந்து வருந்துகிறோம். அடுத்து...

-வெ. சீதாராமன்

---

அடையாளங்களைச் சொல்லமுடியுமா?'' என்றார் அதிகாரி.

நான் அவளை உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால்வரை வர்ணித்தேன்.

அதிகாரி சிரித்துக் கொண்டே தம் மேஜையின் இழுப்பறையிலிருந்து சில புகைப் படங்களை என்னிடம் கொடுத்தார்.

''இன்ஸ்பெக்டர்!... இந்தப் படங்கள் அனைத்தும் ஒரே பெண்ணுடையது மட்டுமல்ல... ரயிலில் வந்தவளும் இவளே...'' —

''நான் சொல்லப் போவதை நீங்கள் கேட்டால் அதிர்ச்சி அடைவீர்கள்... உங்களுடன் பயணம் செய்தவள் சம்பல் பள்ளத்தாக்கின் இன்றைய பயங்கரக் கொள்ளைக்காரி சார்... கொலைகாரியும்கூட''

''என்னது?'' — நிஜமாகவே நான் அதிர்ச்சி அடைந்தேன்.

என்னுள் தோன்றிய குழப்பங்கள் மெதுவாக விலக ஆரம்பித்தன. கிஷோரிலால் என்கிற அப்பாவிக் காஷியரின் காதலியாக நடிக்க ஆரம்பித்து, அவனோடு நெருங்கிப் பழகி, அவன் அலுவலகப் பணத்தை எடுத்துச் செல்லும் நாளைத் தெரிந்துகொண்டு அவனைத் தன்வயப்படுத்தி ஊரை விட்டே பணத்துடன் அவளோடு ஓடி வந்துவிடுமாறு மயக்கி, வழியிலே அவனைக் கொன்று ஆக்ராவில் தன் கூட்டாளியோடு சேர்ந்தவள்தான் ரயிலில் வந்த ராஜபுதனத்து மங்கை — இல்லை, கொள்ளைக்காரி!

''உங்களிடம் நிறையப் பணம் இருந்தது என்று அவளுக்குத் தோன்றியிருந்தால் உங்களையும் சைலன்ஸர் வைத்த துப்பாக்கியால் சுட்டிருப்பாள். இதுவரை ஏழெட்டுப் பேர்களை அவள் கொன்றிருக்கிறாள். ஆனால் போலீஸின் பிடியில் அவள் இன்னமும் சிக்கவில்லை. நாங்களும் அவளைச் சும்மா விடமாட்டோம்'' என்றார் போலீஸ் அதிகாரி.

---

அம்மி மிதித்து அருந்ததி பார்த்து என்று சொல்வது வழக்கம். அம்மி மிதித்து அருந்ததியைப் பார்ப்பது அகலிகையைப் போல இராமல் அருந்ததியைப் போல் இருக்க வேண்டும் என்று மணமகளை உணரச்செய்வதற்கே. அம்மி மிதிக்கும் வேத மந்திரம் வாழ்வில் எத்தனை இடையூறுகள் வந்தாலும் இந்தக் கல்லைப் போல நீ உறுதியாக இருக்க வேண்டும். ''அச்மேவ த்வம் ஸ்திரா பவ'' என்று மணமக்களுக்குச் சொல்லியிருக்கிறது.

-கி. வா. ஜ.வின் நூலிலிருந்து

ரேகா ராகவன்





# தோல்வியில் ஒரு வெற்றி

— ராஜேஷ்குமார் —

விளையாட்டாய்த் தொடங்கிய பேச்சு கடைசியில் சபதத்தில் போய் முடிந்தது.

ஆபீஸ் 'லஞ்ச் அவரில்' பேச்சு இப்படி ஆரம்பித்தது.

''சந்தர்ப்பமும் நேரமும் ஒருத்தனுக்கு அமைஞ்சு ஒரு அழகான பெண்ணும் கிடைச்சுட்டா எந்த ஆணுமே யோக்யவானா இருக்க மாட்டான்....'' வெங்கடேசன் சாம்பார் சாதம் நிறைந்த வாயோடு சொன்னான்.

''யூ ஆர். கரெக்ட் வெங்கடேசன்! சந்தர்ப்பமும் நேரமும் கிடைக்காதவரை ஒவ்வொருத்தனும் ஏகபத்தினி விரதன்தான்.'' —தயாநிதி டிபன் பாக்ஸைத் திறந்தபடியே ஆமோதித்தான்.

எதிரே உட்கார்ந்திருந்த அக்கௌண்டண்ட் கோதண்டம் மட்டும் பக்கவாட்டில் தலையைப் பலமாக அசைத்துத் தம் மறுப்பைத் தெரிவித்தார். ''நோ! அந்தப் பேச்சை நான் ஒத்துக்க மாட்டேன். மத்த ஆம்பிளைகளை ஏறிட்டுக்கூடப் பார்க்காத பெண்கள் இருக்கிற மாதிரி மத்த பெண்களை நிமிர்ந்து பார்க்காத ஆண்களும் இருக்கத்தான் செய்யறாங்க. உதாரணத்துக்கு நம்ம ஆபீஸ்ல இருக்கானே சபாநாயகம் அவனையே எடுத்துக்கலாம். சபாநாயகத்தைப் பத்தி உங்க ரெண்டு பேருக்கும் நல்லாத் தெரியும். பெண்டாட்டி கைச்சமையலைத் தவிர ஹோட்டல் சாப்பாட்டைக் கூடச் சாப்பிடாதவன். நம்ம கூட உட்கார்ந்து சாப்பிட்டா எங்கே நம்ம சாப்பாட்டைச் சாப்பிட வேண்டி வருமோன்னு கடைசியில தனியா சாப்பிட வருவான்.''

வெங்கடேசன் சாம்பார் சாதத்தின் கடைசிப் பருக்கையையும் விடாமல் வழித்து வாயில் திணித்துக் கொண்டு சொன்னான்: ''சபாநாயகத்தை விடுங்க சார்! அவன் ஒரு பொட்டைப் பயல். பெண்டாட்டி பேரையே ஜெபம் பண்ணிக்கிட்டிருக்கிற அரைச் சாமியார். நீங்க சொன்ன மாதிரி அவனை வேணும்னு மாத்த முடியாது. நிஜமாகவே அவன் செண்ட் பர்சண்ட் ஏக பத்தினி விரதன் தான். ஊர்வசியே அவன் முன்னாடி காபரே ஆடினாலும் மனசு மாறமாட்டான். நான் ஒத்துக்கிறேன்...''

ஆனால் தயாநிதி ஒப்புக்கொள்ளவில்லை. ''எப்பேர்ப்பட்ட கொம்பனும் சரி... சமயம் கிடைச்சாப் பயன்படுத்திக்குவான். ஆம்பளைன்னு ஒருத்தன் இருந்தா கண்டிப்பா அவனுக்குப் பல ருசி இருக்கும். வாய்ப்பு கிடைக்காததனால் அவன் 'கடனே'ன்னு பெண்டாட்டியோட இருக்கான். இதே சபாநாயகத்துக்கும் ஆசை இருக்கும். கண்டிப்பா இருக்கும். ஆனா வீம்புக்காக அப்படி இருக்கான். நான் நினைச்சாக் கண்டிப்பா அவனோட ஏகபத்தினி விரதத்தை உடைக்கக் காட்டறேன். என்ன பந்தயம் கட்டறீங்க கோதண்டம் ஸார்?''

கோதண்டம் உற்சாகமாகச் சொன்னார்: ''நீங்க என்ன பந்தயம் கட்டினாலும் சரி. அதுக்கு நான் ஒத்துக்கறேன்.''

''ரியலி? அப்படியானா இந்தப் பந்தயத்துல யார் தோத்தாலும் ஆபீஸ் மொத்தத்துக்கும் அவங்க ட்ரீட் தரணும்... ஓ.கே?''

''ஓ.கே!'' — கோதண்டம் ஒப்புக்கொண்டார்.

வெங்கடேசன் சாதத்தில் ரசத்தை விட்டு வெண்ணெயாய்ப் பிசைந்து கொண்டே சொன்னான்:

''தயாநிதி! உன்னோட பந்தயத்தைச் செயல்படுத்தறதுக்கு இப்பச் சரியான நேரம்! சபாநாயகத்தோட பெண்டாட்டி பிரசவத்துக்காக அவங்க அம்மா வீட்டுக்குப் போயிருக்கா! சபாநாயகம் வீட்ல தனியாத்தான் இருக்கான். வெய்யில்ல காயற விறகுக் கட்டையா இப்ப இருக்கான். நீ கொஞ்சம் இதமா 'அப்ரோச்' பண்ணினா கண்டிப்பா வலையிலே விழுந்துடுவான்....''

''இன்னிக்குச் சாயந்திரமே அவன் வீட்டுக்குப் போகலாம். துணைக்கு நீயும் வா. வெங்கடேசா' ரெண்டு பேரும் பேசிப் பார்ப்போம்.''

'உம்...வர்றேன். கண்டிப்பா வர்றேன்!''

கோதண்டம் புன்னகைத்தார். ''நிச்சயமாக நீங்க ஏமாறப் போறீங்க!''

''பார்க்கலாம்!'' — முஷ்டியை உயர்த்தினான் தயாநிதி.

ஆபீஸ் முடிந்ததும் புறப்பட்டு, வழியில் 'அன்னபூர்ணா' ஓட்டலில் டிபனை முடித்துக்கொண்டு பீடாவை மென்றபடி ஏழாம் நம்பர் பஸ்ஸில் ஏறி சபாநாயகத்தின் வீட்டுக் கார்னரில் வெங்கடேசனும் தயாநிதியும் இறங்கிய போது மணி ஆறு.

காந்திபுரம் காளிதாஸ் ரோட்டில் சிவப்பாய்ப் பூத்துக் கொட்டும் வாத நாராயண மரங்கள் நிறைந்த வளைவில் சற்று உள்ளே தள்ளி இருந்தது சபாநாயகத்தின் வீடு.

வீட்டு வாசற்படி ஏறிக் கதவின் மேற்புறத்தில் இருந்த காலிங் பெல்லைக் கதற வைத்தான் தயாநிதி.

சில விநாடிகளுக்குள் கதவு திறக்க—

கதவின் பின்னே சபாநாயகம் பளிச்சென்று நின்றிருந்தான். அப்போதுதான் முகம் கழுவிப் பவுடர் பூசியிருந்தான். நெற்றியில் சந்தனப் பொட்டும் குங்குமமும் தெரிந்தது. வெள்ளை வெளேரென்ற பனியனில், சட்டம் போட்ட லுங்கியில் அமர்த்தலாய் இருந்தான்.

''வாங்க...வாங்க... ஆச்சரியமாயிருக்கே!'' சந்தோஷமாய் வரவேற்றான்.

''இந்தப் பக்கமாய் கீதாலயாவுக்கு வந்தோம். டிக்கெட் கிடைக்கல்ல. இப்படியே பொடி நடையா வந்தோம்.... அப்படியே உன்னையும் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தோம்....''

''கீதாலயாவில என்ன படம்?''

''ஒரு மலையாளப் படம். 'ஏ' முத்திரை.''

''சை!'' முகத்தைச் சுளித்தான் சபாநாயகம்.

உள்ளே அழைத்துப் போய் நாற்காலிகளைக் காட்ட அவைகளில் இருவரும் சரிந்தார்கள். ஆபீஸ் விஷயங்களைச் சிறிது நேரம் பேசிவிட்டுத் தயாநிதி கேட்டான்: ''மிஸஸ் வீட்ல இல்ல போலிருக்கு?''

''ஆமா. டெலிவரிக்காக அம்மா வீட்டுக்குப்போயிருக்கா!''

''ராத்திரியில தனியா படுத்துக்க உனக்குக் கஷ்டமா இருக்காதா?''

கொஞ்சம் முகம் மாறினான் சபாநாயகம். மறு விநாடியே சொன்னான் பளிச்சென்று. ''என்ன செய்யறது... கஷ்டந்தான். பட்டுக்க வேண்டியதுதான். மனசைக் கட்டுப்படுத்திக்க வேண்டியதுதான். மனசு சஞ்சலப் படறப்போ சஷ்டியை எடுத்துப் படிச்சு மனசைப் பதப்படுத்திக்க வேண்டியதுதான்.''



தயாநிதி சிரித்தபடி கேட்டான்: ''அப்படியெல்லாம் ஏன் உன்னைச் சிரமப் படுத்திக்கிறே வீட்டிலேயே சாப்பிட்டுட்டிருக்கிற நாம் ஒரு நாளைக்கு ஒரு சேஞ்சுக்காக ஹோட்டல்ல சாப்பிடறதில்லையா? அது மாதிரி முடியாத நேரங்கள்ல வெளியே போய் ஜாலியா இருக்கிறதுல என்ன தப்பு?''


சபாநாயகத்தின் முகம் சரேலெனச் சிவந்தது.

''இதைச் சொல்றதுக்குத் தான் வீட்டுக்கு வந்தியா தயாநிதி?''

''நோ....நோ... தப்பா நினைக்காதே சபா.... உன்னோட நிலைமையைப் பார்த்துட்டுத்தான் சொன்னேன். அறுபது வயசுக் கிழவனுக்குக்கூட அந்தச் சபலம் தீர்றதில்லே. நம்மளை மாதிரி இளைஞர்கள் அப்படிப்போறதிலே என்ன தப்பு? எனக்குத் தெரிஞ்ச ஒரு இடம் இருக்கு. நாம கொடுக்கிற பணத்தை அது வாங்கிக்கும். பயமில்லாம இருந்துட்டு வரலாம். உனக்குச் சம்மதமானாச் சொல்லு. கூட்டிக்கிட்டுப் போறேன்....''

சபாநாயகம் விருட்டென்று எழுந்தான். அவன் கண்கள் கலங்கி யிருந்தன. நெற்றியில் படபடப்பாய் வியர்வை துளிர்க்க ஆரம்பித்தது. ''தயாநிதி! நான் அப்படிப் பட்டவனில்லே. மனைவி மட்டும் சுத்தமானவளா, மத்தவனை நினைச்சுக்கூடப் பார்க்காத உத்தமியா இருக்கணும்னு ஒவ்வொரு ஆணும் நினைக்கிறான். அப்படி நினைக்கிற ஆணும் சுத்தமானவனா இருக்கணும்னு நான் ஆசைப் படறேன். வாழ்நாள் முழுவதும் அப்படியே இருந்து காட்டறது தான் என்னோட லட்சியம். தயவு செஞ்சு இந்த மாதிரியான விஷயத்தைப் பேசறதை விட்டுட்டு வேற விஷயத்தைப் பேசலாமே''

தோற்றுவிட்ட தயாநிதி சோர்வோடு வெங்கடேசனைப் பார்த்தான்.



தேமேன்னு இரேன் என்பது தெய்வமே என்று இருப்பாயாக என்ற பொருள் படுகிறது. தெய்வமே என்ற தொடரே "தேமேன்னு" என்று பேச்சு வழக்கில் சிதைந்து விட்டது. தெய்வமே என்று இருப்பாயாக என்ற பொருள் சும்மா இரு என்ற பொருளில் வழங்குகிறது.

-கிவாஜவின் நூலி லிருந்து ரேகா ராகவன்

---

வெங்கடேசன் சபாநாயகத்துக்குத் தெரியாமல் உதட்டைப் பிதுக்கினான்.

'ஸாரி சபா! உன்னோட உணர்ச்சியைப் புரிஞ்சுக்காமே ஏதேதோ பேசிட்டேன்.''

''அதனாலென்ன பரவாயில்லே. ஆமா... என்ன சாப்பிடறீங்க? காப்பியா? கூல் டிரிங்கா? வராதவங்க வந்திருக்கீங்க...'' சபாநாயகம் ஆர்வமாய்க் கேட்டான். தயாநிதியும் வெங்கடேசனும் இருக்கைகளிலிருந்து ஒன்றாய் எழுந்தார்கள். ''நோ... நோ... ஒண்ணும் வேண்டாம் சபா! ஆபீஸ் முடிஞ்சதும் டிபன் சாப்பிட்டுட்டுத்தான் வந்தோம். வர்றோம்... இன்னொரு நாளைக்கு வந்து சாவகாசமாய்ச் சாப்பிடலாம்.''

இருவரும் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் தெருக் கோடி தாண்டியதும் சபாநாயகம் வீட்டுக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கட்டிலுக்கடியில் குனிந்து மெதுவான குரலில் சொன்னான். ''ஏய்... பொன்னம்மா! வெளியே வா... ரெண்டு தடியன்களும் போயிட்டானுக...''

கட்டிலுக்கு அடியில் ஒண்டிக் கொண்டிருந்த பொன்னம்மா மெல்லத் தவழ்ந்து வெளியே வந்தாள்.

சபாநாயகம் நிம்மதிசெறிந்த பெருமூச்சு ஒன்றை விட்டான்.

''நல்ல வேளை. அவங்க வர்றதை நீ முதல்லே பார்த்துச் சொன்னே. இல்லேன்னு எக்கச்சக்கமாச் சிக்கியிருப்பேன். ஆபீஸ்லே என்னோட மானம் நார் நாரா கிழிஞ்சிருக்கும்.''

''ஏனுங்க... அவுக ரெண்டு பேரும் உங்களோட ஆபீசல வேல பண்றவங்களா?'' கட்டிலுக்கடியில் இருந்த சேலையை உருவியபடி கேட்டாள் பொன்னம்மாள், இருபதே வயதான அழகான வேலைக்காரி.

''ஆமாமா... ரெண்டு தடியன்களும் என்னோட ஆபீஸ்ல வேலை பண்றவங்கதான். இனி எவனுச்சும் வந்து கதவைத் தட்டறதுக்குள்ளாற... ம்... இப்படி வா...''

பொன்னம்மாளின் செழிப்பான தோள் பட்டையைப் பற்றினான் சபாநாயகம்.

அவள் வெடுக்கென்று அவன் கையைத் தட்டிவிட்டபடி புடவையைச் சரிசெய்து கொள்ள ஆரம்பித்தாள்.

சபாநாயகம் நெற்றியைச் சுருக்கினான். ''என்ன பொன்னம்மா? இன்னமும் உன்னைத் தொடக்கூட இல்லே... கிளம்பிட்டே?''

''உம்... கிளம்ப வேண்டியதுதானுங்க!'' என்று மெல்லச் சொன்னவள் சபாநாயகம் தன்னை நெருங்குவதைக் கண்டு தாழ்ந்த குரலில் கர்ஜித்தாள்: ''ஐயா! நீங்க காட்டின நூறு ரூபா நோட்டுக்கு ஆசைப்பட்டுப் புத்தி பேதலிச்சுப் போய் என்னோட முந்தானையை விரிக்க வந்துட்டேனுங்க.. நீங்க சித்த முந்தி அவுக கிட்ட ஒரு வார்த்தை சொன்னீங்க பாருங்க... அது என்னோட மனசுல பச்சுன்னு பட்டுட்டதுங்க... வாழ்நாள் பூரா சுத்தமானவனா இருந்து காட்டறதுதான் உங்களோட லட்சியம்னு உங்க சிநேகிதருகிட்டே சொன்னீங்க. அந்தச் சுத்தம் எனக்கு மட்டும் சொந்தமில்லீங்களா? நானும் ஒரு நாளைக்குக் கல்யாணம் பண்ணிக்கப் போறவதானுங்க. வரப்போற புருஷனுக்கு நான் சுத்தமானவளாப் போறதுன்னு முடிவு கட்டிட்டேனுங்க... தயவு செஞ்சு கதவுத் தாழ்ப்பாளைத் தொறந்து வுடுங்க... நான் போயிடறேன்.... நீங்க வலுக்கட்டாயமா என்னோட உடம்பைத் தொடறதுக்கு வந்தாக்க சத்தம் போட்டு ஊரைக் கூட்டறதுக்கும் தயங்க மாட்டேனுங்க... உம்... சீக்கிரமாத் தொறந்து விடுங்க....''

—பொன்னம்மாளின் குரலில் இருந்த உறுதி சபாநாயகத்தை அயர வைத்தது. ஒன்றும் பேசாமல் கதவைத் திறந்து விட்டான்.

''இந்தாங்க உங்க பணம்...''

நூறு ரூபாய் நோட்டை அவன் கையில் திணித்துவிட்டு விடுவிடுவென்று கீழே இறங்கி நடந்தாள் பொன்னம்மாள்.

அதே நேரம்... பந்தயத்தில் தோற்று விட்டோமே என்ற வருத்தத்தோடு நாளைக்கு ஆபீஸ் மொத்தத்துக்கும் கொடுக்க வேண்டிய விருந்தை நினைத்தபடி சோர்வோடு தன் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான் தயாநிதி.

அவனுக்கு இது தெரிய நியாயமில்லை.

சபாநாயகத்தைச் சேற்றில் தள்ளப் போய்த் தோற்றுவிட்டாலும் சேற்றில் விழ இருந்த ஒருத்தியைக் கரையேற்றிவிட்ட வெற்றி அவனுக்குக் கிடைத்திருப்பது — அவனுக்குத் தெரிய நியாயமில்லை.

---


## மழலைப் பேச்சின் மகிமை!

லண்டனில் கார் விபத்து ஒன்றில் காயமடைந்து, பிரக்ஞையற்ற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு, டாக்டர்கள் எவ்வளவோ சிகிச்சை அளித்தும் அவள் கண் திறக்கவில்லை.

அவளுடைய ஒன்பது மாத மகளின் மழலைப் பேச்சை' ஒலிப்பதிவு செய்து வைக்க ஏற்பாடு செய்தார்கள். மார்கரெட் கண் திறந்தாள். உடனே வலி தாங்காமல் அழவும் ஆரம்பித்தாள்! டாக்டர்கள் ஆச்சரியமடைந்தார்கள்.

ஆதாரம்: தினமணி

— ஆர். சம்பத் குமாரன்





## சஞ்சய் 11

# ஆட்டம் கண்ட ஜனதா

**கி. கஸ்தூரி ரங்கன்**

**ஜூலை 15, 1979:**

ஐந்தாண்டு காலத்துக்குத் தேர்ந்தெடுக் கப்பட்ட மொரார்ஜி தேசாயின் ஜனதா கட்சி இரண்டரை ஆண்டுகளிலேயே முடிவடைந்து விட்டது.

லோக்சபையில் காங்கிரஸ் தலைவர் சவான் பிரேரேபித்திருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது அடுத்த நாள் வோட்டெடுப்பு நடக்க இருந்தது. ராஜ் நாராயணனைத் தொடர்ந்து நூறு பேருக்கு மேல் ஜனதா கட்சியிலிருந்து விலகிப் போய்விட்டனர். மொரார்ஜி ஆட்சியைத் தாங்குவதற்கு 220 உறுப்பினர்களே இருந்தனர்.

மொரார்ஜி ஆட்சியைக் கவிழ்த்த பெருமைக்காக ராஜ் நாராயண் பாராட்டுதல் பெற்றார். ஆனால் அவரை கருவியாகப் பயன்படுத்தி ஜனதா ஆட்சியைப் பதவி கடத்திய சாதனை சஞ்சய் காந்தியைச் சேரும் என்று அப்போது ஜனதா கட்சி மாறிகளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இந்திரா காங்கிரஸ் சவான் கோஷ்டியிலிருந்து பிரிந்து தனியாகச் செயல்பட ஆரம்பித்த பின், ஜனதா ஆட்சி குறைகளை எதிர்த்து, இந்திரா மீது நடவடிக்கைகளை எதிர்த்து வீதிப்போராட்டங்கள் ஆரம்பித்தன. கோர்ட்டுகளிலும் கூட காங்கிரஸ் தொண்டர்கள் ரகளை செய்தனர். சஞ்சயே தலைமை தாங்கி நடத்தினார்.

சஞ்சயை வெளியே விட்டு வைப்பது ஆபத்தென்று ஜனதா ஆட்சி அவரைச் சிறைவைக்க வழி தேடிற்று. அப்போது சஞ்சய் சம்பந்தப்பட்ட கிஸ்ஸா குர்ஸிகா வழக்கு செஷன்ஸ் கோர்ட்டில் நடந்து வந்தது. அமிருத் நஹாதா என்ற பார்லிமெண்ட் உறுப்பினர் 1975லேயே இந்திரா ஆட்சியைப் பரிகசிக்கும் வகையில் படம் எடுத்திருந்தார். இதை வெளியிடுவதற்கு சென்ஸார் போர்டு அனுமதி கிடைக்கவில்லை. தகவல் மந்திரி வி. ஸி. சுக்லாவே பார்த்து முடிவு சொல்லட்டும் என்று டில்லிக்கு பிலிம் பிரதி தருவிக்கப்பட்டது. அதன் பிறகு அது பற்றித் தகவலே இல்லை. நஹாதா சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். ஜட்ஜுகள் பிலிமைப் போட்டுக் காண்பிக்கச் சொன்னார்கள். ஆனால் பிலிம் டிவிஷன் வசம் இருந்த பிலிம்சுருள் காணாமல் போய்விட்டது.

ஜனதா ஆட்சிக்கு வந்த பிறகு, பிலிமைத்திருடி எரித்துவிட்டதாக சுக்லா மீதும் சஞ்சய் மீதும் வழக்குத் தொடர்ந்தது. சஞ்சயின் மாருதி கார் பாக்டரியில் எரிக்கப்பட்டது என்று சாட்சி சொல்ல பாக்டரியைச் சேர்ந்தவர்கள் முன்வந்தார்கள்.

வழக்கு நீண்டநாள் தொடர ஒவ்வொரு சாட்சியாகப் பின்வாங்கினர். முதலில் கொடுத்த சாட்சியம் போலீஸ் உளவு இலாகாவின் நிர்ப்பந்தத்தினால் தந்ததாகச் சொன்னார்கள். சஞ்சய் காந்திதான் சாட்சிகளைப் பயமுறுத்தியோ லஞ்சம் கொடுத்தோ மாற்றி வருகிறார் என்று சொல்லி அரசு வக்கீல் அவர் ஜாமீனை ரத்து செய்யக் கோரினார். அதன் பேரில் சஞ்சய் ஒரு மாதம் சிறை வாசத்துக்குப் போனார். இந்திரா காந்தி, மகனை திஹார் ஜெயிலில் சந்தித்தார். ''குழந்தாய், தைரியமாக இரு. உனக்கு இன்றிலிருந்து புது வாழ்க்கை ஆரம்பமாகிவிட்டது'' என்றார்.

சஞ்சய் வெளியே வந்தபோது ஜனதா ஆட்சிப் பூசல் உச்ச கட்டத்தை எட்டியிருந்தது. சரண்சிங் மொரார்ஜி தேசாயை சர்வாதிகாரி என்று வர்ணித்து ''ஆண்மையற்ற ஆட்சி என்று மக்கள் நினைக்கிறார்கள்'' என்று அறிக்கை விட்டார். இந்திரா காந்தியைக் கைது செய்யாமல் விட்டு வைத்திருப்பதே செயல் திறமை இல்லாததற்கு சாட்சி என்றார்.

மொரார்ஜி வெகுண்டார். உள்துறை மந்திரியாக இருந்து கொண்டு இப்படிக் கண்டபடி பேசுவதா என்று சரண் சிங்கையும் உடல் நல மந்திரியாக இருந்த ராஜ்நாராயணனையும் ராஜினாமாச் செய்யச் சொன்னார்.

ராஜ்நாராயண் மொரார்ஜி பற்றியும் ஜனசங் பற்றியும் அவதூறாகப் பேசி வந்தார். மொரார்ஜியை அகற்றி சரண் சிங்கைப் பிரதமராக்குவேன் என்று சொல்லிக்கொண்டிருந்தார்;

சரண் சிங்கின் கோபம் பிரதமர் தன்னை எதற்கும் கலந்தாலோசிப்பதில்லை என்பது. கவர்னர், தூதுவர் நியமனம் எல்லாம் மொரார்ஜி ஆட்களாகவே தேர்ந்தெடுக் கப்பட்டனர். மாநில முதலமைச்சர்களும் கூட ஸ்தாபன காங்கிரஸ் அல்லது ஜனசங் நபர்களாக இருந்தனர். இரண்டாவது, சரண்சிங்குக்கு அடிக்கடி மார்வலி வந்து கொண்டிருந்தது, சாவதற்குள் பிரதமராகிவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தார்.

அவரது ஆசையைத் தூண்டிவிடும் வகையில் கமலாபதி திரி

பாதி. தேவராஜ் அர்ஸ் முதலான இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் அவரைச் சந்தித்து அவருக்குப் பிரதமராகும் வாய்ப்பு ஏற்படுமானால் இந்திரா காங்கிரஸ் ஆதரவு தரும் என்று வாக்களித்தனர். ஜனதா கட்சியிலிருந்து ஜனசங்கை வெளியேற்றி விட்டால் மொரார்ஜிக்கு ஆதரவு போய்விடும். சரண்சிங் சுலபமாகப் பிரதமராகிவிடலாம் என்று குறுக்கு வழி சொல்லிக் கொடுத்தனர். இந்தப் பின்னணியில் தான் மொரார்ஜி மீதும் ஜனசங் மீதும் சரண்சிங் — ராஜ்நாராயண் தாக்குதல் நடந்து கொண்டிருந்தது.



கடைக்காரர்: எந்த மாதிரி டிசைன்லே புடவை வேணுங்க?
பெண்மணி: பக்கத்து போர்ஷன் பத்மா பார்த்து பொறாமைப் படறமாதிரி டிசைன்லே வேணும்!
-லலிதா செல்லப்பா

மொரார்ஜியின் இன்னொரு பலவீனம் மகன் காந்தி தேசாய். சஞ்சய் காந்திமீது சுமத்தப்பட்ட அதிகார துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் காந்தி தேசாய் மீதும் சுமத்தப்பட்டது. சரண்சிங் இதையும் சுட்டிக் காட்டி மொரார்ஜியிடம் விளக்கம் கேட்டிருந்தார்.

காந்தி தேசாய் பற்றி தகவல் சேகரித்துத் தந்தது சஞ்சய்தான். பி. என். பாலசுப்பிரமணியம் என்று காந்தி தேசாய்க்கு அந்நியந்த நண்பர் ஒருவர் இருந்தார். குறுக்கு வழி வியாபார முறைகளில் காந்தி தேசாய்க்குப் பல வருடங்களாகவே கூட்டு இருந்தது.

பாலசுப்பிரமணியம் சஞ்சய் காந்தியின் மாமியார் அம்தேஷ்வர் ஆனந்துக்கும் தெரிந்தவர். ஜோர்பாக்கிலுள்ள அவரது வீட்டில் மாடியில் ஜாகை வைத்துக் கொண்டு அடிக்கடி வந்து கொண்டிருந்தார். அங்கே சஞ்சய் அவரைச் சந்தித்து பிரதமர் வீட்டு நடவடிக்கைகளைப் பற்றித் தகவல் சேகரித்து சில பத்திரிகைகளில் வெளிவரச் செய்தார். இந்தப் பத்திரிகைச் செய்திகளையே சுட்டிக் காட்டி சரண்சிங் மொரார்ஜியிடம் விளக்கம் கேட்டார்.

''ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகள் இவை; பார்க்கப்போனால் உங்களது மனைவி மருமகன் பற்றிக் கூட குற்றச்சாட்டுகள் காதில் விழுகின்றன'' என்று மொரார்ஜி பதிலுக்கு எழுதினார்.

''உங்கள் குடும்பம், எங்கள் குடும்பம் எல்லார் மீதே விசாரணை நடத்த வேண்டும்'' என்றார் சரண்சிங்.

மொரார்ஜிக்குப் பொறுக்கவில்லை. ஜனதா செயற்குழுவின் அனுமதியுடன் சரண்சிங் ராஜ்நாராயண் இருவரையும் பதவி கடத்தி விட்டார்.

இந்த விளைவு சஞ்சய் கோஷ்டிக்கு ஏமாற்றத்தைத் தந்தது. அதிகார செல்வாக்கின்றி சரண் சிங்குக்கு ஆதரவு இருக்காது என்று தெரிந்தது. அப்போது ஜனதா கட்சியிலிருந்து சரண்சிங் வெளியேறினால் முப்பது பேர் கூடப் போயிருக்க மாட்டார்கள். மொரார்ஜியின் பதவி இன்னும் உறுதியாகிவிடும்.

இதையடுத்து நிகழ்ந்தவையும் இந்திராவுக்குச் சாதகமாக இல்லை. நவம்பரில் சிக்மகளூரில் போட்டியிட்டு லோக்சபையில் இடம் பிடித்தார். அடுத்தநாளே பார்லிமெண்ட் கேள்விக்காக மாருதி கார் விவகாரத்தில் தகவல் சேகரிக்க முயன்ற அதிகாரிகளைத் தடுத்தார் என்ற அடிப்படையில் இந்திரா பார்லிமெண்ட் அவமதிப்புக் குற்றச்சாட்டுக்கு உள்ளானார். பல மாதங்கள் நடந்த விசாரணையில் இந்திரா ஆஜரானாலும் பதில் தர மறுத்து விட்டார். இதுவும் அவமதிப்புக் குற்றத்தில் கூடியது.

இந்திராவைப் பார்லிமெண்டிலிருந்து வெளியேற்றிச் சிறை தண்டனை வழங்கவேண்டும் என்று விவாதம் ஆரம்பித்தது. இந்திரா நடந்ததற்கு மன்னிப்புக் கேட்டால் எச்சரிக்கையுடன் விட்டு விடுவதாக ஜனதா அரசு முடிவெடுத்தது. ஆனால் இந்திரா மன்னிப்புக் கேட்க மறுத்து விட்டதுமன்றி ஜனதா கட்சியைப் பற்றியே நீண்ட கடுமையான குற்றப் பத்திரிகை படித்தார். முடிவில் மொரார்ஜியே இந்திராவை வெளியேற்றுவதோடு ஒரு வாரம் சிறை தண்டனையும் வழங்க வேண்டும் என்றும் முன்மொழிந்தார்.

இதன் மூலம் இந்திரா மீது கருணை காட்டுபவர் என்று சரண்சிங் சொல்லி வந்த பழி நீங்கிவிட்டது என்று நினைத்தார்.

இந்திரா மீது எடுக்கப்பட்ட கடுமையான நடவடிக்கை இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பாதிக்க, அது நாடெங்கிலும் கண்டனக் கூட்டங்கள், ரகளைகளை நடத்தியது. ஆனால் கட்சிக்கு வெளியே பொதுமக்கள் யாரும் கலந்துகொள்ளவில்லை.

சரண்சிங் தன்னுடைய பலவீனத்தை உணர்ந்துகொண்டு ஜனசங், சோஷலிஸ்ட் தலைவர்களிடம் பொரிகடன் மீண்டும் மந்திரி பதவி ஏற்றார். மொரார்ஜியின் நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டி வந்தது.

உள்துறைக்குப் பதில் துணைப் பிரதமர் என்ற அந்தஸ்துடன் நிதி இலாகா. அவருக்கு சமமாக ஜகஜீவன்ராமும் துணை பிரதமரானார். ராஜ்நாராயணனை மந்திரி சபையில் மீண்டும் அனுமதிக்க மொரார்ஜி மறுத்து விட்டார்.

பிப்ரவரி இறுதியில் கிஸ்ஸா குர்ஸிகா வழக்கில் செஷன்ஸ் கோர்ட்டு தீர்ப்பு வழங்கியது. சஞ்சய் காந்தி வி. சி. சுக்லா இருவரும் இரண்டாண்டுகள் கடுங்காவல் தண்டனை பெற்றனர். இதனால் ஆறு வருடங்களுக்குத் தேர்தல்களில் போட்டியிடும் தகுதியையும் இழந்தனர்.

இருவரும் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து ஜாமீனில் வெளியே வந்துவிட்டனர்.

இந்திரா-சஞ்சய் மீது மொரார்ஜி இனியும் கருணை காட்டத் தயாராக இல்லை. இந்திரா மீது 17 குற்றப் பத்திரிகைகள் சஞ்சய் மீது பன்னிரண்டு என்று தாக்கல் செய்து அவற்றைக் குறுகிய காலத்தில் விசாரித்து முடிக்க விசேஷக் கோர்ட்டுகள் இரண்டை ஏற்படுத்தினர். சஞ்சயின் கிஸ்ஸா குர்ஸிகா'

அப்பீல் நேராக சுப்ரீம் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது?

இந்திரா காந்தியின் அரசியல் போராட்டம் தோல்வியிலேயே முடிந்து விட்டது போல் தோன்றியது. பார்லிமெண்டுக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் நல்லது என்று நினைத்தார். தஞ்சாவூரில் ஓர் இடைத் தேர்தல் நடக்க இருந்தது. முதல்வர் எம். ஜி. ஆர். இந்திராவுக்கு ஆதரவு தருவதாக வாக்களித்தார். ஆனால் வேட்பாளர் மனு தாக்கலாக இருந்த சிலமணி நேரத்துக்கு முன்னால் பின்வாங்கி விட்டார். மொரார்ஜி எம். ஜி. ஆரை மிரட்டிப் பயமுறுத்தினர் என்று இந்திரா கட்சியினர் திட்டினர்.

இந்திராவுக்கு ஏற்பட்ட இன்னொரு சறுக்கல் தேவராஜ் அர்ஸ் கோபித்துக் கொண்டு கட்சியை விட்டு விலகினது. சஞ்சய் காந்தியோடு அவருக்கு ஒத்துவரவில்லை. கர்நாடக இந்திரா காங்கிரஸ் கட்சியில் குண்டுராவ், எப். எம். கான் போன்ற சஞ்சய் ஆதரவாளர்கள் தேவராஜ் அர்ஸைப் பதவி கடத்த முயன்றனர். இந்திராவை விடத் தனக்குத்தான் கர்நாடக ராஜ்யத்தில் செல்வாக்கு அதிகம் என்று தேவராஜ் அர்ஸ் பறைசாற்றிக் கொண்டிருந்தார். அவர் இந்திரா ஆதரவாளர்களை அனுப்பிவிட்டு ஜனதா கட்சித் துணையுடன் முதல்வராகப் பதவியில் நீடித்தார்.

சவானின் காங்கிரஸ் கட்சியும் அர்ஸை இரு கரம் நீட்டித் தலைவராக ஏற்றுக்கொண்டது. இந்திரா காந்திக்கு நம்பிக்கை தளர்ந்து போய்விட்டது. ஜனதா ஆட்சியைக் கவிழ்க்கும் திட்டங்கள் ஒன்றும் பலனளிக்கவில்லை.

இதனிடையில் ஜனதா ஆட்சி உட்பூசல் மீண்டும் வலுத்தது. சரண் சிங்கின் பட்ஜெட் தாறுமாறாக விலையை உயர்த்திவிட ஆட்சி மக்களிடையே செல்வாக்கு இழக்க ஆரம்பித்தது. உத்தரப் பிரதேசத்தில் ஜனசங்குக்கும் சரண்சிங்கின் கட்சிக்கும் வெளிப்படையாகவே மோதல் ஏற்பட்டு விட்டது. சரண்சிங் நியமித்த முதல்வர் ஜனசங் மந்திரிகளைக் கூண்டோடு வெளியேற்றிவிட்டார்.

இதையொட்டி டில்லியிலும் சரண்சிங் கோஷ்டிக்கும் ஜனசங் தலைவர்களுக்கும் பூசல் ஏற்பட்டது.

மீண்டும் ஒருமுறை சரண்சிங்கைத் தூண்டிவிட்டு மொரார்ஜி ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்று சஞ்சய் காந்தி திட்டம் போட்டார்.

ராஜ்நாராயணனை அவர் ரகசியமாகச் சந்தித்துப் பேசினார். சரண் சிங் ஜனதா கட்சியை விட்டு வெளியேறினால் 100 பேராவது தொடர்ந்து வருவார்கள் என்று ராஜ்நாராயண் சொன்னார். அப்படியானால் இந்திரா கட்சி ஆதரவுடன் சரண்சிங் பிரதமராகலாம் என்று உறுதி தந்தார் சஞ்சய்.

மொரார்ஜி மீது மீண்டும் காந்தி தேசாய் சம்பந்தப்பட்ட பழி சுமந்தது. இம்முறை அவற்றுக்கு நிறைய ஆதாரங்கள் கிடைத்தன. பாலசுப்பிரமணியத்துக்கும் காந்தி தேசாய்க்கும் சண்டை ஏற்பட்டு பிரதமருடன் அயல் நாட்டுப் பிரயாணம் செய்தபோது எப்படி காந்தி தேசாய் பல விலை உயர்ந்த பொருள்களைக் கடத்திக் கொண்டு வருவார் என்று பாலசுப்பிரமணியம் சொன்னார்.

ராஜ்ய சபையிலும் இந்திரா காங்கிரஸ் இவ்விவகாரத்தைக் கிளப்பியது. தன் மெஜாரிட்டியைப் பயன்படுத்தி மொரார்ஜி சரண் சிங் குடும்பத்தினர் மீது உள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஒரு கமிட்டி நியமிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. மொரார்ஜி கமிட்டி நியமனத்துக்கு இணங்கவில்லை. ஆனால் சுப்ரீம் கோர்ட் நீதிபதி விசாரணைக்குத் தயார் என்றார். பாலசுப்பிரமணியம் சரண் சிங்கைச் சந்தித்து காந்தி தேசாய் சம்பந்தப்பட்ட தகவல் அனைத்தையும் டேப் ரிகார்டரில் பதிவு செய்து கொடுத்தார். இதன் பின்னர் அவர் ஜெர்மனிக்கு ஓடிவிட்டார்.

மொரார்ஜி ஜூன் முதல் வாரம் நீண்ட வெளி நாட்டுப் பிரயாணம் போனார். அவர் திரும்புவதற்குள் ராஜ்நாராயணனின் கைவரிசை ஜனதா கட்சியையே ஆட்டம் காணச் செய்துவிட்டது. (தொடரும்)



**ராஜா மந்திரியாவதா?**

பனகல் அரசர் முன்பு சென்னை மாநில மந்திரி சபையை அமைத்தார். முதலில் உறுதி மொழி யளித்து விட்டுப் பின்னால் ஏனோ சேதுபதி மன்னரை மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ளவில்லை.

ஏமாற்றம் அடைந்தார் சேதுபதி அரசர்.

அச்சமயம் தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையர் அவரைப் பார்க்கச் சென்றார். அரசர் வரவேற்றதிலும் இயல்பான முக மலர்ச்சி இல்லை: ஐயரவர்கள் 'ஒரு மகிழ்ச்சியான செய்தியைக் கேள்விப் பட்டேன்'' என்றார், அரசர் வியப்புடன் தலை நிமிர்ந்து பார்த்தார். ''ராஜாவுக்கு டி - ப்ரமோஷன் ஆகவில்லையாம், அது பெரிய சந்தோஷமான சமாசாரம் தானே! மந்திரி ராஜா ஆனால் அது முறை. ராஜா மந்திரியாவது பதவிக் குறைவு அல்லவா?'' என்றார். அரசர் முகம் மலர்ந்தது. (கி. வா. ஜ. சொற்பொழிவிலிருந்து) - என். எஸ். முத்துகிருஷ்ணராஜா

---

விஜி: ஏகமா புதுப் பொம்மைகள் வாங்கியிருக்கே போலிருக்கே, என்ன இதெல்லாம்?

சரோஜா: முதல் படி சினிமா கியூ பொம்மை செட், இரண்டாவது படி ரேஷன் கியூ பொம்மை செட், மூன்றாவது படி கார்ப்பரேஷன் குழாய் கியூ பொம்மை செட், நாலாவது பால் டிப்போ கியூ பொம்மை செட்,...'' - லலிதா செல்லப்பா



# இவர்கள் விமர்சித்தால்...

(நாலு பேர் அவர்கள் பார்த்த சினிமாவை அவர்களின் பாணியில் விமர்சிக்கிறார்கள்.)

**கண்டக்டர்:** ஓவர்லோடு ஏற்றிய பஸ் மாதிரி ஒரே நடிகர் கூட்டம். யார், என்ன உறவு என்று புரிந்து கொள்வதற்குள் படம் பாதி முடிந்து விடுகிறது. ஏறியவுடன் முன்னால் வராமல் 'ஃபுட்போர்டிலேயே நின்று விடுகிற மாதிரி நடிப்பில் எல்லோரும் பின் தங்கியே நிற்கிறார்கள். அங்கங்கே நின்று நின்று போகும்கதை இண்டர்வெலுக்குப் பின் ஸ்டாப்பிங்கே இல்லாமல் விரைகிறது. ஹீரோயின் மேல் சந்தேகப்பட்டு ஹீரோ செய்யும் காரியங்கள் தப்பான ரூட்டில் செல்கின்றன. ஹீரோயின் கிளைமாக்ஸில் தன் புனிதத்தை நிரூபிக்கும்போது டபுள் விசில் கொடுக்கத் தூண்டுகிறது.

**குடிகாரர்:** சரியான கதை அமைப்பு இல்லாமல் படம் தள்ளாடுகிறது. ஹீரோயின் பெயர் கடைசி வரை என் காதில் 'போதை' என்றே கேட்டது. பிறகு தான் அருகில் இருந்தவரைக் கேட்டேன். அவள் பெயர் 'கோதை'யாம்! சில காட்சிகளுக்கு எப்படி சென்ஸார் 'பர்மிட்' கொடுத்தார்கள்? இண்டர்வெலுக்குப் பின் வழக்கமான 'கலக்கல்' கதை. ஹீரோயின் விதிவசத்தால் கெட்டுப் போவதை விளக்க விஸ்கியையும் சோடாவையும் காண்பிப்பது புதுமை. 'நிறையப் போட்டுவிட்டோமோ? ஹீரோயின் இரட்டையாகத் தெரிகிறாளே' என்று கிளைமாக்ஸ் சீனில் சந்தேகப்பட்டு விசாரித்ததில் புரிந்தது ஹீரோயின் டபுள் ரோலாம். சீரியஸான படத்தில் ஒரே ஒரு நகைச்சுவை. படத்தில் வரும் குடிகாரன் சொல்வது: ''குடி போதையில் கழுதை எப்படிக் கத்தும் தெரியுமா? கள்...கள்... என்று.''




**நடுத்தரக் குடும்பத்துக்காரர்:** ஹீரோ குடியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரரைப் பார்த்தவுடன் பரிதாபம் ஏற்படுகிறது. 'எப்படித் தன் நாலு பெண்களுக்கும் திருமணம் செய்து வைப்பார் என்று. தன் பெண்களில் ஒருத்தியையாவது ஹீரோவுக்குக் கட்டி வைத்துவிட அவர் எடுக்கும் முயற்சிகள் என்னைக் கலங்க வைத்து விட்டன. திருமணத்தைக்குறித்து ஹீரோ தன் கொள்கைகளை விவரிக்கும்போது ('டௌரி வாங்க மாட்டேன் இத்யாதி) புல்லரிக்கிறது. 'இன்னும் மூன்று பேர் கிடைக்க மாட்டார்களா' என்ற ஏக்கம் வேறு. கடைசியில் ஹீரோ யாரோ ஓர் அநாதைக்குத் தாலி கட்டும்போது எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.




என் கவலை புரியாமல் தியேட்டரில் மற்றவர்கள் படம் முழுவதும் சிரித்துக் கொண்டிருந்தனர். என்னதான் நகைச்சுவைப் படமானாலும் கிண்டல் செய்ய வேறு விஷயமா கிடைக்கவில்லை?

**அரசியல்வாதி:** பட்டிக்காட்டி விருந்து வரும் ஹீரோ யாரைப் பார்த்தாலும் கும்பிடுவது தேர்தலை நினைவூட்டியது. தன்னைக் காப்பாற்றியவருக்கு அவன் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற இயலாமல் போகும்போது படத்தில் சூடு பிடிக்கிறது. பணத்திற்கு ஆசைப்பட்டு வில்லன் செய்யும் தவறுகளால் ஹீரோ கொதித்து எழும்போது தியேட்டரில் ஒரே கைகலப்பு. 'முன் சீட்டுக்காரர் மறைக்கிறார்' என்று. வில்லன் மகள் கட்சி மாறி ஹீரோவைக் காதலிப்பது படத்தில் சுவையான அம்சம். கதையில் பிரச்சினைகள் வரும்போது ஒரு பாடலை நுழைத்து விடுவது நல்ல முயற்சி. உருப்படியாக ஏதாவது செய்வார்கள் என்று கடைசிவரை எதிர்பார்க்க வைப்பது தேர்தல் வாக்குறுதிகளை நினைவூட்டுகிறது.

—கற்பனையில் பேட்டி கண்டவர் **ரோகிணி**







## ஸிக்ஸரா? அவுட்டா?

தியோதர் கோப்பை பந்தயத்தின் இறுதி நாள். தென் பிராந்தியக் குழுவின் ஹீரோ டி. ஈ. சீனிவாசன் சக்கைப்போடு போட்டுக் கொண்டிருந்தார். தியோதர் கோப்பைப் பந்தயத்திலே அவரது ரிகார்டு ஸ்கோரான 112த் தாண்டிப் புதிய சாதனை நிகழ்த்திக் கொண்டிருந்தார். 167 நிமிஷங்கள் நின்று ஆடி, 12 பவுண்டரிகளையும் 5 ஸிக்ஸர்களையும் விளாசி 129 ரன்களைக் குவித்தார்.

டி. ஈ. சீனிவாசன் நான்காவது ஸிக்ஸரை அடித்தபோது பவுண்டரி எல்லையில் மேற்கத்திய பிரிவைச் சேர்ந்த வினித் வட்கர் அற்புதமாக காட்ச்சைப் பிடித்துவிட்டார்! டி. ஈ. சீனிவாசன் ''அவுட்'' என்று அனைவரும் நிச்சயம் செய்துவிட்டார்கள். ஆனால் பந்தைப் பிடித்த வேகத்துடன் வினித் வட்கர் பவுண்டரி எல்லையைக் கடந்து, வெளியே வந்து விட்டார்!

நடுவர் ஸ்வரூப் திடுதிடுவென்று வினித் வட்கர் நின்ற இடத்துக்கு ஓடிவந்தார்! பவுண்டரி எல்லையை வினித் வட்கர் கடந்துவிட்டதை நிச்சயப்படுத்திக் கொண்டதும் டி. ஈ. சீனிவாசன் 'அவுட்' இல்லை என்று அறிவுறுத்தினார்.

இம்பீரியல் கிரிக்கெட் கான்பரன்ஸில் 1980ம் வருஷம் நிறைவேறிய புதிய சட்டத்தின்படி பந்தை எல்லைக் கோட்டுக்கு முன் பிடித்து, எல்லையைக் கடந்துவிட்டால் அந்தக் 'காட்ச்' செல்லுபடியாகாது.

புச்சி பாபு இறுதி ஆட்டத்திலும் சந்தோஷ்குமார் அடித்த பந்தை டி. ஈ. சீனிவாசன் பிடித்து, பவுண்டரி எல்லை கடந்துவிடவே, இந்தப் பிரச்னை தலைதூக்கியது. ஆனால் சந்தோஷ்குமார் தாமாகவே 'அவுட்' என்று கருதி மைதானத்தை விட்டுச் சென்றுவிட்டார்! நடுவர் 'அவுட்' இல்லை என்று அறிவித்ததை அவர் கவனிக்கவில்லை. ஆகவே, அந்தப் பந்தயத்தில் சந்தோஷ் குமார் 'Retired out' ஆனார்!

- குண்டுமணி

படம்: பாலாஜி

## இதோ விலைச் சரிவு!

நியூஸ் பிரிண்ட் காகிதத்தின் விலை உயர்வு காரணமாகத் தினசரிகள், சஞ்சிகைகளின் விலைகள் அதிகரித்துள்ளன. ஆனால் பழைய பேப்பர் விலை, தற்போது குறைந்துவிட்டது. காரணம் என்ன?

எம். எல். புஜாரா சொல்கிறார்: சில சீஸன்களில் பழைய பேப்பர் தேவை அதிகரிக்கிறது. விலை அதிகமாகிறது. மற்ற நேரங்களில் சரிகிறது. உதாரணமாக சிவகாசி, பழைய பேப்பர் விலை நிர்ணயத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. தீபாவளிக்காகப் பட்டாசுகள் ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலேயே தயாரிக்க ஆரம்பிக்கப் பட்டுவிடுகின்றன. இந்தக் காலத்தில் சிவகாசியின் தேவை சுமார் 40 டன் பேப்பர். ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் தயாரிப்பு மும்முரம் குறைந்து, தயாரிக்கப்பட்டவற்றை மற்ற இடங்களுக்கு அனுப்ப ஆரம்பித்து விடுகின்றனர். இந்தக் காலத்தில் காகிதத் தேவை குறைவு. இதன் காரணமாய் விலையும் சரிகிறது. பழைய பேப்பர் விலை அதன் தேவையைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுகிறதே தவிர, நியூஸ் பிரிண்ட் விலையைப் பொறுத்து அல்ல.

பேட்டி: எஸ். சந்திரமௌலி



எம்.எல்.புஜாரா

# GH

## பி.வி.ஆர்.

## அத்தியாயம் 9

குஞ்சிதபாதத்தை (வயது 57) அவருடைய எண்பது வயது அம்மாவும் அறுபத்து நாலு வயது அக்காவும் 'குஞ்சு' என்று அழைத்தார்கள். தம்பியும் தங்கையும் குஞ்சண்ணா என்று கூப்பிட்டார்கள். அவரிடமே ஜூனியராகக் கறுப்புக் கோட்டு அணியும் பிள்ளை மோகன் ,ஹோம் ஸயன்ஸ் விஷயமாக (சமையலறையை எப்படிச் சுத்தமாக வைத்துக்கொள்வது, என்ற ஆராய்ச்சியும் அதில் அடங்கியிருக்கிறதோ என்னமோ?) யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்காவுக்கு அட்லாண்டிக், பஸிபிக் இரு திசைகளிலும் பல முறை சென்றிருக்கும் பெண் பாமா, உலகமே இருபத்திரண்டு கஜ தூரத்துக்கிடையே உள்ள விக்கட்டுகளைச் சுற்றித்தான் இருக்கிறது என்று எண்ணி வாழ்கிற பிள்ளை விசுவனாத் (விசுவனாதன் என்றுதான் பெயர். ஜி. ஆர். விசுவநாத்துக்கு மரியாதை செலுத்தத் 'தன்'னை அழித்து 'த்' போட்டுக் கொண்டான்) இவர்களெல்லாம் குஞ்சப்பா என்று அழைத்தார்கள். சட்சிக்காரர்கள் குமாஸ்தாக்கள் எல்லாரும் ஐயா சார் என்று குழைந்தார்கள். மனைவி பெயர் சொல்லவில்லை.

குஞ்சிதபாதத்தின் வீடு — அது உண்மையில் ஒரு பங்களா — ஒரு சமுத்திரம். யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் எத்தனை நாட்கள் தங்கி எவ்வளவு வேலைகள் வாய்க்கும் கைக்கும் போர் நடத்திக் கொள்ளுகிறார்கள் என்பது கடவுளுக்குத்தான் தெரியும். சமையற்காரி காவேரிக்கோ 'சித்து'க் காரியம் செய்யும் அம்மாஞ்சிக்கோ (குஞ்சுவின் மனைவிக்கு மாமா பிள்ளை. மண்டையில் ரத்தம் வேறு வழியில்லாமல் ஏறியது. ஆனால் படிப்பு ஏறவில்லை. மாமாவின் பாரத்தை மிஸர்ஸ் சுந்தரி குஞ்சு ஏற்றுக்கொண்டாள். இப்போது வயது முப்பது) கூடத் தெரியாது. சொந்தக்காரர்கள் சிநேகிதர்கள் இஷ்டப்படி வந்தார்கள், போனார்கள். பம்பாய் போகிறவர், கல்கத்தாவிலிருந்து சொந்த ஊர் திரும்புகிறவர், பெண்ணுக்கு ஜாதகம் பார்க்க, பிள்ளைக்குப் பெண் பார்க்க சங்கீத ஸீஸன், அடையாறு கலாக்ஷேத்திரா ஸீஸன், இவற்றை அனுபவிக்க — இன்னும் எத்தனை எத்தனையோ காரியங்களை முன்னிட்டு வருகிறவர்களுக்கெல்லாம் குஞ்சிதபாதத்தின் வீடு மயன் நிர்மாணித்த சொர்க்க பூமியாகத் திகழ்ந்தது.

வக்கீல் தொழிலில் மாதம் சுமாராகப் பத்துப் பன்னிரண்டாயிரம் வந்தது. ஆனால் அவர் ஷர்ட் பாக்கெட்டில் வேர்க்கடலை வாங்கப் பத்து பைசா இராது. வங்கியில் ஜாயிண்ட் அக்கௌண்ட். மிஸர்ஸ் சுந்தரி குஞ்சு அதைக் கவனித்துக் கொண்டார். கட்சிக்காரர்களிடமிருந்து ஃபீஸை ரொக்கமாகவோ, செக்காகவோ அவர் வாங்குவதோடு பணத்தைப் பற்றிய பொறுப்புத் தீர்ந்தது. வைர மூக்குத்தியிலிருந்து பூந்துடப்பம் வரை அவள் கவனித்துக்கொண்டாள். பாவம், குஞ்சிதபாதத்துக்கு எங்கே ஓய்ச்சல் ஒழிவு? அதிகாலை நான்கு மணிக்கு ஆரம்பித்தால் இரவு ஒன்பது வரை, இன்கம் டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ் கேஸ்கள்தானே? பண விஷயங்களில் அனாவசியமாக அவரைத் தொந்தரவு செய்வதோ அவற்றில் அவரை ஈடுபடுத்துவதோ மகா பாவம். இது அவளுடைய கருத்து.

இப்படிப்பட்ட குஞ்சிதபாதத்துக்கு 978ம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி மாலை நான்கு மணிக்குத் திடீரென்று மயக்கம் வந்தது. எல்லோரும் ஒன்றும் புரியாமல் சிலையாக நின்றார்கள். பணம் பண்ணும் ஒரு இயந்திரம் பழுதாகிப் போவது பற்றி மிகவும் கவலை கொண்டு, அக்கவலையில் செய்வதறியாது திகைத்தார்கள். ஜூனியர் வக்கீல் அப்பாவின் கையிருப்பில் இருக்கும் கேஸ்களைப் பற்றி யோசித்தான். ஏற்கனவே டெட்ராய்டுக்கு டிக்கெட் வாங்கிவிட்ட பாமா தான் விமானம் ஏறிய பிறகு மயங்கி விழுந்திருக்கக் கூடாதா என்று மயக்கத்தையே சபித்தாள். அக்கா பார்வதியும் அம்மாவும் இரு பெரிய நிபுணர்களைப் போலக் கலந்தாலோசித்துக் கடைசியில் பித்தம் தலைக்கேறியதால் வந்த கோளாறு என்று முடிவுக்கு வந்தார்கள். அக்கா அவர் முகத்தில் நீர் தெளித்து சீரகக் கஷாயம் கொடுக்க முற்பட, தாயார் தெய்வ அனுகூலமும் தேவைப்படலாம் என்ற எண்ணத்தில் நாராயணர் தைலத்தை அவர் மார்பில் தடவினாள்.

முகலாய சாம்ராஜ்யத்தை ஸ்தாபனம் செய்தவன் கனிஷ்கன் என்று பள்ளிக்கூடத்தில் அசையாத நம்பிக்கையுடன் பல முறை எழுதிய அம்மாஞ்சி ஒருவன்தான் சமய சஞ்சீவியாக வந்தான். அம்மங்காவின் புருஷனுக்கு ஏதோ பயங்கரமாக ஒன்று வந்திருக்கிறது என்ற எண்ணம் அவனுக்கு மட்டுமே தோன்றியது. டாக்டருக்கு போன் செய்தான். டாக்டர் வந்தார். குஞ்சிதபாதத்தை அன்றே ஜி. எச்.சில் 'அட்மிட்' பண்ணினார்கள். சீரகக் கஷாயத்தை அக்கா பார்வதியே முழுங்கினாள்.

பிளட் பிரஷர்.

ஹைபர் டென்ஷன்.

220 — 130.

220 பரவாயில்லை.

130தான் ஆபத்து.

'சட்'டென்றும் குறைக்கக்கூடாது. மெல்ல மெல்ல குறைக்க வேண்டும். 'நார்மலா' இருக்க வேண்டியது 120 — 80. அஞ்சு பத்து மேலே போனால் பரவாயில்லை. ஆனால் 130? — எண்பதிலிருந்து நூற்றி முப்பது?

டேஞ்சரஸ்!

ஹார்ட்டை அஃபெக்ட் பண்ணும். கிட்னியை அஃபெக்ட் பண்ணும். ஹார்ட் கிட்னி இரண்டும் சோர்வு அடைந்தால் லிவர் படாத பாடு படும்.

ஹார்ட் — கிட்னி — லிவர்.

இந்த மும்மூர்த்திகளின் ஒத்துழைப்பு இருந்தால்தான்—

உடல் இயங்கும்.

ஜீவன் ஓடும்.

ஜி. எச். டாக்டர்கள் இருபது நாட்கள் குஞ்சிதபாதத்தை வைத்துக் கொண்டு வைத்தியம் செய்தார்கள். கூடவே தங்களுடைய வருமான வரி சிக்கல்களுக்கு வழி கேட்டார்கள்.

அந்த இருபது நாள் அனுபவம் ஒரு பேருண்மையை குஞ்சிதபாதத்துக்குத் தேடித் தந்தது:

அந்தக் காலத்தில் தனிமையை நாடி, ஏகாந்தத்தைத்தேடி மலைகளுக்கும் குகைகளுக்கும் சென்றார்கள். காடுகளில் அலைந்தார்கள். ஆனால் இப்போது அது முடியாது. மலைகளுக்கு எப்போது போகலாம் என்று நாகரிகம் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறது. ஏப்ரல் — மே முதல் சீஸன். செப்டம்பர் இரண்டாவது சீஸன். காடுகளைப் பற்றி ஒன்றும் கேட்க வேண்டாம். காட்டிலாகா மும்முரமாக மரங்களை வெட்டிக் கொண்டிருக்கிறது. ஏலங்கள் போட்ட வண்ணம் இருக்கிறது.

இந்தக் காலத்தில் மற்றவர் தொந்தரவு இல்லாமல், தனக்குத் தானே வாழ ஒரே இடம் ஜி. எச்.தான். நிறையப் பணம் கொடுத்தால் தனி அறை. சகல வசதிகள்.

அதன் பிறகு குஞ்சிதபாதம் அலுத்துக் கொள்ளும்போதெல்லாம் யாரும் அறியாமல் ஜி. எச்.சைப் புகலிடமாகக் கொண்டார். ஒரு வாரம், பத்து நாள் என்று ஓய்வு எடுத்துக் கொண்டார். இடமே இல்லாத ரெயிலில் டிக்கெட்டைக் கடைசி நிமிஷத்தில் வாங்க முடிகிறது. டெஸ்ட் மாட்சுக்குப் பந்தய ஆரம்பத்துக்குப் பத்து நிமிடம்



இருக்கையில் எவ்வளவு டிக்கட்டுகள் வேண்டுமானாலும் வாங்க முடிகிறது.

ஜி. எச்.சில் ஒரு ஸ்பெஷல் வார்டா பெற முடியாது? எங்கே தட்டினால் என்ன திறக்கும் என்பதை குஞ்சிதபாதம் அறிந்தார்.

அன்று இரவு ஒன்பதரை மணிக்கு ஈரமான பூந்தமல்லி வெற்றிலையைப் பட்டுப் புடவையில் துடைத்தவளாய் சுந்தரி கணவரின் அறைக்குள் பிரவேசித்தாள்.

அறையின் நட்ட நடுவே ஒரு பத்துக்கு அஞ்சு மேஜை. அந்த நீள அகலத்துக்கு பில்கிங்டன் கண்ணாடி. இடது ஓரத்தில் கைக்கெட்டும் தூரத்தில் ஏழெட்டு பைல்கள் (தமிழில் கோப்புகள்.) வலது ஓரத்தில் கைக்கு எட்டாத தூரத்தில் பால்கிவாலாவின் வருமான வரிப் புத்தகம்.

குஞ்சிதபாதம் ஸ்ரீராமஜெயம் எழுதிக் கொண்டிருந்தார். குமாஸ்தா வாரத்துக்கு ஒரு முறை வெள்ளைத் தாள்களில் குறுக்காக இருபத்தேழு கோடுகளும் நெடுக்காக மூன்று கோடுகளும் இழுப்பார். காலியான இடங்களைத் தினமும் இரவு நேரத்தில் குஞ்சிதபாதம் நிரப்புவார்.

''ஸ்ரீராமஜெயம்''.

108 ஆனதும் இருக்கையை விட்டு எழுந்திருப்பார். ஒரு 'காம்போஸ்' மாத்திரையை நீர்த்த மோருடன் விழுங்குவார்.

''என்ன இன்னும் முடியலையா?''

சுந்தரி வரும் முன்பே ஒரு மணம் வருவதாக குஞ்சிதபாதத்துக்குத் தோன்றும்.

அதை அவர் அந்த நாளிலிருந்து உணர்ந்திருக்கிறார். அவள் அருகே வந்ததும் மணம் போய்விட்டதாகவும் தோன்றும். என்ன மணம்? கூந்தலா? அல்லது உடலிலிருந்து அபூர்வமாக ஏதாவது வாசனை வீசுகிறதா? இயற்கையா, செயற்கையா? யாரிடம் கேட்பது? பரமசிவனிடம் கேட்கலாம் என்றால் அவர் அவ்வளவு எளிதில் தோன்ற மாட்டார். நக்கீரன் செத்துப் போயாகிவிட்டது.

''என்ன இன்னும் எழுதி முடிக்கலையா?''

105, 106, 107, 108.

அவர் கை ஓய்ந்தது.

''பேனாவை மூடி வைச்சுட்டு என் மூஞ்சியைக் கொஞ்சம் பாருங்கோ!''

குஞ்சிதபாதம் நிமிர்ந்தார். ''என்ன சுந்தரி? என்ன வேணும்?''

''ஏன் உங்க குரல் இப்படி அலுத்துக்கிறது? இப்ப நான் உங்க மடி மேலே உட்கார வரலே.....''

''அதான் ஆசை தீர உட்கார்ந்தாச்சே... இப்ப என் தலைதான் தேயாம இருக்கு. அது மேலேதான் எல்லோரும் நின்னு காளிங்க நர்த்தனம் பண்றேளே, போதாதா?''

சுந்தரி 'பால்கிவாலா'வைத் தூக்கிக் கோப்புகள் பக்கமாகத் தள்ளினாள். பிறகு மேஜை மேல் பக்க வாட்டமாக உட்கார்ந்து கால்களை ஆட்ட ஆரம்பித்தாள்.

''பணம் சம்பாதிக்கத் தர்ற மேஜை. அதை இப்படி அலட்சியப்படுத்தாதே.. நாற்காலியில் உட்காரு, சுந்தரி!''

''நான் என்ன அதன் மேலே துப்பவா துப்பினேன்?''

''ஓ.கே. என்ன விஷயம்?''

''உங்களுக்கு ரெண்டு பிள்ளை, ஒரு பெண். மூணையும் நான்தான் மொத்தமா முப்பது மாசம் சுமந்து பெத்தேன்.''

''விசுவும் பாமாவும் ஒன்பதாம் மாதமே வெளியே வந்துட்டா போலிருக்கே?''

''நான் உங்களோட விளையாட வரலே!''

சுந்தரி குள்ளம்தான். ஆனால் மேஜைமேல் உட்கார்ந்தபோது உயரமாகத்தான் தெரிந்தாள். வெற்றிலைக்கும் அவளுக்கும் ஏதோ ஓர் ஒப்பந்தம் இருக்க வேண்டும். உதடுகள் சிகப்பை அள்ளிக் கொட்டின. பற்கள் நேர்த்தியாக, அழகாக பளிங்கு போல் இருந்ததால் அவள் வாய் திறந்தபோதெல்லாம் ரசிக்கும்படியாக இருந்தது.

குஞ்சிதபாதம் அவளையே நீண்ட காலம் ரசித்திருந்ததாலோ என்னவோ அன்று அவளுடைய பல் அழகை (அது பாதி அழகாமே!) ரசிக்கவில்லை.

''நான் டயர்டா இருக்கேன்.....''

''உங்களைத் தொந்தரவு செய்ய வரலே வரலே வரலே. தொந்தரவு செய்து மாசக் கணக்காச்சு.''

''என்ன விஷயம் சுந்தரி?''

''சாகிறவரையில் எனக்கு மாமியார், நாத்தனார் அவசியம்தானா? தேவை தானா?''

''யார் சாகிறவரையில் சுந்தரி? அம்மாவும் அக்காவுமா இல்லே நானா?''

''உங்க மூணு பேருக்கும் கெட்டி ஜாதகம். மாரக தசையே கிடையாது... நான் சாகிற வரையில்....''

''நீ சாகப் போறியா, என்னால் நம்பவே முடியலையே..... நான் பார்த்தாச்சா?''

''எனக்குக் கோபம் வர்றது.''

''நான் சாந்தமாக இருக்கேன் சொல்லு.''

''நான் நின்னு ஆயிரம் பேர் பொண்களைத் தங்கத் தாம்பாளத்திலே உட்காரவைச்சுண்டு மோகனைத் தேடிண்டு வரா.''

''சரி வரா.''

''வர்ற ஜப்பசியிலே பாமா கேக் வெட்டுவா....''

''ஏன் இப்ப கேக் ரெடியா இல்லையா?''

''இருபத்து நாலு நிறைஞ்சு இருபத்தைஞ்சு ஆயிடும். ஒரு பெண்ணோட உடம்பு முத்தின முருங்கைக் காயா ஆயிட்டா அவ்வளவுதான். அப்புறம் நாங்க பெத்த



அவர்: ''என் புதிய பத்திரிகையை வீட்டுக்கு வீடு ஆவலுடன் எதிர்பார்ப்பாங்க!''

இவர்: ''எந்த நம்பிக்கையில் சொல்றீங்க?''

அவர்: ''பத்திரிகையின் பேர் 'போஸ்ட்மேன்' ஆச்சே...?!''

- உ. ராஜாஜி

மாதிரி அவளாலே பெற முடியாது: சிலரை வெளியே கொண்டு வந்த மாதிரித்தான் குழந்தையைக் கொண்டு வரவேண்டியிருக்கும்.''

''சுந்தரி.''

''என்ன?''

''நம்ம பாமாவுக்கு இன்னும் கல்யாணம் ஆகலே இல்லையா?''

''என்ன உளர்றேள்?''

''அவ பிரசவத்தைப் பத்திப் பேசினே! ஒரு நிமிஷம் பயந்துட்டேன்.''

''தப்பு வழியிலே போறவ இல்லே நம்ம பெண்!''

''சரி சொல்லு.''

''கோபிச் செட்டிப் பாளையம், கோபிச் செட்டிப்பாளையம்னு ஓர் ஊர் இருக்கு. இத்தனை வருஷமா கோயமுத்தூர் ஜில்லாவிலே இருந்தது....''

''ஏன், அந்த ஜில்லாவுக்கு என்ன நேர்ந்தது?''

''அலறுதீங்கோ. ஒன்னும் நேரலே... அதை ரெண்டாக்கி கோவை, பெரியார்னு பேர் வைச்சிருக்கா....''

''ஆமாம், ஆமாம். பேப்பர்லே படிச்சேன். ஸ்தல புராணம் ஆச்சு. மேற்கொண்டு சொல்லு.''

''அங்கே மாப்பிள்ளை ராஜாமணி மாப்பிள்ளை ராஜாமணின்னு ஒருத்தர் இருக்கார்.''

''கேள்விப்பட்டிருக்கேன். அவருக்கும் மனைவி இருக்கா போலிருக்கே.....''

''உங்க மண்டைக்குள்ளே இருக்கிற இன்கம்டாக்ஸ் அறிவை வெளியே எடுத்து வைச்சுட்டுக் கேளுங்கோ!''

''ராஜாமணிக்கு ஒரு புள்ளை. லட்சணமா இருப்பான்னு சாஸ்திரிகள் சொன்னார். ஜாதகம் பார்க்கணும்னு உங்களைப் பெத்தாளே, அதான் என் மாமியார் அடம் பிடிச்சா. சாஸ்திரி கொண்டு வந்து கொடுத்தார்.''

''பேஷ்...பேஷ்....''

''நான் கேட்கிறேன், நாம செருஷ்டிச்ச ஒன்பது கிரகங்கள் எங்கெங்கே முடங்கிக் கிடந்தா உங்க அக்காவுக்கு — அதான் என் அருமை நாத்தனாருக்கு என்ன? ஜாதகத்தை எடுத்ததும், அடுப்பிலேருந்து இறக்கின எவர்சில்வர் பாத்திரத்தைத் தொட்டமாதிரி கையை உதறி அதைக் கீழே போட்டா...''

''கால்லே விழுந்து அடிகிடி பட்டுதா?''

''அவ ஜாதகத்தைப் போட்டா!''

''அப்பாடீ!''

''அது முறத்திலே விழுந்தது.''

''அரிசி முறமா?''

''குப்பை.''

''உம், அப்புறம்?''

''இந்தச் சம்பந்தம் நமக்குக் கிடைக்க ஒரே வழி... ஒரே வழி....''

''என் அம்மாவும் அக்காவும் என் தம்பி கிட்டே போயிடணும்.. அவ்வளவு தானே?''

''அவ்வளவேதான். நான் இன்னிக்கு ராஜாமணி வீட்டுக்கு ஃபோன் பண்ணினேன். மிஸஸ் பேசினா. இப்ப ராஜாமணி ஜி.எச்.சிலே கார்டியாலஜி வார்டிலே ரெஸ்ட் எடுத்துக்கிட்டிருக்காராம். பிள்ளை அர்ஜுன் அவரைப் பார்த்துண்டு இருக்கானும். பெண் பார்க்க ரெடின்னா மிஸஸ் மாப்பிள்ளை.''

''ஏன் என் அக்கா...,''



## யாருக்கு பக்தி அதிகம்?

எப்போது நினைத்தாலும் பாடி, கிருஷ்ணனை வரவழைக்கும் சக்தி பெற்ற நாரதரை விட—

தூணிலேயே திருமாலை எழுந்தருளப்பண்ணும் பக்தி கொண்ட பிரகலாதனை விட—

எப்போது நினைத்தாலும் உடனே கண்ணனைத் தருவிக்கும் பாக்கியம் பெற்ற துரௌபதியை விட—

தான்தான் கிருஷ்ணனுக்கு மிகவும் நெருங்கியவன் என்று அர்ஜுனன் நினைத்துக் கொண்டிருந்த போது கிருஷ்ணன் அவனுக்குப் புத்தி புகட்ட அவனைக் காட்டில் ஒரு விறகு வெட்டியிடம் அழைத்துப் போனார். வந்திருப்பவர்கள் கிருஷ்ணனும் அர்ஜுனனும் என்பது அவனுக்குத் தெரியாது. அவன் அஹிம்சாவாதி. பசும்புல் காய்ந்தபின் அதை சாப்பிட்டு உயிர் வாழும் அளவுக்கு அஹிம்சை குணம் கொண்டவன். அவனிடம் ஒரு வாள் எப்போதும் இருந்தது. அர்ஜுனன் அவனிடம் ''இந்த வாள் உன்னிடம் எதற்கு? நீ தான் அஹிம்சாவாதி ஆயிற்றே'' என்று கேட்டவுடன் அவன் கோபமாகப் பதில் கூறினான்:

''எல்லாம் வல்ல இறைவனை ஸ்ரீ கிருஷ்ணனை தனக்கு தேரோட்டியாக வேலை பார்க்கச் செய்த அர்ஜுனன் என்று ஒருவன் இருக்கிறானே! அவன் என் கண்ணில் பட்டால் அவனை வெட்டி வீழ்த்தத்தான் இந்த வாள்!''

அவனுடைய கிருஷ்ண பக்தியைப் புரிந்து கொண்ட அர்ஜுனன், ஸ்ரீ கிருஷ்ணனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

திரு. கிரிதாரி பிரசாத் கூறியது
கேட்டவர் ''சங்கரி புத்திரன்''

---

''இங்கிலீஷ் தெரியுமே உங்க அக்காவுக்கு. அதுக்காக நாவல் படிக்கட்டும். வீடு பூரா ஹாட்லி சேஸ் இறைஞ்சு கிடக்கு. இங்கிலீஷ் ஞானத்தை ஆஸ்ட்ராலாஜிகல் மாக ஸினில் காட்டுவானேன்?''

''பொரியாதே.''

''இந்த சுந்தரி பேசினாலே பொரியற மாதிரித்தான் உங்களுக்குக் கேட்கும். ஏன்னா, அவ உங்க அக்காவாச்சே!''

''அவ என்ன சொல்றா?''

''அர்ஜுன் ஜாதகத்தைத் தொடப்படாதாம். மார்ஸ் எய்த் ஹவுஸிலே அழுந்தி உட்கார்ந்திருக்கானும். பாமாவை அடிச்சுடுவானும்.''

''பாமாவை ஒருத்தன் கைநீட்டி அடிக்கிறதா? அதுக்கு ஒரு பயல் இன்னும் பிறக்கவில்லை, சுந்தரி.''

''இதை உங்க அக்கா மண்டைக்குள்ளே ஏத்துங்கோ.''

''நீ ரெடி பண்ணு.''

''என்ன உளர்றேள்?''

''பெண் பார்க்க வர ரெடி பண்ணுன்னேன்!'' அவர் அவளை ஏறிட்டுப் பார்த்தார்.

(தொடரும்)

"அக்கா! பல்பொடி நல்லதா? பேஸ்ட் நல்லதா?''

உமா அறிவுப் போட்டி வைக்கிறாள்.

அந்தக் கேள்வியின் பின்னணியிலேயே ஒரு விடை ஒளிந்திருப்பதை அனுவால் உணர முடிகிறது.

''உனக்கு பேஸ்ட்தானே வேணும்... வாங்கித் தரேன்...''

அவள் அப்படிச் சொன்னதும் உமா சிரிக்கிறாள்.

''அக்கா! இந்த நீல டிராயருக்கு ஜோடியா ஒரு வெள்ளைச் சட்டை பள்ளிக்கூட யூனிஃபார்ம் மாதிரி தைச்சுத் தரணும்.''

''கட்டாயம் தச்சுத் தரேன். என்ன பிரமாதம்?''

அவள் அப்படிச் சொன்னதும் பிரகாஷ் சிரிக்கிறான்.

இப்படியே அவர்களைத் தொடர்ந்து சதீஷும், புவனாவும் தங்கள் கோரிக்கைகளை அனுவின் முன்னால் வைக்கிறார்கள். வாக்குறுதியைப் பெறுகிறார்கள். பெற்ற மகிழ்ச்சி சிரிப்பாய் வழிகிறது.

அனுவுக்கும் சிரிக்கத் தெரியும். ஆனால் அந்தச் சிரிப்பின் விளிம்பில் கடமை உணர்வின் நிழல் படிந்து அந்தச் சிரிப்பின் முழு வளர்ச்சியை வெளிக்காட்டாமல், அவள் ஒப்புக்காகச் சிரிக்கிறாற் போல், அவர்கள் மனம் புண்பட்டு விடக் கூடாதே என்பதற்காகச் சிரிக்கிறாற்போல் இருக்கும்.

தன் கடமையைப் புரிந்து கொண்டிருக்கும் அதே நேரத்தில் தன் உடன் பிறந்தவர்களின் உரிமையையும் அவள் தெரிந்து வைத்திருந்தாள்.

இன்னும் எவ்வளவு காலம் இப்படி அந்தக் கடமைகள், உரிமைகள் இவற்றின் கட்டாய வேலிக்குள் அவள் சுற்றிச் சுற்றி வரப் போகிறாள்?

அவளுக்கே தெரியாது.

''அனு! நாளைக்கு ஞாயிற்றுக் கிழமைதானே? அம்மா கிட்டச் சொல்லிட்டு வாயேன். ஏதாவது படத்துக்குப் போவோம்.''

இன்று மாலை அவளுடன் பணி புரியும் ரேவதி அழைத்தபோது.

''சாரி, ரேவதி. நாளைக்குப் பூராவும் என் அம்மாவுக்கு உதவியா இருப்பேன். அதுவும் தவிர...'' என்று இழுத்தாள்.

''அதுவும் தவிர எனக்கு சினிமா, நாடகம் இப்படி எந்த எண்டர்டெயின்மெண்ட்லேயும் இண்டரஸ்ட் இல்லேன்னு சொல்லப்போறே.''

''அப்படித்தான் வச்சுக்கோயேன்...''

''ஐ பிட்டி யூ, அனு. வாழ்க்கையை சுயமா, சுதந்திரமா ருசிக்கணும்னு உனக்குத் தோணறதே இல்லையா? அதையெல்லாம் நீ எப்பவாவது நினைக்கப் பார்க்க மாட்டியா?....''

''இல்லே, ரேவதி. சில பொறுப்புக்கள் ஒரு கட்டாயம் போல என் மேல் சுமந்து போச்சு. அதுலயே ஒரு ஆத்ம திருப்தி ஏற்பட்டப்புறம் அதையெல்லாம் சுமையா நினைக்கிறதேயில்லே....''

''சுத்த போர்டி நீ!''

ரேவதி செல்லமாகக் கோபிக்கையில் அந்த உதடுகளும், கண்களும் கேலியாகச் சுழன்று நெளிந்து ஒதுங்கி வளைந்து...

ரேவதி! உன் உலகம் வேறே என் உலகம் வேறே....''

''ஆமாமாம்...உன் உலகமே வேறேதான். நீயா சிருஷ்டி பண்ணிக்கிட்ட ஒரு கட்டாய உலகம். பொறுப்பு, கடமைன்னு ஒரு நீர்ப் பந்த நிழல்லே உன்னை நிக்கவச்சுக்கிட்டுச் சம்பாதிக்கிற பணத்தை மட்டுமில்லாம, இளமைப் பருவத்தையும் கரைச்சுக்கிட்டிருக்கே. உன்னைத் திருத்த முடியாதுடி...''

"அனு! ரெண்டு மூணு வரன் வந்திருக்கு. எல்லாமே நல்ல இடங்கள்தான். ஏதாவது ஒண்ணைத் தேர்ந்தெடுத்து உன் கல்யாணத்தை வர தையில முடிச்சுடலாம்னு அப்பா நினைக்கிறார்...''

''நான் அப்படி நினைக்கலேம்மா. முதல்ல இந்த உமாவும், பிரகாஷும் படிச்சு முடிக்கட்டும்....''

''உனக்கு முப்பது வயசாகிப் போகும்.''

''இருக்கட்டுமே! இப்ப முப்பது முப்பத்தஞ்செல்லாம் ரொம்பச் சாதாரணம்.''

''நீ இப்படித்தான் சொல்வேன்னு எனக்குத் தெரியும். உன் அப்பா அந்த வரன்கள் விஷயத்தைப் பிரஸ்தாபிச்சபோது நீ சொன்னதைத்தான் நானும் சொன்னேன்.''

''இந்த உலகத்திலேயே என்னைப் புரிஞ்சுக்கிட்டிருக்கிற ஒரே மனுஷி நீதாம்மா.''

அம்மாவைக் கட்டிக் கொண்டாள் அனு.

''விடுடி. உன் [illegible] எனக்கில்லே,



நொறுங்கிப் போயிடுவேன் போலிருக்கே!''

அவர்கள் சிரிக்கும் சிரிப்பு அடுக்களையைத் தாண்டி, கூடத்துள் அடியெடுத்து வைத்து, பக்கத்தில் இருந்த அறைக்குள் மெதுவாக எட்டிப் பார்க்கிறது.

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைத் 'தொப்'பென்று மேசை மேல் போடுகிறார் ஆத்மநாதன்.

''இது என்ன வீடா? இல்லே, சத்திரமா?''

ஒரு பெரிய குடும்பத்தின் போஷகர் பதவியில் தன் கடமையைச் சரிவர ஆற்ற முடியாத இயலாமையே ஒரு பலவீனமாகிப் போய், அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல், ஜீரணித்துக் கொள்ள முடியாமல், தன் தோல்வியை ஒப்புக்கொள்ள முடியாமல் எல்லாவற்றையும் மறைத்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் ஒரு போலிக் கவசமாக அவர் கையாளும் கருவிதான் அந்த ஆத்திரம், கோபம் எல்லாம்.

அனு இண்டர்வியூவுக்குப் போய்விட்டு வந்த முதல் நாள்.

''ஏம்மா! நீ வேலைக்குப் போய்த்தான் தீரணுமா?''

''கட்டாயம் போய்த்தான் ஆகணும்பா''

''எனக்குப் போட்டியா நானும் சம்பாதிக்கப் போறேன்னு கிளம்பிட்டியாக்கும்!''

''இல்லேப்பா. நான் ரெண்டு காசு கொண்டு வந்தா குடும்பத்துக்கு உதவியா இருக்கும். அதோட உங்க சுமையும் கொஞ்சம் குறையுமே!....''

''உலகத்தையும் புரிஞ்சுக்கணும், நாலு விஷயங்களைக் கத்துக்கணும்னுதான் உன்னைப் படிக்க வச்சோம்மா. சம்பாதிக்கத் தரதுக்கு இல்லே.''

பவானியும் அனுவுக்குப் பக்கபலம்.

''பெண் ஆசைப்படறா. கொஞ்ச நாள் அவளும் வேலைக்குப் போய் வந்துண்டிருக்கட்டுமே!''

''சரி...''



''...அவர் பழம்பெரும் துணுக்கெழுத்தாளராம். அவர் துணுக்கெழுதி அனுப்பற விதமே தனி...''

''அப்படியா?''

''ஆமாம் ஓலைச் சுவடியில் தான் எழுதி அனுப்பறாராம்!..'' - ஜி. நடராஜன்

ஒரு நிர்ப்பந்தத்துக்கு அவர் பணிந்து விட்டார்.

அன்று காலை எழுந்திருக்கும் போதே ஆத்மநாதனின் முகம் சரியாக இல்லை. உடலில் லேசான நடுக்கம்.

''டாக்டரை வேணா அழைச்சிண்டு வரவா!'' என்று கேட்டாள் அனு.

''டாக்டர் எதுக்கும்மா? ஒருவேளை பட்டினி போட்டா உடம்பு சரியாய்ப் போயிடும்.''

''ஆபீசுக்கு லீவு போட்டிருங்கப்பா.''

அனுவைப் பார்க்கிறார்.

''நீ வேலைக்குக் கிளம்பிட்டியாம்மா?''

''ஆமாம்பா. ஒரு ஸ்டேட்மெண்ட் இன்னைக்குள்ளே தயார் பண்ணி ஹெட் ஆபீசுக்கு அனுப்பியாகணும். கொஞ்சம் முன்னாடியே போனா முடிச்சிடலாம்.''

அவள் புறப்பட்டுப் போனாள்.

'சம்பாதிக்கத் தரதுக்காக உன்னைப் படிக்க வைக்கலேம்மா.'

ஆத்மநாதனின் ஸ்டேட்மெண்டில் எங்கோ ஓர் இடத்தில் ஒரு சிறு தவறு. அந்தச் சிறு தவறே பெரிதாகி அவர் நெஞ்சில் ஏறி உட்கார்ந்து கொண்டது.



மாலையில் அனு வீடு திரும்பியபோது அவர் உடலில் கடுங்கோடையில் நடுப்பகல் வெப்பத்தை உணர முடிந்தது.

பிழைப்பாரா, மாட்டாரா?

சிற்றறிவுக்கு எட்டாத புதிர். ஒன்று, இரண்டா என்று நிச்சயமாகத் தீர்மானித்துச் சொல்ல இயலாமல் காய்ச்சலின் வேகம் கொஞ்சம் கொஞ்சமாய்க் கூடிக் கொண்டு போய், ஒரு திடீர்த் திருப்பமாகத் தணிய ஆரம்பித்துப் பத்து நாட்களுக்குப் பின் அவர் கண் திறந்தபோது ஒரு காலும் கையும் இழுத்துக் கொண்டு....

'ஓ'வென்று கதறினாள் அனு.

'எனக்குப் போட்டியா நானும் சம் பாதிக்கப் போறேன்னு கிளம்பிட்டியாம்மா'

'இல்லேப்பா. நானும் ரெண்டு காசு கொண்டு வந்தா குடும்பத்துக்கு உதவியா இருக்

கும். அத்தோட உங்க சுமையும் கொஞ்சம் குறையுமே!...'

ஒரு நாள் அனு போட்ட ஸ்டேட்மென்டில் எங்கோ ஓர் இடத்தில் ஒரு சிறு தவறு. அந்தத் தவறே பெரிதாகி அவள் நெஞ்சில் ஏறி உட்கார்ந்து கொண்டது.

'இந்தக் குடும்பத்துக்கு நீ கட்டாயம் கொஞ்ச நாள் உழைச்சுத்தான் ஆகணும்.'

கொடூரமான தீர்ப்பின் கோணல் மாணலான வாசகங்கள்.

உமா,பிரகாஷ்,சதீஷ்புவனு,பவானி என்று எல்லா நட்சத்திரங்களும் அனுவின் ஒளி பட்டுப் பிரகாசித்துத் தீரவேண்டிய கட்டாயத்தில்.

''என் வயித்துல வந்து பொறக்கறதுக்கு நீ என்ன பாவம் செஞ்சிருக்கியோ?...'' பவானி புலம்பினாள்.

ரேவதி அழைப்பிதழ் கொண்டு வந்து கொடுத்தாள். ''மாமி! நீங்களும் குழந்தைகளும் கட்டாயம் வரணும். அனு! அம்மாவையும் உன் தம்பி தங்கைகளையும் தவறாம அழைச்சிண்டு வா...''

நாளை தொடங்கப் போகும் இல்லற வாழ்வைப் பற்றிய இனிய கனவுகள் முகத்தில் பூபாளத்தின் உதய ராகமாய் இசைத்துக் கொண்டிருந்தது.

அவள் புறப்பட்டுப் போன பின் பவானி நீண்ட பெருமூச்சை உதிர்த்தாள்.

''ஏம்மா?....''

''அனு! ரேவதிக்கு உன் வயசுதானே இருக்கும்?....''

''ஒரு வயசு சின்னவ...''

''எல்லாத்துக்கும் கொடுத்து வச்சிருக்கணும் அனு. சுகப்பட வேண்டிய வயசுல வலுக்கட்டாயமாக ஒரு பாரத்தை உன்மேல சுமத்தி....''

''அம்மா! ஜனனி ஜன்ம சௌக்யானாம்.. வர்த்தினி குல ஸம்பதாம்... பதவி பூர்வ புண்யானாம்... லிக்யதே ஜன்ம பத்ரிகா!'' என்று மெலிதாக ராகம் போட்டு இழுத்தாள் அனு.

''உன்னால எப்படித்தான் எல்லாவற்றையும் சுலுவா எடுத்துக்க முடியறதோ!''

''உலகத்துல நாம மட்டும்தானம்மா? எவ்வளவோ குடும்பங்கள் நம்மை விட ரொம்ப ரொம்ப மோசமா இருக்கு...''

''அடேயப்பா! உன்னை மாதிரி என்னால இருக்க முடியாதுடி...'' —ரேவதி அடிக்கடி சொல்கிறாள்.

எதிர்பாராத திருப்பங்களின் நேரடித் தாக்குதல்கள் அனுவின் குடும்பத்தைப் பாதிக்கவே செய்தன. ஆத்மநாதன் படுக்கையோடு ஒட்டிக் கொண்ட பின் அவருக்கு வேலை போனவுடன் கைக்கு வந்த தொகையும் மருந்து, ஊசி, டானிக் என்று நீரை விழுங்




''டிர்ர்ர்ரிங்.... டிர்ர்ரிங்...''

''ஈஸ் இட் 844395?''

''யெஸ் நளினி ஹியர்.''

''ஹாய்! நேத்து காடு பாக்கப் போனேனே எப்படி படம்?''

''மூட நம்பிக்கை உள்ள காட்டு ஜனங்க. தங்களை மாற்ற நினைத்த ஃபாரஸ்டரைக் கொல்கிறார்கள். 'தங்கை'க்காக அவர் உயிர் தரார்.''

''நடிப்பு எப்படி?''

''சத்தார், ரீனு,வனிதா எல்லாம் வராங்க; அலட்டிக்காத நடிப்பு. தபால்காரர் சுருளியின் மிதமான நகைச் சுவை.''

''குறத்தியா நடிச்ச வனிதாஸ்ரீயா?''

''இல்லே. இது வெறும் வனிதா. அப்புறம் வி. ரங்காவின் கேமரா காட்டுக்குள் கண்ணாமூச்சி ஆடுகிறது. சங்கர் கணேஷின் இசை இதம்.''

''அப்ப இன்னொரு வழக்கமான தமிழ்ப் படம்.''

''நோ நோ. கொஞ்சம் வித்தியாசப் படம். கதாநாயகன் நாயகியை மணப்பதில்லே. கடத்தல், வில்லன், சண்டை எல்லாம் இருக்கு. ஆனா கடைசில வழக்கம்போல போலீஸ் சொல்லாமல் வந்து அரெஸ்ட் செய்யும் அபத்தங்கள் இல்லே. ஒரு சம்பவத்தை மட்டும் சொல்ல நினைத்துச் சொல்லியும் இருக்கிறார்கள். முடிஞ்சாப் போயிட்டு வாயேன்.''

''ஆகட்டும் இவரைக் கேட்டுப் பார்க்கறேன்; குட் நைட்.'' **-நளினி சாஸ்திரி**


அறு சுவைகள் :
உப்பு,
புளிப்பு,
கசப்பு,
இனிப்பு,
துவர்ப்பு,
கார்ப்பு.
அதற்கு மேல்
ஓர் சுவை...
நரசூஸ்
அரும் சுவை !
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசூஸ்
"தெர்மலோ" காபி!
நரசூஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள் : தமிழ்நாடெங்கும்.
ADWAVE/NC/1369

# மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான

# ஹடன்ஸா

களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
—ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

2141

# கல்கி

சந்தா விவரம்

★

| | ஓராண்டு | ஆறு மாதம் |
|---|---|---|
| இந்தியா | ரூ. 46 | ரூ. 23 |
| இலங்கை (இந்திய நாணயப்படி) | ரூ. 64 | ரூ. 32 |
| இதர வெளிநாடுகள் | ரூ. 100 | ரூ. 50 |

**மானேஜர்**

கல்கி, சென்னை - 600 032



Dr. S. R. சிவராஜ்

வாலிபர்கள் ! மணமானவர்கள் !!

வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பலஹீனங்களை நீக்கி,
தாம்பத்திய வாழ்வை இன்பமுடன் அனுபவித்து மகிழ,
இன்றே புகழ் பெற்ற 'ரகசிய வியாதி நிபுணர்'
ஆண்மைக் குறைவு நீக்கும் 'அரிய வைத்திய மேதை'

## 'கவிராஜ்' டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P.

அவர்களிடம் சிறந்த முறையில் சிகிச்சை பெற, அவர் சுற்றுப்பயண முகாம்களில் நேரில் சந்தித்து வாழ்வில் மகிழ்ச்சி காணுங்கள். நேரில் சந்திக்க முடியாதவர்கள், குறைகளை விபரமாகத் தலைமை அலுவலகத்துக்கு எழுதவும். (கடிதங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.) மருந்துகள் விரிவான விளக்கங்களுடன் வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.

❊ குழந்தை பாக்கியம் (கர்ப்ப அணுக்கள்) இல்லாதவர்கள்
❊ கல்யாணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியமே இல்லாதவர்கள்

சிறந்த முறையில் சிகிச்சை பெற்று, கர்ப்ப அணுக்கள் தேவையான அளவு உற்பத்தியாகி குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். 25 வருட சுற்றுப் பயணத்தில், அவரிடம் சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள், அவர்களைப் போல் நீங்களும் பலன் அடைய வேண்டுமல்லவா?

**விரைவில் பலன் காண விசேஷ 1 மாத சிகிச்சை ★ குறைந்த ஸ்பெஷல் 1 மாத சிகிச்சை**

| A-வகுப்பு | B-வகுப்பு | C-வகுப்பு | மீடியம் | ஸ்பெஷல் | 1-ம் நெம்பர் | நேரில் பெறலாம் |
|---|---|---|---|---|---|---|
| ரூ. 350-00 | 250-00 | 175-00 | 115-00 | 90-00 | 75-00 | V.P.P.மூலம் பெறலாம் |

தலைமை அலுவலகம் :

## சிவராஜ் சித்த வைத்தியசாலை

C-56, தமிழ்ச் சங்கம் ரோட் பின்புறம்
(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன் பக்கம்)
காந்தி ஸ்டேடியம் - சேலம்-636007

கும் பாறை வெடிப்புக்களாய் உள்வாங்கிக் கொண்டிருந்தது.

அனுவின் உழைப்பில் அவளுடைய தம்பி தங்கைகளின் எதிர்காலம் உதய தரிசனம் காட்டத் தொடங்கியபோது ஒருமுறை பவானி சொன்னது போல் முப்பது வயசைத் தொட்டுவிட்டாள் அனு.

அன்று ரேவதி வந்தாள். அவளுடன் அவள் பெற்ற செல்வங்கள் இருவர். கை கோத்துக் கொண்டு டாபணக்கும் உடையில், மினுமினுக்கும் தோற்றத்தில் இறைவனின் நேர் சிருஷ்டிகளாக.

''உன்னை என்னால மறக்கவே முடியாது, அனு. ஆயுளுக்கும் உன்னை மறக்க மாட்டேன். இதோ... என்னோட இந்தப் பெண் குழந்தைக்கு என்ன பேர் வைச்சிருக்கேன் தெரியுமா?...''

'அனு'' என்றது அந்தக் குழந்தை!

ஐந்து வயது மழலையின் அந்த உச்சரிப்பில் ஊசிச் சரங்கள் சிலிர்த்தன.

அந்த அனுவை இழுத்துத் தன்னோடு சேர்த்தணைத்துக் கொண்டு அதன் பிஞ்சுக் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டாள் இந்த அனு.

''ரேவதி! இவளுக்கு வைக்கிறதுக்கு வேற பெயர் ஒண்ணும் உனக்குத் தோணலியா?...'' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

''வச்சிருக்கலாம். ஆனா உன்னோட நெருங்கிப் பழகிட்டேன் பார். அதனால அந்த உறவை அடிக்கடி நினைச்சுச் சந்தோஷப்பட ஒரு கட்டாயம் மாதிரி!...''

அனுவின்மீது பூக்களாய்க் கவிழ்த்துக் கொட்டி வேடிக்கை பார்த்தாள் ரேவதி.

அலுவலகம் புறப்பட்ட அனு உடைகளை மாற்றிக் கொண்டு, தலை சீவிக்கொண்டு, கண்ணாடி முன் நிற்கையில் தலையில் ஒரு புது அறிமுகமாகத் தென்பட்ட அந்த ஒற்றை நரைமுடி, 'ஹாட் டு மீட் யூ...' என்றது.

இரண்டு மாதங்களுக்குப் பின்—

அனுவுக்குத் திருமணம் திருநீர்மலையில்.

அழைப்பிதழ் இல்லை. வாய் வார்த்தையாய் முக்கியமாக வேண்டியவர்களுக்கு மட்டும் சொல்லியிருந்தாள்.

ரேவதி டாக்ஸியிலிருந்து இறங்கி உள்ளே வந்தபோது மணப் பந்தலில் குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்த அனுவைப் பார்த்தாள். பக்கத்தில் அமர்ந்திருந்த அந்த ஆண்பிள்ளையைப் பார்க்கையில் மனசின் ஒரு மூலையில் லேசான விகசிப்பு.

அவரைப் பற்றி ஏற்கனவே அவளுக்கு அனு சொல்லியிருந்தாள்.

அனு அவருக்கு இரண்டாம் தாரம். முதல் மனைவி இரண்டு குழந்தைகளைப் பெற்றுப் போட்டுவிட்டுக் கண்ணை மூடிவிட்டாள்.

நாற்பத்தைந்து வயதிருக்கலாம் அவருக்கு. முன் நெற்றி அகன்ற வழுக்கைத் தலையும், கிட்டப் பார்வைக்கு மருந்தாக மூக்கின் நுனி விளிம்பில் தங்கூரம் பாய்ச்சியிருந்த மூக்குக் கண்ணாடியும், செல்வச் செழிப்பால் முதுமையை இன்னும் பூரணமாக அண்ட விடாமல் சற்றுத் தள்ளியே நிற்க வைத்திருந்த இளமையின் கடைசி மிச்சமுமாக....

முகூர்த்தம் முடிந்து, பந்திக்கு முந்தியவர்களெல்லாம் கலைந்து, அவளும் இவளுமாய் ஓர் அபூர்வத் தனிமையை வலுக்கட்டாயமாக உருவாக்கிக் கொண்டபோது அனுவை நெஞ்சாரத் தழுவிக் கொண்டாள் ரேவதி.

''அனு! உன்னோட கல்யாணம் சொர்க்கத்துலதான் நிச்சயமாகியிருக்குன்னு நீ நினைக்கறியா?...''

சொற்கள் உடைந்து சிதறுகின்றன.

''ரேவதி! சொர்க்கத்துலதான் என் திருமணம் நிச்சயமாகியிருக்குன்னு நான் அடிச்சுச் சொல்லுவேன். ஏன்னா, அவர் பெரிய பணக்காரர். சொந்த பிஸினஸ். என் தம்பி தங்கைகளோட எதிர் காலத்துக்கு உத்தரவாதமே தந்திருக்கார். இதைவிட எனக்கு வேற என்னடி வேணும்?...''

''அதுக்கில்லே. ஏற்கனவே அவருக்கு ரெண்டு பசங்க இருக்காங்க...''


''இருக்கட்டுமே!... இதையெல்லாம் ஒரு கிவ் அண்ட் டேக் சமாசாரமா எடுத்துக்கிட்டா எதுவுமே பிரச்னையா இருக்காது.''

''உனக்கு எதுவுமே பிரச்னை இல்லே. எல்லாவற்றையும் ஈஸியா எடுத்துக்கற ஒரு பக்குவம் உனக்கு ஏற்பட்டுப் போச்சு. தப்பு தப்பு... ஈஸியா எடுத்துக்கற பக்குவத்தைக் கட்டாயமா உருவாக்கிக்கிட்டே!''

சொல்லிவிட்டு அனுவின் முகத்தைப் பார்த்தாள் ரேவதி.

நாளை தொடங்கப் போகும் இல்லற வாழ்வைப் பற்றிய இனிய கனவுகளின் உயிரோட்டமோ, சந்தர்ப்பச் சூழ்நிலையால் விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிவிட்ட ஏக்கமோ அந்த முகத்தில் இல்லை.

எந்தக் கட்டாயமும் என்னைச் சிதைத்து ஒதுக்கிவிட முடியாது என்பது போல் அமைதியின் பூரணத்வம் அங்கே ஒளிச் சுடராய்த் தெரிந்தது.



லதா: ''என் கணவர் என்னைப் பார்த்து 'நீ என் ஆபீஸ் டைப்பிஸ்ட் மாதிரியே அழகா இருக்கே'ன்னு புகழுறார்டி!''

மாலா: ''அது எவ்வளவோ தேவலை என் கணவர் 'நீ என் மனைவி மாதிரியே இருக்கே'ன்னு அவர் ஆபீஸ் டைப்பிஸ்டிடம் சொல்றாரமே!''

-ஸ்ரீ. நடராஜன்

# உங்கள் பொருளாதார களத்திலொரு தளபதி-
# ஸ்டேட் பாங்க்!



நாட்டின் காவலரான படைவீரர் அனைவர்க்கும் நாங்கள் நல்கும் சில எளிய சேவைகள்.. படைப்பிரிவில் எந்த பதவியிலிருப்பவர்க்கும் உள்ள பணப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் சேவைகள்...இதோ,

<u>இலவசமாக</u>, மாதந்தோறும் சம்பளம், பென்ஷன் ஆகியன பெற்றுத்தருதல்.

<u>இலவசமாக</u>, ஆயுள் இன்சூரன்ஸ் பிரீமியம் பள்ளிச் சம்பளம், கிளப் சந்தாக்கள் ஆகியன செலுத்துதல்.

<u>இலவசமாக</u>, உறவினர்க்கும், சார்ந்திருப்போருக்கும் பணம் அனுப்பித்தருதல்—எவ்வளவு தொகையானாலும், எந்த இடமானாலும்.

<u>இலவசமாக</u>, நிலை வைப்புத்தொகை ரசீதுகள், உயில்கள் ஆகியவற்றைப் பாதுகாத்து வைத்தல்.

<u>இலவசமாக</u>, வெளியிடங்களின் காசோலைகளைப் பெறுதல்; ரூ 2500 வரையிலான காசோலைகளுக்கு உடனுக்குடன் வரவு வைத்தல் ஆகிய சேவைகள், கட்டணமற்ற, இலவச சேவைகள்.

<u>மேலும்</u>, உடலூனமுற்ற பணிவீரர், போரினால் விதவையானோர், ஓய்வுபெற்றபடைவீரர் ஆகியோருக்கு சொந்த தொழில் நடத்த தாராளமான கடன் உதவிகளும் அளிக்கப்படுகின்றன.

ஸ்டேட் பாங்க் அலுவலகம் ஏதேனும் ஒன்றை அணுகினால், போதும்—உங்கள் பணத்தைப் பயனுள்ளதாகச் செய்ய ஏற்ற திட்டங்களை வழங்கக் காத்திருப்பர் அங்குள்ளோர்.

**ஸ்டேட் பாங்க்**

**சேவைக் கரம் நீட்டி நெருங்கியே வளர்வோம்**

# பெரியவர்: தர்மத்தின் மறு பெயர்



ஸமர்த்த ராமதாஸின் புனித நினைவு கமழும் ஸதாராவில், இயல்பான ஏகாந்த அமைதி. வைகறையின் சாந்தத்தில் இணைந்து தோய்ந்த அதிகாலே நாலரை மணிக்கு ஸ்ரீ காஞ்சி முனிவரின் குரல் கேட்கிறது. முதல் நாளெல்லாம் பெரியவர் மௌனமாதலால் இன்று தெய்வத்தின் குரலைக் கூடுதல் ஆவலுடன் அந்த வேளையில் அங்கே குழுமியிருந்தவர்கள் கேட்கிறார்கள்.

''ஆமாம், நான் மௌனமானாலும் ராத்திரி மூக்குக்கு உப்புமா வாஸனை எட்டித்து. நான் சொல்ல வேண்டாம்னு பார்த்தாலும் என்னுலே பாவம், இங்கே இருக்கிற ரெண்டு மூணு பேருக்கு ஏற்படற ச்ரமத்தை எப்படிச் சொல்லாம யிருக்கிறது? சாதுர்மாஸ்யம்னு நான் வந்து உட்கார்ந்துட்டேன்; இன்னம் ரெண்டு மாஸத்துக்கு இந்த இடத்தை விட்டுப் புறப்படறத்துக்கு இல்லே. ஆனா, இது என்ன பட்டணமா? இங்கே பார்த்துப் பார்த்துப் பண்ணறத்துக்கு ஜனக்கட்டு இருக்கா? இந்தச் சின்ன விஷயம் என்னேப் பார்க்க வரவாளுக்குத் தெரிய வேண்டாமா? ப்ரியத்தினாலே, பக்தியினாலேதான் எங்கெங்கேயிருந்தோ எத்தனேயோ கஷ்டப்பட்டுண்டு வரேள். வாஸ்தவம்தான். ஆனாலும் பிறத்தியாருக்கு ச்ரமம் தரலாமா? என்னே ஏதோ ஒரு வேளே பார்த்துட்டு அப்படியே நகர்ந்துண்டே இருக்க வேண்டியதுதானே? போஜனம், டிபன், பலகாரம்னு வந்தவாளுக்குப் பண்ணி வைக்க இந்தச் சின்ன ஊர்லே ஏது வசதி? இங்கே இருக்கப்பட்ட ரெண்டு மூணு பேர்தானே கஷ்டத்தைப் பார்க்காம எல்லாம் பண்ண வேண்டியிருக்கு? அவா நல்ல மனஸோடே, ஒண்ணும் மோணை மோணைக்காமதான் பண்றான்னாலும், என்னேப் பார்க்க வரவா, அப்புறம் அந்தப் பாக்க வரவாளேப் பாக்க வரவான்னு பல பேருக்கு அவாளே சச்ருஷை பண்ண வைக்கறது ஸரியா?''

உப்புமா தாளிப்பில் சற்று கார நெடி கூடுதலானது போல் பெரியவரின் குரல் த்வனித்தாலும் அன்பு என்னும் சுத்த நெய்யிலாக்கும் அது வறுபடுகிறது என்பதும் அகமூக்குக்குத் தெரிகிறது!

''எங்கே, அந்த பெல்காம்........ன் இருக்கானு?'' என்கிறது நெய்-மிளகாய் குரல் மிளகாயை விட்டு.

''இதோ இருக்கேன்'' என்று தண்டம் ஸமர்ப்பிக்கிறார் பெல்காம் ....ன்.

''நான் இந்த மஹாராஷ்ட்ராவிலே சுத்த ஆரம்பிச்சதிலேருந்து நீ எத்தனே தடவை என்னேப் பார்க்க ஓடி வந்திருப்பே?''

மிளகாயே அறியாத சுத்த நெய் தன் உள்ளே வர்ஷிப்பதாக உணர்ந்த பெல்காம் ....ன் தான் அடிக்கடி பெரியவாள் தர்சனத்துக்கு வந்திருப்பதை இன்று எல்லோருக்கும் அவரே தெரியப்படுத்துவதில் உற்ற பெருமிதம் அவர் ''இத்தனும் தடவை'' என்று சொன்ன குரலிலே பிரதிபலிக்கிறது.

''ஆமாம், உன்னாலே எப்படி இத்தனே தடவை வர முடியறது?''

''எனக்கு ரயில்வே உத்யோகமோல்லியோ 'பாஸ்'லே வரேன்.''

''ஓஹோ! ஸரி! உன் பாஸை இங்கே வை'' என்று தமக்கு முன் தரையைத் தட்டிக் காட்டுகிறார் ஸ்ரீ பெரியவர்.

இதென்ன வேடிக்கை? பாஸும் ஆடி பெற்றுப் பாஸ் பண்ணப் போகிறதா என்ன?

பெரியவாள் பணித்த வண்ணமே அந்த பக்தர் செய்கிறார்.

இருள் பிரியாத அந்த இடம் பொழுதிலே பெரியவரின் திருக்கர அழுத்தலில் பக்கத்தில் இருந்த டார்ச் அந்த ரயில்வே பாஸ் மீது ஒளியைப் பாய்ச்சுகிறது.

பெரியவர் பாஸை உன்னிப்பாகக் கவனிக்கிறார். பேசத் தொடங்குகிறார். நெய்யிலே மறுபடி மிளகாய் வறுபடுகிறது. ''பாஸ்லே எக்ஸாமினர் கையெழுத்தே ஆகல்லே. எனக்குத் தெரியும், ரயில்வேக்காராளுக்குப் பாஸ் இருந்தாலும் இத்தனே 'ஜர்னி'தான் பண்ணலாம்னு கணக்கு உண்டுன்னு. இதிலேயானு நீ இத்தனே தடவை வந்ததுக்குக் கணக்கா ஒரு கையெழுத்துக் கூட காணும்.——! நீ என்ன பண்ணனும் தெரியுமா? முதல் காரியமா இந்தப் பாஸைக் கொண்டு போய் 'ஸரண்டர்' பண்ணனும். இனிமேலே உன் கைக் காசைச் செலவழிச்சுண்டு வர முடியும்னாலே என்னேப் பார்க்க வரணும்!''

ஹர ஹர சங்கரர் அறநெறிச் சங்கரராக ஜ்வாலே விட்டு அனைவரையும் பிரமிக்கச் செய்கிறார்;

இந்த அயனை சந்தர்ப்பத்திலே சென்னையைச் சேர்ந்த சிஷ்ய ப்ரமுகர் ஒருவர் ஆயிரம் ரூபாய் காணிக்கை பெரியவாளுக்குச் செலுத்த முன்வருகிறார்.

பதினோராண்டுகளுக்கு முன் முனிவர் ஸ்ரீ மடத்தை விட்டு வெளிவந்த அன்றிலிருந்து பணக் காணிக்கையைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லே என்று இவர் நன்கு அறிந்தவர்தான். ஆயினும் பெரியவாளின் திருவுளக் கருத்தின்படியே செலவழிக்கப்பட வேண்மென்று அந்தரங்க பக்தியுடன் ஒதுக்கப்பட்ட தொகையாதலாலே இந்த ஆயிரத்தைச் செலுத்துகிறார்.

பெரியவர் புரிந்து கொள்ளாமல் போவாரா?

''எங்கே பெல்காம் ———ன்?'' என்கிறார்; திருணமாக வந்து நிற்கிறார் அந்த நபர். நெய்யிலே இப்பொழுது முந்திரியாக்கும் வறுபடுகிறது! பெல்காமில் ———ன் நிறைவேற்றி வரும் ஆசார்ய ஸேவா இட்டங்களைப் பற்றி ஏகமாக ச்லாகிக்கிறார் பெரியவர். இடித்த மேகமே இன்மழை கொட்டுகிறது.

அதில் ஒரு பணிக்கே இந்த ஆயிரம் ரூபாயைப் பயன்படுத்துமாறு அருளாணை பிறக்கிறது.

''பணத்தை எப்படிக் கொண்டு போவே?''

''பத்ரயா எடுத்துண்டே போறேன்.''

பொறுப்புணர்ச்சியின் நிறைவுடனும் அபார உலகியல் அறிவுடனும் முனிவர் சொல்கிறார்: ''அதெல்லாம் ஸரியில்லே. தொலைஞ்சு போச்சுன்னு நீயோ அவனோ (கொடுத்தவரோ) ஜவாப் இல்லே. நான்தான் ஜவாப். (கொடுத்த பிரமுகரைப் பார்த்து) நீ இந்தத் தொகைக்கு அவன் பேரிலே 'ட்ராஃப்ட்' வாங்கிக் கொடுத்துடு.''

அறம் என்ன, அன்பு என்ன, பொறுப்பு என்ன, ஸமயோசிதம் என்ன என்பதற்கெல்லாம் அன்றன்றும் இப்படி அற்புத முன்னுதாரணம் தருவதே முனிவரின் இயல்பாயிருக்கிறது!

— ''ஸ்மரணானந்தன்''

---

# கராத்தே பயிற்சி - 7

பயிற்சி: டோனி பொன்னையா  
சித்திரம்: ராஜ்  படம்: உத்ரா  தயாரிப்பு: குண்டுமணி






குத்து முறையில் ஒவ்வொரு பயிற்சியாளரும் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது: படம்-1ல் கைகளை மடக்கி நிற்பதைக் காணலாம்.

படம்-2ல் குத்தியதைக் காணலாம்.

இதற்கிடையில் இடுப்பிலிருந்து கைகளை எப்படிச் செலுத்த வேண்டும் என்பதை இங்கே விளக்குகிறோம்.




ஒன்று, கைகளை மடக்கி

இரண்டு, முன்புறமாகக் கைகளைச் செலுத்துதல்.




கவனிக்க வேண்டியது:

முழங்கை எக்காரணத்தைக் கொண்டும் வெளிப்புறம் செல்லக் கூடாது.



# கடுகு பதில்கள்

✖ டி. எஸ். ரெட்டி, வேலிடுபட்டி

கே. மௌனத்தின் வலிமை என்ன?

ப: அதன் வலிமை அளவிட முடியாதது. மாபெரும் சோகம் விழும்போது அழுது புரள்வதை விட மௌனமாக இருக்க முடிந்தால் சோகத்தை எளிதில் வெல்லலாம். அடக்க முடியாத கோபத்தின் போது மௌனத்தைக் கடைப்பிடியுங்கள். கோபம் அடங்கி விடுகிறதா இல்லையா பாருங்கள். ஏன் ஒருவரை ஆயிரம் வசவுகளால் வாட்டுவதை விட, சில சமயம் மௌனமாக இருப்பதே அவருக்குச் சாட்டையடியாக விழும். எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம், மௌனம் பல வம்புகளிலிருந்து நம்மைக் காக்கும் வலிமை மிகுந்தது. துரதிர்ஷ்டம், இந்தச் சுலபமான, எளிமையான ஆயுதத்தைப் பெரும்பாலோர் சிந்துவதில்லை.

✖ வி. வெங்கட்ராமன், மின்பாறை

கே. நான் கடுகுதாசன் என்று புனைபெயர் வைத்துக் கொள்ளலாமா?

ப: என்ன லாபம்? ஏற்கனவே பல லட்சக்கணக்கான பேர் 'கடுகுதாசன்'களாக இருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் உங்கள் பெயரும் அமிழ்ந்து போய் விடுமே!

✖ பி. ஆர். கீதா, ஊரூர்

கே. இப்போது எல்லா பத்திரிகைகளும் குலுக்கல் பரிசு திட்டத்தை வெளியிடுகின்றனவே இது சரியான முறையா, தருமமா?

ப: வாசகர்களிடம் கூப்பனுக்கு எட்டணா, ஒரு ரூபாய் என்கிற ரீதியில் வசூலிக்காது நடத்தப்படும் குலுக்கல் பரிசுத்திட்டங்கள் சரிதான், முறைதான், தருமம்தான்.

✖ சங்கரபாண்டியன், அரக்கோணம்

கே. உழைத்தவர்கள் எல்லாம் உயரவில்லையே ஏன்?

ப: உழைத்திருக்கலாம். எவ்வளவு உழைத்தார்கள் என்பதுதான் கேள்வி. உயருகின்ற அளவு உழைக்கவில்லை என்பதுதான் காரணம்.

✖ சங்கமேஸ்வரன், செம்பூர்

கே. இளையராஜாவின் இசையில் தொய்வு ஏற்பட்டிருப்பதாகச் சிலர் எழுதுகிறார்களே.

ப: அப்படி எழுதியிருப்பதைப் பார்த்து விட்டு, எங்கே தொய்வு என்று தெரிவிக்கும்படி கேட்டிருக்கிறார் இளையராஜா. 'அன்னக் கிளி' பாட்டு அபாரம் என்று பாராட்டியபோது, எங்கே அபாரமாக அமைந்திருக்கிறது என்று கேட்கவில்லையே! இளையராஜாவிடம் நிறைய எதிர்பார்க்கிறார்கள் ரசிகர்கள்.

✖ பி. மதுரம், திருச்சி

கே. ஒரு தலை ராகம் வெற்றிக்குப் பின்னணியில் பல தலைகள் தெரிவதன் ரகசியம் என்ன?

ப: எந்த ஒரு வெற்றியும் பல தலைகள் சேர்ந்து முனைவதால் ஏற்படுவதுதான். ஆனால் அதில் ஒரு தலை சற்றுப் பிரபலமாகவோ செல்வாக்காகவோ இருந்துவிடுவதால் மற்ற தலைகளைத் தூக்கவிடாமல் அடங்கச் செய்து விடுகிறது. ஒருதலை ராகத்தில் அப்படி வலிமையுள்ள தலை இல்லாததால், பல தலைகள் தலைதூக்கி விட்டிருக்கின்றன.

✖ சரோஜா, ராஜாராமன், சென்னை-38

கே. திருமணமான பெண்கள் பணம் சம்பாதிக்கக் கூடாது என்று ஒரு சட்டம் வந்தால் எப்படி இருக்கும்?

ப: பல பெண்களுக்குத் திருமணமே ஆகாது. இன்னும் பல திருமணமான பெண்களை விவாகரத்து பயமுறுத்தும். இன்று வாழ்க்கையின் ஜீவநாடி பொருளாதாரம்தான்.

✖ மேஜர்தாசன், ஈரோடு-10

கே. தமிழக அரசு 90 லட்ச ரூபாய் செலவில் கன்னியாகுமரியில் சிலை வைக்கப் போவது உமக்குத் தெரியுமா?

ப: உங்கள் ஊரில் வெண்ணெய் நன்றாய் இருக்கும் என்பதும் தெரியும்!



✖ த. சத்தியநாராயணன், சென்னை-23

கே. சமீபத்தில் தங்களைக் கவர்ந்த புது எழுத்தாளர் யார்?

ப: மாலன். அவரது 'வழி தவறிய வண்ணத்துப் பூச்சிகள்' நாவலில் அருமையான பதப் பிரயோகங்கள் இருந்தன. (கதை அந்த அளவு அமையவில்லை.)

✖ எம். ராஜேந்திரன், லால்குடி


கே. நான் வாராவாரம் கேள்விகள் அனுப்பிக் கொண்டு வருகிறேன். ஆனால் என் கேள்வி இடம் பெறுவதில்லையே ஏன்?

ப: வாரம் சுமார் 500, 600 கேள்விகள் வருகின்றனவே. பல கேள்விகள் விடுபடுவது தவிர்க்க முடியாதது.

பரிசு பெறுபவர்:

**பி. மதுரம், சி-64, IV கிராஸ்**
**தில்லை நகர், திருச்சி-18**

# உன்னதமான ஸ்டீரியோ ஸிஸ்டம் இந்தியாவின் நவீன ஸ்டீரியோ ரேடியோவுடன் கூடியது




# பிலிப்ஸ்
# ஹை-க்யூ இன்டர்நேஷனல்
## ஸ்டீரியோ ஏஎம்/எஃப் எம் ட்யூனர் ஆம்ப்ளிஃபையர்

**ஒரு பட்டனை அழுத்தவும்...**
**அது ஒரு உயர்சக்தி ஸ்டீரியோ ஸிஸ்டம்.**

ஹை-க்யூ ட்யூனர் ஆம்ப்ளி-ஃபையருடன் பிளேயர் அல்லது டேப் ரிக்கார்டரை இணைக்கவும்—உடனடியாக உங்களுக்கு கிடைக்கிறது. ஒரு சிறந்த ஸ்டீரியோ ஸிஸ்டம்.

**மற்றொரு பட்டனை அழுத்தவும்—அது ஒரு எஃப் எம்முடன் கூடிய 5-பாண்டு ஸ்டீரியோ ரேடியோ.**

புதிய எஃப் எம் பாண்டுடன் (எஃப்எம், ஏற்கனவே கல்கத்தா மற்றும் சென்னையில் கிடைக்கிறது. மேலும் மற்ற முக்கிய நகரங்களுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் உள்ளது.) கூடிய முதல் ஆம்ப்ளிஃபையர் ஹை-க்யூ ட்யூனர் ஆம்ப்ளிஃபையர் ஆகும். டிவி ஒலிபரப்புகளை பெறுவதற்கு, ட்யூனரைக் கூட மாற்றி அமைக்க முடியும்.

**ரேடியோகிராம்களுக்கும் கூட உன்னதமானது!**
நீங்கள் தேர்ந்தெடுக்கும் எந்தவிதமான ரேடியோ காபினெட்டிற்கும் எங்கள் ஹை-க்யூ ட்யூனர் ஆம்ப்ளிஃபையர் சுலபமாக இணையக்கூடியது.

**இலாபம் உங்களுக்கு!**
தனிப்பட்ட ஸ்டீரியோ ஸிஸ்டம் (ஒற்றுமையான வாட்டேஜ்) மற்றும் ஸ்டீரியோ ரேடியோவை விட பிலிப்ஸ் ஹை-க்யூ ஸ்டீரியோ ட்யூனர் ஆம்ப்ளிஃபையர் விலை குறைவு. இன்றே உங்கள் பிலிப்ஸ் டீலரை காணுங்கள்- ட்யூனர் ஆம்ப்ளிஃபயரின் ஒலியை கேட்டு மகிழுங்கள்.

PHILIPS

# பிலிப்ஸ்
இந்தியாவில் 50 ஆண்டுகள்

OBM/3179 TM

# உறவின் கைதிகள்

## 15

எண்ணியபடியே வாழ்க்கைத் துணைவி
எனக்குக் கிடைத்திட்டாள் — முன்னோர்
புண்ணியம் போலும் பொருத்த மான
பூவை கிடைத்திட்டாள்!
—இமயபாரதி — ''நட்சத்திரங்கள்''

அடுத்த சனிக்கிழமை உஷா வந்து சேர்ந்தவுடன் ராஜீவ் எங்கோ வெளியே செல்வதற்கு ஆயத்தமாக இருப்பதைக் கண்டாள்.

''வந்துட்டியா உஷா? கம் ஆன் கிளம்பு, சீக்கிரம்!''

''எங்கே போறோம்?''

''ஸஸ்பென்ஸ்! இன்னும் கொஞ்சம் நேரத்திலே உனக்கே தெரியும். கம் ஆன்.''

''பட்...''

''நோ பட், நோ ஆர்க்யுமெண்ட்ஸ்! சமர்த்தா சொன்னபடி கேளு. வா.''

சென்னை நகர எல்லையைக் கடந்து, பெங்களூர் போகும் வழியில் இருந்தது அந்தத் தோட்டம். மிகவும் அழகாகப் பராமரிக்கப்பட்டிருந்தது.

தோட்டத்தைச் சுற்றி அவளுக்குக் காண்பித்தான். மாமரங்கள், தென்னை மரங்கள், ஒரு புறம். இன்னொரு புறம், அரும்பாடுபட்டு வளர்க்கப்பட்டிருந்த ரோஜா செடிகள். பல விசேஷமான ரோஜா வகைகள் அங்கே காணப்பட்டன. ஒரு பெரிய வெள்ளை ரோஜாவைப் பறித்து, ராஜீவ் அதனை உஷாவுக்கு அளித்தான்.

''ஃபார் மை லிட்டில் ப்ரின்ஸஸ்.''

''நீங்களே இதைச் சூட்டி விடுங்க.''

அவன் திரும்பி நிற்க, அவளே அந்த மலரை அவளுடைய கூந்தலில் சூடினான். ''இந்தத் தோட்டம் சுமார் எட்டு ஏக்கரா இருக்கும் உஷா. முந்தி இங்கே அடிக்கடி வருவேன். இப்போ சமீபமா கொஞ்ச நாளா வரலே. இனிமே உன்னோட அடிக்கடி இங்கே வரணும்னு நினைக்கிறேன்.''

''ரொம்ப அழகான, அமைதியான இடமா இருக்கு, ராஜீவ்.''

''உம். இதுக்கெல்லாம் இனிமே நீதானே எஜமானி! எல்லாத்தையும் பார்க்க வேண்டாமா? அதான் முதல்லே இங்கே அழைச்சுக்கிட்டு வந்தேன். கல்யாணத்துக்கு அப்புறம் மீதி எல்லாத்தையும் காட்டறேன்.''

''மீதி எல்லாத்தையும்னு?''

''என் சொத்துக்கள் எல்லாத்துக்குமே இனிமே நீ எஜமானி ஆகப் போறியே! இன்னும் எத்தனை இருக்கு பார்க்கிறதுக்கு! கெமிக்கல் பிளாண்ட், கேன்னிங் ஃபாக்டரி— உன்னை அங்கே அழைச்சுக்கிட்டுப் போய் என் ஒர்க்கர்ஸ் எல்லாருக்கும் உன்னை அறிமுகப்படுத்தி வைக்க வேண்டாமா? அப்புறம் ஊட்டியிலே டீ எஸ்டேட், ஊட்டி பங்களா, — அதையெல்லாம் நீ பார்க்க வேண்டாமா? அதுக்கப்புறம், ஐ வாண்ட் டு டேக் யூ ஆன் எ வொர்ல்ட் டூர். உலகம் பூராவையும் உனக்குக் காட்டப்போறேன்!''

உஷா சிரித்தாள். ''அப்பப்பா! எத்தனை ப்ளான்ஸ் போட்டு வைச்சிருக்கீங்க! என் கூடவே இங்கே அங்கேன்னு உலகம் பூராவும் சுத்திக்கிட்டிருந்தா உங்க ஆக்டிங் ப்ரொஃபெஷன் என்ன ஆகும்?''

''ஒண்ணும் ஆகாது. இனிமே நான் நடிக்கிற படங்களின் எண்ணிக்கையை ரொம்பக் குறைச்சுக்கப் போறேன். இத்தனை வருஷமா ஓயாமே வேலை செஞ்சது போதும்.

ஜெயலலிதா



இனிமே உன்னோட இருக்கிற துக்கு நிறைய நேரத்தை ஒதுக்கப் போறேன். ஐ வாண்ட் டு ஸ்பெண்ட் ஆல் மை டைம் வித் யூ!''

''எப்பவும் என் கூடவே இருந்தா உங்களுக்குச் சலிப்புத் தட்டிப் போகாதா ராஜீவ்?''

''சலிப்பா? நெவர். உன்னோட இருக்க இருக்க, ஆசை அதிகமாகுமே ஒழிய குறைய மாட்டேங்குதே உஷா.''

''நிஜமா?''

''சத்தியமா.''

அந்த நாள் முடிந்து ஹாஸ்டல் திரும்பிய போது, தன் வாழ்க்கையிலேயே அவ்வளவு மகிழ்ச்சிகரமான நாள் வேறு இருந்ததில்லை என உஷா நினைத்தாள்.

துரிதமாக நாட்கள் பறந்தன. கல்லூரித் தேர்வுகளுக்கு இன்னும் ஒரு வாரம்தான் இருந்தது.

அன்று புதன் கிழமை. உஷா தனது ஹாஸ்டல் அறையில் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தாள். அடுத்த புதன் கிழமை முதல் தேர்வுகள் தொடங்கவிருந்தன.

அடுக்காகச் சில புத்தகங்களைக் கையில் வாரிக்கொண்ட பொழுது, ஒரு புத்தகம் தவறிக் கீழே விழுந்தது. உஷா குனிந்து அதனை எடுத்தாள். அது அவளுடைய பர்ஸனல் டைரி. அதைப் புரட்டிப் பார்த்து வெகு நாட்கள் ஆகிவிட்டிருந்தன.

திறந்து விழுந்த டைரியைக் கையில் எடுத்தபோது, ஒரு பக்கத்தின் மீது உஷாவின் பார்வை பட்டது. அதில் அவள் குறித்து வைத்திருந்த சில விவரங்களைப் படித்தாள்.

உஷாவின் நெற்றி சுருங்கியது. ''இதில் ஏதோ தவறு இருக்கிறதே? என்ன அது?'' இதில் என்னவோ சரியாக இல்லையே? எதையோ மறந்து விட்டேனே? எதை மறந்து விட்டேன்?.....''

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, உஷாவுக்கு மாதவிடாய் சம்பந்தமாகச் சிறு கோளாறு ஏற்பட்டிருந்தது. சரியான தேதிக்கு ஆகாமல் கொஞ்சம் முன்னும்பின்னுமாக வரும். இதற்காக டாக்டரிடம் சில காலம் சிகிச்சையும் பெற்றாள். அப்பொழுது முதல் மாதவிடாய் தேதிகளை டைரியில் குறித்து வைத்துக் கொள்வது வழக்கமாகி விட்டது.

உஷாவின் பார்வை பட்ட அந்தப் பக்கத்தில் கடைசியாக அவள் குறித்து வைத்திருந்த தேதி மார்ச் 5. இன்று என்ன தேதி? மே ஒன்று. மை காட்! கடைசியாக எப்போது அவளுக்கு மன்த்லி பீரியட் ஏற்பட்டது? மார்ச் ஐந்துக்குப் பிறகு ஆகவே இல்லையே! ராஜீவின் நினைவு மனத்தை முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்ளவே, இதை அடியோடு மறந்து விட்டிருந்தாள்.

ஆண்டவனே! இதற்கு என்ன அர்த்தம்? அதுதானா? ஒரே நிமிஷத்தில் உஷாவின்



வாலிபன்: ''சார், உங்க பாங்கிலே ஸ்கூட்டர் வாங்கக் கடன் கிடைக்குமா?''

ஏஜெண்ட்: ''கிடைக்குமே? உங்களுக்கு என்ன உத்தியோகம்?''

வாலிபன்: ''வேலை ஒண்ணும் இப்ப இல்லே...''

ஏஜெண்ட்: ''பின்னே எதுக்கு ஸ்கூட்டர்?''

வாலிபன்: ''இண்டர்வியூக்கள் எல்லாம் அட்டெண்ட் பண்ண வேண்டாமா, அதுக்கு வசதியா இருக்குமேன்னுதான்!''

- ஜீ. நடராஜன்

உடல் வெட வெடவென்று நடுங்கத் தொடங்கிற்று. ஜுரம் பிடித்த மாதிரி உடம்பெல்லாம் பற்றி எரிவது போலத் தோன்றிற்று என்ன செய்வது? ஏதாவது செய்தாக வேண்டுமே! யாரைப் போய் உதவி கேட்பது?

வேறு யாரை? ராஜீவைத்தான். வேறு யார் இருக்கிறார்கள் இப்போது எனக்கு? ஆனால் சனிக்கிழமை வரையில் அவரைப் பார்க்க முடியாதே! உடனே அவருக்கு ஃபோன் செய்ய வேண்டும்! சனிக்கிழமை வரைக்கும் காத்திருக்க முடியாது!

வேகமாகப் படிகளில் இறங்கிக் கீழே இருந்த டெலிபோன் பூத்திடம் சென்றாள். சுற்றிலும் ஒரு முறை பார்வையைச் செலுத்தினாள். சுற்றுப்புறத்தில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

மெலிதான ஒரு நபர் மட்டுமே நிற்கக் கூடிய அளவில் இருந்த சிறிய டெலிபோன் பூத்துக்குள் நுழைந்து, பத்திரமாகக் கதவைச் சாத்தினாள். இந்த பூத் சவுண்ட் புரூஃப் என்று பெயர். ஆனால் அதைக்குறித்து அவளுக்குச் சந்தேகமே.

அவசரமாக ராஜீவின் பிரைவேட் டெலிபோன் நம்பரைச் சுழற்றினாள். கடவுளே! அவர் வீட்டில் இருக்க வேண்டுமே! எங்காவது வெளியே சென்றிருந்தால்?

ஆறு முறை போன் மணி ஒலித்த பிறகு ராஜீவ் ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ!''

கடவுளே! தேங்க் யூ! அவசரமாக ஐம்பது பைசா நாணயத்தை ஸ்லாட்டுக்குள் தள்ளினாள்.

''ஹலோ? ராஜீவ்?''

''உஷா!'' ராஜீவின் குரலில் ஆச்சரியமும் சந்தோஷமும் கலந்திருந்தன.

''திஸ் இஸ் எ ப்ளெஸண்ட் சர்ப்ரைஸ்! இப்ப உன் போனை நான் எதிர்பார்க்கலே!''

''ராஜீவ், என்னமோ நடந்து போச்சு!''

அவள் குரலில் வெளிப்பட்ட பதற்றத்தைக் கேட்டவுடன் ராஜீவினுடைய உடல் முழுதுமே விறைத்துப் போயிற்று. உடனே அவன் வேறு விதமாக அவள் சொன்னதைப் புரிந்து கொண்டான்.

''நம்ம விஷயம் காலேஜ்லே தெரிஞ்சு போச்சா? யாராவது உன்னை அதட்டி மிரட்டினாங்களா? இத பாரு, நீ எதுக்கும் பயப்படாதே. நான் இப்பவே அங்கே வரேன்! நீ என்னுடைய ஃபியான்ஸி, நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு உங்க ப்ரின்ஸிபால் கிட்டயே சொல்லிடறேன்! இப்பவே உன்னை அங்கேர்ந்து அழைச்சுட்டுப் போயிடறேன்! நீ யாருக்கும் பயப்பட வேண்டியதில்லே. நான் இருக்கும்போது உன்னை யார் என்ன பண்ணிட முடியும்னு நானும் பார்த்துடறேன்!''



## ப்ரியா அல்லது விஜயகீதா!

**கு**மாரி விஜயகீதாவை டைரக்டர் ஹரிஹரன் மலையாளப் பட உலகுக்கு அறிமுகம் செய்யும்போது ப்ரியா என்று புதுப் பெயர் சூட்டினார். மாணிக்கத் தொட்டில், ஒரு ஊதாப்பு கண் சிமிட்டுகிறது, வாழ்த்துங்கள் முதலிய படங்களில் இவரைச் சந்தித்தீர்கள்.

''நான் சரபஞ்சரம் மலையாளப் படத்துக்காகக் கோடைக்கானலுக்குப் போயிருந்தேன். சூஸைட் பாயிண்ட்லே நடிகர் ஜெயனுடன் படப் பிடிப்புத் தொடங்கியது'. அதள பாதாளத்தில் என்னையும் ஜெயனையும் காலிலே கயிறு கட்டி இறக்கி விட்டாங்க. ஆர்டிஸ்ட், காமிராமேன், டைரக்டர் தவிர வேறு யாரையும் அங்கே அனுமதிக்கவில்லே. கரணம் தப்பினால் மரணம்தான்!

''அவ்வப்போது டைரக்டர் தைரியமூட்டினார். என் கூட வந்த அம்மா, எட்டத்தில் நின்னு அழுதுக்கிட்டே இருந்தாங்க. இவ்வளவு கஷ்டப்பட்டு அந்த ஷாட்டை எடுத்தும் சென்சாரின் கத்தரிக்கோலுக்கு பணிந்து போக வேண்டியதாகி விட்டது. படத்தில் இந்தக் காட்சி இல்லே!'' என்று சொல்லும் ப்ரியா இப்போது 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' 'பாக்கு வெற்றிலே' ஆகிய படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார்.

மேலட்டை வண்ணப்படம்:
**சரஸ்வதி சத்தியமூர்த்தி**
பேட்டி: **சிக்கி**

---

அவன் வார்த்தைகளில் வெளிப்பட்ட அவன்பால் அவனுக்கிருந்த அன்பும் அக்கறையும், அவளுடைய வயிற்றில் பாலை வார்த்தாற்போல் இருந்தது. பதற்றம் நீங்கிச் சற்று தெம்பு திரும்பவே, லேசாகச் சிரித்தாள். ''நோ, நோ டார்லிங். அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லே. நம்ம விஷயம் இன்னும் இங்கே யாருக்கும் தெரியல்லே.''

''அப்புறம் வேறே என்ன சமாசாரம்?''

''ராஜீவ்.... எனக்கு .... இப்பத்தான் ஞாபகம் வந்தது... போன மாசம் மன்த்லி பீரியடே வரலே.... மறந்தே போயிட்டேன். அது மூணு வாரங்களுக்கு முன்னுலேயே வந்திருக்கணும்... ராஜீவ்! எனக்குப் பயமா இருக்கு!''

அவள் குரலில் வெளிப்பட்ட பயத்தைப் புரிந்துகொண்டு உடனே அவளைச் சமாதானப்படுத்தி, தைரியமூட்டி ஆறுதல் கூற முற்பட்டான். ''டார்லிங்! டோன்ட் வர்ரி சனிக்கிழமை நீ வரும்போது இங்கே ஒரு லேடி டாக்டரை வரவழைச்சு உன்னைப் பார்க்கச் சொல்றேன். உஷா, நீ நினைக்கிற மாதிரி ஏதாவது ஆகியிருந்தாலும் அதனுலே என்ன? உடனே நம்ம கல்யாணத்தை முடிச்சுட்டாப் போச்சு.''

ஆறுதல் அடைந்த வகையில் உஷா நீர்க்கமாக சுவாசித்தாள். மனத்திலிருந்து பயமும் பதற்றமும் நீங்கவே, விறைப்பாக இருந்த அவளது உடல் தளர்ந்து போவதை உணர்ந்தாள். மனத்திலிருந்த பெரியசுமையை இறக்கி வைத்த மாதிரி தோன்றியது.

''உங்க கூடப் பேசினதிலேயே, மனசுக்கு எவ்வளவோ ஆறுதலா இருக்கு, ராஜீவ். சில நிமிஷங்களுக்கு முன்னுலே எவ்வளவு பயந்து போயிருந்தேன் தெரியுமா?''

''நான் இருக்கும்போது நீ எதுக்கும்மா பயப்படணும்? நான் இருக்கிற வரைக்கும் உன்னே யாரும் ஒண்ணும் பண்ணிட முடியாது! எதுவாயிருந்தாலும் உடனே என்னேக் கூப்பிடு.''

''தேங்க்யூ டார்லிங்.''

''உஷா, சனிக்கிழமை வரைக்கும் காத்திருக்கலாம்னு சொல்லு. இல்லே, நீ விரும்பினு, இப்பவே வந்து அங்கேர்ந்து உன்னேக் கூட்டிக்கிட்டுப் போக நான் தயார். இப்பவே வேணும்னு ஸ்ரீரங்கம் போய் உங்க அம்மாவைப் பார்த்து....''

''ப்ளீஸ், ராஜீவ்! வேண்டாம். சனிக்கிழமை அன்னிக்கு டாக்டர் என்ன சொல்றாங்கன்னு கேட்டுடலாமே. அதுக்குள்ளே அவசரப்படுவானேன்?''

''உன் இஷ்டம். நீ எப்படி விரும்பறயோ அப்படியே செய்யலாம். சியர் அப், ஸ்வீட் ஹார்ட்! ஒண்ணும் ஆயிடல்லே.''

''ஐ'ம் ஆல்ரைட் நௌ ராஜீவ். உங்க குரலைக் கேட்டதும் எல்லாம் சரியாப் போச்சு. எதற்காக இப்படிப் பதறிப்போயிட்டேன்னு இப்ப எனக்கே புரியலே.''

''ஓ.கே. டோன்ட் வர்ரி. சனிக்கிழமை நீ வரும்போது டாக்டர் இங்கே ரெடியா இருப்பாங்க.''

''தேங்க் யூ டார்லிங். பை!''

''பை. உடம்பை ஜாக்கிரதையாப்பார்த்துக்க.''

''சரி.''

''குட் நைட் லவ்.''

''குட் நைட்.''

**ரா**ஜீவினுடைய இல்லத்தில் டாக்டர் மதுரம் காத்திருந்தார். அவர் சுரேஷுக்கு உறவு. அதுவுமில்லாமல், சாதாரணமாகவே அதிகம் பேசாத இயல்புடையவர். அவர் மூலமாக எந்தச் செய்தியும் வெளியில் பரவி விடும் என்ற பயத்துக்கே இடம் அளிக்காதவர்.

டாக்டர் மதுரம் உஷாவைப் பரிசோதித்தார். ''ப்ரெக்நன்ஸி மாதிரிதான் தெரியுது. எதுக்கும் ஸ்பெசிமனே லேபுக்குக் கொண்டு போய் க்ரேவின்டெக்ஸ் டெஸ்ட் பண்ணிப் பார்த்துடறேன். ஒரு மணி நேரத்துக்

ருன்னே ரிஸல்ட்டை டெலிபோன்லே சொல்லிடறேன்.''

டாக்டர் கூறியதைப் புரிந்துகொண்ட உஷா அவர் கேட்ட ஸ்பெசிமனைச் சேகரித்து பாட்டிலே மூடிக் காகிதத்தில் சுற்றிக் கொடுத்தாள்.

ஒரு மணி நேரம் கழித்து டாக்டர் மதுரம் போன் செய்து ராஜீவுடன் பேசினார். ''ஐ ஸீ. தேங்க் யூ வெரி மச் டாக்டர்.'' ராஜீவ் ரிஸீவரைக் கீழே வைத்தான்.

''டாக்டர் என்ன சொன்னாங்க?'' ஸஸ்பென்ஸ் தாளாமல் ஆவலுடன் கேட்டாள் உஷா. விரிந்த புன்னகையோடு ராஜீவ் அவள் பக்கம் திரும்பினான். அவளை இறுகத் தழுவினான். அவள் தலையைத் தனது தோளின் மேல் சாய்த்துக் கொண்டாள்.

''ராஜீவ்.... நான்....?''

''யெஸ் மை லவ். நான் அப்பா ஆகப் போறேன். யூ ஆர் கோயிங் டு ஹேவ் மை பேபி! இஸன்ட் இட் வண்டர்ஃபுல்?''

அவள் கண் இரப்பைகளிலுள்ள அடர்த்தியான மயிரின் திரைக்குப் பின்னிருந்து, சந்தேகத்துடன் அவன் முகத்தை எட்டிப் பார்த்தாள். ''என்னவோ... ஐ'ம் கன்ஃபியூஸ்ட். ராஜீவ்... நிஜமாகவே இதைப் பத்தி உங்களுக்குச் சந்தோஷமா?'' தயங்கியவாறு உஷா கேட்டாள்.

''சந்தோஷமாவா? விட்டா இப்ப டான்ஸே ஆடுவேன்! உஷா, நீ என் மனைவி மட்டுமில்லே. என் குழந்தைக்குத் தாயாகப் போறே! ஓ காட்! என்னாலே நம்பவே முடியலே! ஐ திங்க் இட்ஸ் சிம்ப்ளி ஃபென்டாஸ்டிக்!'' கரடித் தழுவலில் அவளை அணைத்துக் கொண்டான். அவளுடைய எலும்புக் கூடே நொறுங்கிவிடும்போல இருந்தது.

''ராஜீவ்... ஐ'ம் ஸோ ரிலீவ்ட்... என்னவோ இவ்வளவு சீக்கிரம் ஒரு குழந்தை பிறக்கறதை நீங்க விரும்ப மாட்டீங்கன்னு நினைச்சேன்.''

''உஷா!'' அந்த ஒரு சொல்லாலேயே அவளைச் செல்லமாகக் கண்டித்தான். ''நீ இன்னும் என்னை முழுமையா புரிஞ்சுக்கலே. பிறக்கப் போற குழந்தை, என்னுடைய, உன்னுடைய ஒரு அம்சம்! அதை எப்படி என்னாலே விரும்பாம இருக்க முடியும்! உஷா, கல்யாணம், குழந்தை — இதெல்லாம் இனி என் வாழ்க்கையிலேயே கிடையாதுன்னு எண்ணியிருந்த எனக்கு, முதல்லே நீ கிடைச்சதும், இப்ப இந்தச் செய்தியும்— ஓ! ஐ ஜஸ்ட் கான்ட் எக்ஸ்பிளெயின் ஹவ் ஐ ஃபீல்!''

''குழந்தை வேணும்னு அவ்வளவு ஆசையா உங்களுக்கு?''

''ஆசையா! அதை எப்படிச் சொல்வேன்! அதுக்கு இந்த ஜென்மத்திலே பிராப்தம் இல்லேன்னு ஆசையை அடக்கிக்கிட்டு இத்தனை நாளா மனசைக் கல்லாக்கிக்கிட்டேன். பட், காட் இஸ் கிரேட்! எதிர்பாராத தருணத்திலே, உன்னை அனுப்பி வெச்சான். உன்னோட ஒரு புது வாழ்க்கையே அமைச்சுக் கொடுத்துட்டான்! உஷா, ஐ லவ் யூ!''

''ஐ லவ் யூ டூ!''

''தென் கம் ஆன்! இந்த விஷயம் தெரிஞ்சதுக்கப்புறமும் காத்திருக்கிறதுலே அர்த்தமில்லே. புறப்படு. ஒரேயடியா ஸ்ரீரங்கத்துக்குப் போய், உங்க அம்மாகிட்ட எல்லாத்தையும் சொல்லி, கல்யாணத்தைச் சட்டுப்புட்டுனு முடிச்சிடலாம்!''

அவன் சொன்னது சரியென்றுதான் அவளுக்கும் இப்போது தோன்றியது. முன்பு அவள் என்ன நினைத்திருந்தாலும், தான் கருத்தரித்திருக்கும் விஷயம் தெரிந்ததும் இனித் தாமதிப்பது நல்லதல்ல என்று அவளும் கருதினாள். ''சரி, அப்படியே செய்யலாம். ஆனா.... புதன் கிழமை பரீட்சைகள்....''

''பரீட்சைகள்! பிளடி ஹெல்! இப்பக் கூடப் பரீட்சைகள்தானா முக்கியம்?''

''சரி. நீங்க சொல்றபடியே ஊருக்குப் போகலாம்.''

இன்டர்காம் ஒலித்தது. கடுப்புடன் ராஜீவ் ரிஸீவரை எடுத்தான். ''என்ன சுரேஷ்? டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு சொல்லி வைச்சிருந்தேனே?''

''ஸாரி ஸார். ரொம்ப முக்கியமான தகவல்....''

''என்ன?''

''நந்தகோபால் இறந்து போயிட்டார் சார்.''

''வாட்! டைரக்டர் நந்தகோபாலா? எப்போ?''

''ஒரு மணி நேரத்துக்கு முன்னாலே நர்ஸிங் ஹோமிலே காலமாயிட்டார் ஸார். இனிமேத்தான் பாடியை வீட்டுக்கு எடுத்துக்கிட்டு வரப் போறாங்க.''

''ஓ காட்! சுரேஷ், சீக்கிரம் ஒரு பெரிய மலர் வளையத்தை வாங்கிட்டு வா. நீ திரும்பி வந்ததும் பஸ்ஸர் கொடு. உடனே அவர் வீட்டுக்குப் போகணும். நீயும் கூட வரணும்.''

''சரி ஸார்.''

ராஜீவ் பெரிய அதிர்ச்சி யுற்றவனாகக் காணப்பட்டான். சோர்ந்து உட்கார்ந்து கண்களைக் கையால் மூடிக் கொண்டான்.

''என்ன விஷயம் ராஜீவ்?'' பதற்றத்துடன் கேட்டாள் உஷா. சிறிது நேரம் ராஜீவால் பேசமுடியவில்லை. பிறகு, தலை


### பரிதாபத்துக்குரியவர்!

ஒரு விருந்தின்போது, பெஞ்சமின் பிராங்க்ளினிடம் அவருடைய நண்பர் ஒருவர் கேட்டார்: ''மிகவும் பரிதாபத்துக்குரிய மனிதன் என்று நீங்கள் யாரைக் கருதுகிறீர்கள்?''

''மழை நாளில் வீட்டில் தனியாய் இருக்கிற படிக்கத் தெரியாத மனிதன்'' என்று உடனே பதில் அளித்தார் பிராங்க்ளின்.

- கோவி. பரஞ்ஜோதி






நிமிர்ந்து உஷாவைப் பார்த்தபோது, அவன் கண்கள் கலங்கி யிருந்ததைக் கவனித்தாள்.

''ராஜீவ்! என்ன நடந்தது?''

''என்னை இண்டஸ்ட்ரிக்கு முதல் முதலா அறிமுகப்படுத்தியவர் — இத்தனை வருஷங்களா எனக்குத் தகப்பனார் ஸ்தானம் வகித்தவர் — டைரக்டர் நந்தகோபால். அவர்.... அவர்.... செத்துப்போயிட்டாராம் உஷா!''

உணர்ச்சி வசப்பட்டு அவன் தொண்டை அடைத்துப் போகவே, மேலும் கொஞ்ச நேரம் அவனால் பேச முடியவில்லை.

''ஐ'ம் ஸோ ஸாரி ராஜீவ்.''

சிறிது நேரம் கழித்து, இறந்துபோன நந்தகோபாலைப் பற்றி அவனிடம் பேச ஆரம்பித்தான். மறுபடியும் இண்டர்காம் பஸ்ஸர் ஒலித்தது. ராஜீவ் அதனை எடுத்தான்.

''ஸார், வளையம் ரெடி. காரும் ரெடி.''

''பாடியை வீட்டுக்குக் கொண்டு வந்துட்டாங்களா?''

''ஆமாம் ஸார். இப்பத்தான் போன் பண்ணித் தெரிஞ்சுக்கிட்டேன்.''

''சரி. நான் வந்துக்கிட்டே இருக்கேன்.''


உஷாவிடம் திரும்பினான். ''உஷா, நான் போய் அவருக்கு இறுதி மரியாதை செலுத்திட்டு வந்துடறேன். நீ இங்கேயே இரு. நான் திரும்பி வந்ததும் ஊருக்குப் புறப்படறதைப் பற்றி முடிவு பண்ணலாம்.''

ராஜீவ் திரும்புவதற்கு இரண்டு மணி நேரம் ஆயிற்று. மிகவும் சஞ்சலம் உற்றவனாய்க் காணப்பட்டான்.

''உஷா, இன்னிக்கு ஊருக்குக் கிளம்ப முடியாது போலிருக்கு. அவருடைய மகன் டெல்லியிலே இருக்காராம். நாளைக்குத்தான் வந்து சேருவாராம். அதுக்கப்புறம்தான் இறுதிச் சடங்குகளைச் செய்வாங்க. இங்கே அவருக்கு வேற யாருமில்லே. எல்லா ஏற்பாடுகளையும் நான்தான் மேற்பார்வை இடணும். அது என் கடமை. சினிமா ஃபீல்டுக்கு என்னை அறிமுகப்படுத்தி வச்சு இவ்வளவு தூரத்துக்கு என்னை வளர்த்து விட்டவர் நந்தகோபால். அவருக்காகக் கடைசியா இதை நான் செய்தே ஆகணும். தகனம் முடியறவரைக்கும் நான் இருந்தே ஆகணும். அப்படிப் பார்த்தா நாளைக்குக் கூட நாம் ஸ்ரீரங்கத்துக்குக் கிளம்ப முடியுமோ இல்லையோ தெரியலையே. எல்லாம் அவர் மகன் வந்து சேர்வதைப் பொறுத்து இருக்கு. மார்னிங் ஃப்ளைட்லே வந்துட்டார்னாப் பரவாயில்லே. மத்தியானத்துக்குள்ளே எல்லாம் முடிஞ்சுடும். மார்னிங் ஃப்ளைட்லே டிக்கட் கிடைக்கலைன்னு நைட் ப்ளைட்லேதான் வருவார். அப்படீன்னு அவர் வந்து சேர்றதுக்கே ராத்திரி பதினொரு மணி ஆயிடலாம். என்ன செய்யறதுன்னே எனக்குப் புரியலே உஷா!''

சிறிது நேரம் நிலவிய மௌனத்தை உஷா கலைத்தாள். ''நான் ஒண்ணு சொல்றேன். கோவிச்சுக்க மாட்டீங்களே?'' என்றாள்.

(தொடரும்)




இப்போது சென்னையையும்-போர்ட்பிளேயரையும் இணைக்கும் புதியதொரு விமானவழி இரண்டே மணி நேரத்தில்...ஒவ்வொரு புதன், ஞாயிற்றுக் கிழமைகளில் போயிங் 737 மூலம்...சென்னை வழியே மற்ற நகரங்களுக்கு தொடர்பு கிடைக்கும். அக்டோபர் முதல் தேதியிலிருந்து நடப்புக்கு வருகிறது. உங்கள் பயணத்துக்கு முன்னதாகவே ரிஸர்வ் செய்து கொள்ளுங்கள்.

| புதன்/ஞாயிறு ஐசி 523 | | புதன்/ஞாயிறு ஐசி 524 |
|---|---|---|
| 0605 | புறப். சென்னை சேர். | 1105 |
| 0815 | சேர். போர்ட் பிளேயர் புறப். | 0855 |

டிக்கட் புக் செய்யவும் உதவிகளுக்கும் அருகிலுள்ள எமது அலுவலகத்துடன் உங்கள் பயண ஏஜண்டுடன் தொடர்பு கொள்ளுங்கள்.




பல இடங்களுக்கும் செல்லுங்கள்
IA மூலம் பறந்து

## இந்தியன் ஏர்லைன்ஸ்

துணைக்கண்டத்தில் மிகப்பெரிய
இந்திய விமான நிறுவனம்

# விரக்தி

கிருஷ்ணகுரு



சிவராமன் கூட்டல் கழித்தல்களில் ஆழ்ந்து போயிருந்தார்.

எங்கேயோ போய்ச் சுற்றி அலைந்துவிட்டு வந்த ராஜப்பா, சிவராமன் மேஜையைத் தாண்டி யதும் கையை உதறிக் கொண்டு நின்றார்.

''அடடா... நீ ஒருத்தன் இருக்கிறதையே மறந்துட்டேம்பா...'' அரைவாசி கூட்டலை நடுவில் விடப் பயந்து கூட்டிமுடித்து நிமிர்ந்து பார்த்தார்... புருவம் தெறித்தது சிவராமனுக்கு.

''என்ன சமாசாரம்?''

''ஒன்னுமில்லே. சர்வே டிபார்ட்மென்ட்காரன் ராமன் நகர்லே பிளாட் போட்டிருந்தான். ஒரு அஞ்சு பிளாட் மீதியிருந்தது. ஹெட் சர்வேயர் நமக்கு வேண்டிய வர்... உட்கார்ந்து பிடிச்சு அஞ்சையும் வாங்கி நான் ஒன்னு எடுத்துண்டு வேண்டியவங்களுக்கு மீதியைத் தந்துட்டேன்... ஒரு மனை மூவாயிரம் கூட ஆகலே... டேம் சீப்பப்பா... ஒரு கன்றாவி.. உன்னை மறந்துட்டேன்...''

சிவராமன் சின்னதாகச் சிரித்தார். அதில் லேசான விரக்தி தொனித்தது.

''பரவாயில்லே ராஜப்பா... அடுத்த சான்ஸ் பார்க்கலாம்.... விடு.''

ராஜப்பா என்னென்னவோ சொல்லி வருத்தப்பட்டார்.

''பாரேன் மணிக்குக் கொடுத்தேன். அவன் வேண்டாம்கிறப்போ அவன் மச்சினன் பக்கத்திலே இருந்து பிடிச்சுட்டான். தட்டமுடியலே.... இவனெல்லாம் நமக்கு எந்த விதத்திலே வேண்டிய வன்... உன்னைப் போய் மறந்திட்டேனே... நீயும் எவ்வளவு நாளா ஒரு நல்ல இடத்துக்கு அலையறே.... என் புத்தியைச் செருப் பாலே அடிக்கணும்...''

''சீ விடு... முட்டாள் மாதிரி பேசாதே'' என்று தன் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு ராஜப்பாவைச் சமாதானம் செய்தார் சிவராமன். ராமன் நகர் பிரமாத மான இடம்... பக்கத்திலே காலேஜ், ஹைஸ்கூல்... ஆபீஸ் லொகாலிட்டி. கேட்கவே வேண்டாம்.

''இந்தாப்பா உன் ஸ்டேட்மென்ட். பத்து நாளா மண்டையை உடைச்சுடுச்சு'' என்று சிவராமன் நீட்டியதை ராஜப்பா வாங்குகிறபோதுகூட மனசு குடைந் தது. சிவராமன் பத்து வருஷமாக எவ்வளவு உதவுகிறான்.... ஒரு முக்கிய மான விஷயத்தில் மறந்து போனேமே என்று மனசு கிடந்து அடித்துக் கொண்டது.

பாத்ரூமில் முகத்தைக் கழுவிக் கொண்டிருந்தான் சிவராமன். சாரதா தன் தம்பியிடம் என்னவோ அங்கலாய்ப்பது கேட்டுக் குழாயை நிறுத்திக் கவனித்தார்.

''பாரு ரமணி... சேலத்துக்குப் போறபோது முக்கியமா இவருக்கு ஒரு ஐம்பது மல்கோவா காய் வாங்கி வந்துடணும்னு நெனைச்சேன்.... இவரும் ஏழு வருஷமா சொல்றார்... சேலத்திலே இருந்தவராச்சே. சேலம் குண்டு மல்கோவான்னு உயிர்...வாங்கணும் வாங்கணும்னு நெனைச்சிட்டே இருந் தேன். திடீர்னு காரைக் கொணர்ந்து நிறுத்தி சும்மா போகுது சீக்கிரமா ஏறுன்னு அப்பா சொன்னதும் எல்லாமே மறந்து போச்சு.''

சிவராமன் தன் விரக்தியைக் கழுவித் துடைத்துக் கொண்டான்.

''அக்கவுண்டண்டைக் கூப்பிடு'' என்று சொல்லிவிட்டுப் பேப்பரில் மூழ்கி இருந்த லால் எதிரே வந்து நின்ற சிவராமனைப் பார்த்துப் புன்னகைத்து க்ஷேமங்களை விசாரித்தார். நிறையப் பேசினார். அவர்தான் கம்பெனி சேர்மன்.

''ஆமா... அக்கவுண்டண்டுக்குச் சொல்லி அனுப்பிச்சேன்... யார் அது... வரச் சொல் சிவராமன்....'' என்றார் முடிவில்.

''நான்தான் அக்கவுண்டண்ட்....''

திடுக்கிட்டு நிமிர்ந்தார் லால்... ''என்னய்யா இது... நயாயப்படி உமக்கு ரீஜனல் மானேஜர் போஸ்ட் தந்திருக்கணும் யாருமே உன்னைக் கவனிக்கலையா? எனக்கு எழுதறது?''

''எழுதினேன்... உங்க பேருக்கே எழுதினேன்...''

பொறி தட்டி நின்றார் லால். ''ஆமாய்யா நான்கூட அதைப் படிச்சேன். அதை வேறே யாரோன்னு நெனைச்சிட்டேன்.. ஸாரிய்யா மறந்துட்டேன். உன் ஞாபகமே வரலே...''

அன்று மாலை விருந்து நடந்தது. தனது மகளுடன் விருந்துக்கு வந்திருந்தார் சிவராமன். லால் கண்ணில் சிவராமன் மகள் பட அவளைக் கூப்பிட்டுத் தட்டிக் கொடுத்தார். ''யார் பொண்ணு நீ?''

''சிவராமன் பொண்ணு.''

லாலுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. சிவராமனுக்கு இப்படி ஒரு பொண்ணா... ''இங்கே வா சிவராமா... ஆச்சரியமா இருக்கே... ரொம்ப அழகா இருக்கா. மூக்கு முகம் எல்லாம் உனதுதான். ஆனா சேட்டுப் பெண் மாதிரி இந்தக் கலர் எங்கேயிருந்து வந்தது.... உன் சம்சாரம் கூட கறுப்பில்லே.''

சிவராமன் கூட்டத்தின் மத்தியில் வெட்கத்துடன் சிரித்துக் கொண்டான். ''இதுவும் கூட ஒரு மறதியால் வந்த வினை ஸார்...''

லால் புரியாமல் பார்த்தார்.

''பொதுவா எல்லோரும் என்னை எதிலேயும் மறந்திடுவாங்க.. இது சகஜம். இந்தக் குழந்தையைக் கொடுக்கிறபோது கடவுள் எனக்குத்தான் தர்றோம்னு மறந்திட்டார்... அதான் இவ்வளவு அழகா சிவப்பா பொறந்திட்டது. இது எனக்குத் தர்ற குழந்தைன்னு கடவுளுக்குத் தெரிஞ்சிருந்தா இது கூட கரிக் கட்டையாத்தான் இருந்திருக்கும்.''

எல்லோரும் ஒரு கணம் விக்கித்தனர். அதில் சிவராமனின் நியாயமான விரக்தி பளிச்சிட்டது. லாலுக்குக் கூட என்னவோ மாதிரி ஆகிவிட்டது.

ஒரு மாதம் கழித்து ராஜப்பா உற்சாகமாக வந்தான்.

''சிவராமா! ஒரு அதிர்ஷ்டம் பாரு...ராம் நகர்லே ஒரு இடம்... அஸ்திவாரம் போட்டு ஆறுயிரத்துக்குத் தர்றான். இன்னும் நாலு நாள்லே இருபதாயிரம் வரை கடன் வேறே கிடைக்கப் போகுது. என் கிட்டே மூவாயிரம் ரூபா இருந்தது. உடனே கொடுத்து உன் பேரிலே அக்ரிமெண்ட் பண்ணிட்டேன். ஒரு மாதத்தில் நீ ஆறுயிரம் ரெடி பண்ணு..''

சிவராமன் தம்மைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டார்.

''நிஜமாகவா நடக்கிறது இதெல்லாம்?''

நாலு நாள் கழித்து ஒரு தபால் வந்தது. பிரித்துப் பார்த்தார். டி.வி.எஸ். பார்சலில் நூறு மல்கோவா குண்டு காய்கள் போட்டிருப்பதாக மாமனார் எழுதியிருந்தார். வேபில் இணைந்திருந்தது. மறதிக்குப் பேர் போன மாமனார் சமயத்தில் மாப்பிள்ளை பெயரைக் கூட மறக்கிற ஆள் ஞாபகமாகப் பழம் அனுப்பியதைப் பார்த்தபோது உலகத்தையே நம்ப முடியவில்லை சிவராமனால்.

கோயமுத்தூர் ரீஜனல் மானேஜராகப் பதவி உயர்வு பெற்றுப் பதவி ஏற்றிருந்த சிவராமனைப் பாராட்ட நேரில் வந்திருந்தார் லால். தாடி மீசையோடு இருந்த சிவராமனைப் பார்த்துக் கொஞ்சம் கோபம் வந்தது அவருக்கு.

''ஏன்யா வேலை வேலைன்னு சாகறே... கொஞ்சம் ரெமப்படாமே இருன்னுதானே இந்தப் பிரமோஷன் தந்தேன்... நீயும் உன் மீசை தாடியும்... ம்... போகுது... உன் பொண்ணு... பேரு என்ன... ஸ்வப்னாவா... நல்ல பேருய்யா... நல்லா இருக்காளா?''

பொசுக்கென்று சிவராமன் கண்களில் நீர் கோத்துத் துள்ளி இறங்கியது.

''அவ பெயருக்கு ஏத்த மாதிரி எங்களுக்கு ஸ்வப்னமாயிட்டா ஸார்....''

''என்னய்யா சொல்றே....''

''நீங்கள்ளாம் மறந்திருந்தீங்க... அப்புறம் உங்களுக்கு என் ஞாபகம் வந்து வர வேண்டியதைத் தந்தப்போ கடவுளுக்கும் ஞாபகம் வந்து தன் தப்பைத் திருத்திட்டார். தவறுதலா கொடுத்ததைத் திருப்பி எடுத்திட்டார்.''

''மை குட்னஸ்... ஐயாம் ஸாரி சிவராம்''

''ஒருவேளை நான் நெனைக்கிறேன் ஸார்... உங்க மறதிகளைச் சரிக்கட்டத்தான் ஞாபகமா கடவுள் எனக்கு அந்தக் கொழந்தையைக் கொடுத்திருக்கார். நான் புரிஞ்சுக்கலே. உங்க மறதிகளை ரொம்பப் பெரிசா எடுத்திட்டேன். அவர் கொடுத்ததைப் பாராட்ட எனக்குத் தெரியலே. கெடைக்காம இருந்தது எல்லாம் எவ்வளவு அல்பம்... கெடச்சது எவ்வளவு உசத்தின்னு இப்போ புரியுது. ஆனா லேட். கடவுள் நம்மை எப்பவுமே ஞாபகத்தில் வச்சிருக்கார் ஸார்.... எப்பவுமே....''

இப்போது சிவராமனின் பேச்சில் இருந்த விரக்தியின் ஆழம் லாலுக்கும் புரிந்தது.

---

ஒரு தத்துவப் பேராசிரியர் வீட்டில் ஒருவன் திருடி விட்டு ஓடுகிறான். பேராசிரியர் வேறு திசையாக ஓடினார். இறுதியில் கல்லறைத் தோட்ட வாயிலில் போய் உட்கார்ந்தார். அவரிடம் காரணம் கேட்டதற்கு அவர் சொன்னார்: 'என்றைக்காவது ஒரு நாள் அவன் இங்கு வந்துதானே ஆக வேண்டும்!'

- பிரியா பாலு



# ISI முத்திரையுடன் செயல் புரியும்'வாட்டர் ஹீட்டர்' மாடல்கள் இவை ஒன்றுதான்



15, 25, 35 மற்றும் 50
லிட்டர் கொள் அளவுகளில்
கிடைக்கின்றன. எந்த
ஸ்பென்ஸர்ஸ் வாட்டர்
ஹீட்டரும் ISI வகுத்த
முறைப்படி செயல்படுகின்றன.
இத்துடன் தரமான 'ஸ்பென்ஸரின்'
தயாரிப்பும் சேர்ந்து 'ஸ்பென்ஸர்ஸ்'
வாட்டர் ஹீட்டர்களை மிகச்
சிறந்தவைகளாக செய்கின்றது.

**ஸ்பென்ஸர்ஸ்**
வாட்டர் ஹீட்டர்

ஸ்பென்ஸர் & கோ. லிட்.,
769, அண்ணா சாலை,
சென்னை 600 002.

S 3177 A TAM

# கடல் ராணி

## சாண்டில்யன்

### அத்தியாயம் 61

## மூவரையும் அழிப்பேன்!

**சா**ருவும் ராணியும் தனது உடலுக்குக் குறுக்கே பாய்ந்து ஒருவர் சட்டையை இன்னொருவர் பிடித்துக் கிழித்துவிடும் நிலை வந்ததும் அவர்களை அடக்கத் தனது இரு கைகளாலும் இறுக்கிப்பிடித்த அனந்த் "ஹக் தெம் ஸ்ட்ராங்; க்ரஷ் தெம் (அவர்களை இறுக்கி அணை, நொறுக்கிவிடு)" என்று லிவானியர் போட்ட மகிழ்ச்சிக் கூச்சலால் சிறிது சினம் அடைந்தானென்றாலும் பெண்களின் திமிரலால் வேறு வழியில்லாத காரணத்தால் லிவானியர் யோசனையைப் பின்பற்றி அவர்கள் இடைகள் வளைந்து கன்னிப் போகப் பிடித்து இருவரையும் தன்னை நோக்கித் திருப்பினான். அதன் விளைவாக இரு பெண்களும் அவன் மார்பின் மீது அழுந்தி விட்டதாலும், அழுத்தியதோடு நில்லாமல் திமிறியதாலும் அனந்தைப் பின்புறமாகச் சாய்த்து விட்டதாலும், அனந்த் தனது நாற்காலி மீது உட்கார முற்பட்டு நாற்காலியுடன் பின்னால் தடாலென விழுந்தான். அப்பொழுதும் அந்தப் பெண்களின் சீற்றம் தணியாமல் விழுந்து கிடந்த அனந்தின் இரு புறத்திலும் முழங்கால்களைத் தரையில் ஊன்றித் தொடைகளை அவன் விலாப் புறங்களில் அழுத்திக் குறுக்கே பாய்ந்து சண்டையிட்டார்கள். இந்த விபரீத நிலையில் மூவரையும் பார்த்த லிவானியர் நடுவே இருந்த மேஜையைச் சுற்றி வந்து அனந்தை விடுவிக்க முயன்று இரு பெண்களையும் நோக்கிக் குனிந்து "லேடீஸ்! டோன்ட் கில் ஹிம் (பெண்களே அவனைக்கொன்றுவிடாதீர்கள்)" என்று விண்ணப்பித்துக் கொண்டான். அதே சமயத்தில் அனந்த் தனது உடலை ஒரு விதமாகத் திருப்பினான். இரு முழங்கால்களை எடுத்து இரு பெண்களையும் நிமிர்த்திச் சுழற்றவே இரு பெண்களும் அவன் இரு பக்கங்களிலும் சரேலென விழுந்தார்கள். அந்த விநாடியில் மின்னல் வேகத்தில் எழுந்துவிட்ட அனந்த், ராணியையும் சாருவையும் ஒவ்வொரு கையால் ரவிக்கையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான். "இன்னுமொரு முறை இப்படிப் போரிட்டால் உங்கள் இருவரையும் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது" என்று சீறினான்.

அவன் சீற்றத்தைக் கண்ட இரு பெண்களும் சற்று நிதானித்தார்கள். "என்ன தான் செய்து விடுவீர்கள்?" என்று ராணி வினவினாள் அந்த நிலையிலும் சிறிது வேகத்தைக் காட்டி.

"செய்வதைச் சொல்லுங்கள், தெரிந்து கொள்கிறேன்" என்றாள் சாரு பெருமூச்சால் விம்மிய மார்புடன்.

அனந்த் இருவரையும் சுட்டு விடுவதுபோல் பார்த்தான். "நீங்கள் இருவரும் பெண்கள் அல்ல" என்று சொன்னான் கடுமையும் எரிச்சலும் கலந்த குரலில்.

"வேறு யார்?" இரு பெண்களும் ஏக காலத்தில் கேட்டார்கள்.

"காட்டுப் பூனைகள்..." அனந்த் பேச்சை முடிக்கவில்லை. "என்ன சொன்னீர்கள்?" என்று இரு பெண்களும் ஏக காலத்தில் மீண்டும் நெருங்க முயன்றார்கள்.

"இன்னொரு முறை உங்கள் சுபாவத்தைக் காட்டினால் என் சுபாவத்தைக் காட்டுவேன்" என்றான் அனந்த்.

"காட்டுங்கள்" என்று இருவரும் மீண்டும் சீறினார்கள்.

"இன்னொரு கடற் போரை... கன்னிப் போரை... இல்லை காதல் போரை... நான் அனுமதிக்க முடியாது" என்று திட்டமாக அறிவித்த லா பூஷே "லேடீஸ்! ஹால்ட் யுவர் க்வாரல் லேடர். நௌ டு பிஸினஸ் (பெண்களே! உங்கள் சண்டையைப் பிறகு வைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது விஷயத்தைக் கவனிப்போம்) இந்தப் படத்தைப் பாருங்கள்" என்று கூறிக்கொண்டு மேஜைக்கு அப்புறம் சென்று இந்தியாவின் மேலைக் கரைப் படத்தைச் சரிப்படுத்தி விரித்தான்.

லிவானியரின் குரலிலிருந்த தீர்மானம் அந்தப்பெண்களையும் சுயநிலைக்குக் கொண்டு வரவே தங்கள் ரவிக்கைகளைப் பிடித்திருந்த அனந்தின் கைகளை அகற்றிப் பழையபடி படத்தைப் பார்க்கலாயினர். அனந்தும் படத்தைக் கூர்ந்து கவனித்தான்.

லா பூஷே மீண்டும் தனது ஆள்காட்டி விரலைத் தேவ்கட்டில் ஊன்றினான். "இந்தத் துறைமுகத்தை நாளை நடுப் பகலில் நாம் அடைவோம். அதற்குக் காற்று அனுகூலமாக இருக்கிறது. நாம் தேவகோட்டைத் துறைமுகத்தை அடைந்து சில மணி நேரங்களில் காலண்ட்ராவையும் அங்கு எதிர்பார்க்கிறேன். இந்த தேவ்கட்டில்தான் மாக்ரே நம்மைச் சந்திக்கத் திட்டமிட்டிருக்கிறான். அவனது ஐந்து கப்பல்களைச் சந்திக்க நமது இரண்டு கப்பல்கள் போதா. மாக்ரே கடற்போரில் மிக வல்லவன். ஏதோ ஒரு முறை இங்கலண்டிடமும் டெய்லரிடமும் தோற்று விட்டதால் அவன் திறமையை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது" என்று சொன்னான்.

அனந்த் படத்தை நன்றாக ஆராய்ந்தான். பிறகு சொன்னான்: "மாக்ரே ஐந்து கப்பல்களுடன் வரமாட்டான்."



இந்தப் புதுச் செய்தி லிவாஸியருக்கும் இரு பெண்களுக்கும் சிறிது அதிர்ச்சியைத் தரவே ''வாட் டூ யூ மீன்?'' என்று லிவாஸியர் கேட்டான்.

''வேறு எத்தனை கப்பல் களுடன் வருவான்?'' என்று ராணி வினவினாள்.

''பத்துக் கப்பல்களுடன் வருவான்'' என்று கூறிய அனந்த் ''அதனால்தான் அவனைத் தேவ்கட்டில் சந்திப்பது உசிதமல்ல என்று சொன்னேன்'' என்று கூறினான்.

''ஐ நோ, ஐ நோ, யூ ஹாவ் ஆல்ரெடி புட் யுவர் பிங்கர் அட் பூர்ணகட் (தெரியும் எனக்கு. உன் விரலால் பூர்ணகட்டைச் சுட்டிக் காட்டியிருக்கிறாய்'') என்று லிவாஸியர் கூறினான்.

''பூர்ணகட்டையா!'' என்று ராணி வியப்புடன் வினவினாள்.

ராணியின் வியப்பை லிவாஸியர் அனந்த் இருவருமே கவனித்தார்கள். ஆனால் லிவாஸியரே கேட்டான் ''அங்கு மாக்ரேயைச் சந்திப்பதில் இஷ்டமில்லையா?'' என்று.

''இல்லை'' என்றாள் ராணி.

''ஏன்?'' என்று வினவினான் அனந்த்.

''ராணி இகழ்ச்சியுடன் அனந்தைப் பார்த்தாள். பூர்ணகட்டில் எந்தவித பூர்த்தியும் கிடையாது. அதன் துறைமுகத்தில் எந்தக் கப்பலும் நுழைய முடியாது. சிறிய துறைமுகம். தவிர மச்கண்டி நதியின் முகத்துவாரத்தில் இருக்கிறது'' என்று விளக்கினாள்.

''மேலும் விளக்கிச் சொல்'' என்றான் அனந்த்.

''மச்கண்டி என்று அழைக்கப்படும் மத்ஸ்ய கந்தி நதி திமர் திமர் என்று வெள்ளம் வரக்கூடியது. தவிர மணலை முகத்துவாரத்துக்குக் குறுக்கில் வீசியிருக்கிறது. இன்றைக்கு ஆழமாக இருக்கும் துறைமுகம் திடீரென்று நீர் வடிந்து நாளைக்கு வெறும் மணற் பகுதியாகிவிடும்'' என்று பதில் சொன்னாள் ராணி.

ஆனால் மத்ஸ்யகந்தியின் திமர் மாறுதலால் ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றி அனந்த் சிறிதும் கவலைப்படவில்லை. ''நாம் தேவ்கட் துறைமுகத்துக்குள் கப்பலைக் கொண்டு செல்லப் போவதில்லை. சற்று முன்பாகவே நிறுத்தி வைக்கப் போகிறோம்'' என்று கூறிய அனந்த் லிவாஸியரை நோக்கினான்.

லிவாஸியர் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்து ராணியை நோக்கி, ''ராணி! அனந்த் டஸ் நாட் வாண்ட் டு ஹைட். ஹி வாண்ட்ஸ் டு பேஸ் த எனிமி (ராணி: அனந்த் எதிரியிடமிருந்து மறைய இஷ்டப்படவில்லை. பகிரங்கமாகச் சந்திக்க விரும்புகிறார்)'' என்று கூறினான். அவன் குரலில் மிகுந்த மரியாதை இருந்தது ராணிக்குப் புரிந்தது.

சாருவுக்கு ஓரளவு அந்த இரு காப்டன்களின் திட்டமும் புரிந்திருந்தாலும் ''காப்டன்! ஐ டோண்ட் ஃபாலோ (காப்டன்! நீங்கள் சொல்வது விளங்க வில்லை)'' என்றாள்.

ராணி விவரிக்கத் தொடங்கினாள். ''இப்பொழுது நம்மிடம் இருக்கும் சக்தி மகத்தானது. நாம் பகிரங்கமாக பூர்ணகட் துறைமுகத்துக்கு எதிரில் 'கடல் ராணி'யை நிறுத்தி எதிரியின் தாக்குதலுக்கு இலக்காக்கலாம். அப்படி எதிரி தாக்க முற்பட்டதும் கடல் ராணி துறைமுகத்தை



**விடைகள்:**

- வசந்த அழைப்புகள்

(1) அ. (2) ஈ (விஜயன், ரவீந்தர்). (3) உ (ரூபா, உஷா). (4) ஆ (கவுண்டமணி, இடிச்ச புளி....). (5) இ. (6) அ. (7) உ.. (8) உ (டி. ராஜேந்தர்). (9) உ..

- மரோ சரித்ரா

(என்ன பாலசந்தர் சார்! சங்கராபரணம் அளவுக்கு இதுக்கு விமர்சனமே வரலேன்னு குறைப்பட்டீங்களே, இப்ப திருப்திதானே?)

(1) உ. (2) ஆ (கமல்). (3) இ (சரிதா). (4) இ. (5) இ. (6) இ. (7) அ. (8) அ (கே. பாலசந்தர்). (9) இ.

- குர்பானி

(1) இ. (2) அ. (அம்ஜத்கான், விநோத் கன்னா பெரோஸ் கான்). (3) ஆ (ஜீனத்). (4) இ. (5) இ. (6) இ (ஆப் ஜெஸா கோய்) (7) இ. (8) இ. (9) இ.

- இ வேடி வானிஷெஸ்

(1) ஈ. (2) அ. (3) அ. (4) இ. (5) இ. (6) அ. (7) ஈ. (8) இ. (9) ஆ (ரீ-மேக்).

---

நோக்கிச் சிறிது பின்னடையும். அப்பொழுது அப்பால் மறைவில் நிற்கும் காஸன்ட்ரா மாக்ரேயுடன் மோதும். காஸன்ட்ராவின் பலத்துக்கு முன்பாக மாக்ரேயின் கப்பல்கள் திண்டாடும். சில அமிழ்ந்து போகும்'' என்று சொன்னாள் ராணி.


இங்கு அனந்த் இடை புகுந்தான். ''முதலில் ஐந்து கப்பல்களுடன் வரும் மாக்ரே உருப்படியாக மீதியிருக்கும் கப்பல்களுடன் பின்வாங்குவான். அவன் ஓடிவிட்டான் என்று காஸன்ட்ரா பின்தொடரும். அவனுக்குப் பின்னால் வரும் புது ஐந்து கப்பல்கள் காஸன்ட்ராவைச் சூழ்ந்து கொள்ளும். அந்த இரண்டாவது ஐந்து கப்பல்கள் வரா விட்டால் மாக்ரே தப்ப முடியாது. அதனால் தான் மாக்ரே பத்துக் கப்பல்களுடன் வருவான் என்று சொன்னேன். மாக்ரே ஈஸ் அன் எக்ஸலண்ட் ஸீமென் அண்ட் ஆன் இன்டலிஜெண்ட் ஒன் (மாக்ரே சிறந்த மாலுமி, அதுவும் புத்திசாலி)'' என்று விளக்கினான்.

லிவாஸியர் தீர்க்க சிந்தனையில் இறங்கினான். அப்போது சாரு கேட்டாள்: ''எல்லோரும் கடலைப் பற்றியே சிந்திக்கிறீர்கள். நிலத்தைப்பற்றி யோசிக்க ஏதும் இல்லையா?'' என்று.

அனந்தின் முகத்தில் மகிழ்ச்சியின் சாயை படர்ந்தது. அவன் கண்கள் அவளை நோக்கித் திரும்பின வியப்பை வீசிக் கொண்டு. ''சாரு! நீ வெகுப்பட்டவள் அல்ல'' என்று பாராட்டுதலை பகிரங்கமாகத் தெரிவித்தான் அனந்த்.

அவளைப் பாராட்டியதால் சிவந்துவிட்ட ராணியின் முகத்தை அனந்த் கவனிக்கவில்லை. ''ஆம். நிலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். பூர்ணகட் மலை உச்சியில் உள்ளது சிறு கோட்டை அதற்கு மதில் கிடையாது. சுமார் இருபத்திரண்டு ஏக்கர் விஸ்தீரணமுள்ளது. அங்குள்ள கட்காரிகளிடம் (கோட்டைக் காரியக்காரர்கள்) பேஷ்வா வரி கூட வாங்குவதில்லை. காரணம் அவர்கள் சிறந்த வீரர்கள். பீரங்கிகளைப் பயங்கரமாக இயக்க வல்லவர்கள் என்பதுதான். அந்த பீரங்கி பலத்தை நாம் உபயோகிப்போம். அந்த பீரங்கிகள் இன்றுவரை யாரையும் மத்ஸ்யகந்தி நதியை அணுக விடவில்லை. கோட்டை காரியஸ்தர்கள் நம் வசப்பட்டால் மாக்ரே நமது அருகில் வர முடியாது. அது மட்டுமல்ல. நமது கப்பல்கள் அவனைத் தாக்கலாம்'' என்றான் அனந்த். மேலும் சொன்னான்:

# சித்ரா பௌர்ணமி




சூரிய விரல்களில்
நகங்கள் முளைத்தன
கிளைகளில் துளிர்த்தன
நகக்குறிகள்!
தாரிகை வானவில்
வண்ணம் குழைத்தன
துளிகள் தெறித்தன-
மலர்ப்பொறிகள்!
சுனைகள்: மலர்கள்.
வாய்கள் திறந்தன
பின்னணி உதவின
நிழற்குயில்கள்.
பகலின் மீனிகளாய்ப்
பண்கள் இழைத்தன
பூவிதழ் பருகின,
பொழுப் பயல்கள்!
நீலம் துடைத்திடும்
மேகம் உதறின
இடிகளில் எழுந்தன
நானலயம்.
கூடுகள், குஞ்சுகள் -
சலங்கைகள் கொஞ்சின
குளிர்ச்சிகள் துள்ளின
நிழல் நடனம்!
மன்மதன் மந்திரம்
தந்தன சுதந்திரம் -
இன்னா மலருள்ளும்
சிறு புயல்கள்.



கனாவில் பதுங்கிய
காதல் நினைவுகள்
உணர்வில் குதித்தன -
குழிமுயல்கள்!
சுனைநீருகள் வேர்வைகள்!
உப்பில் சிறந்தன
நாளொன்றும் சமையலில்
புதிய சுவை!
காற்றுகள் கைக்குட்டை
விற்றுத் திரிந்தன
வேர்வைத் தெருவெங்கும்
நல்ல விலை!
விடெங்கும் விசிறிகள்
-வண்ணத்துப் பூச்சிகள்-
காடெங்கும் மலருக்கும்
சாமரங்கள்!
ஆடை குறைந்தன
அனைவரும் காந்திகள்!
மாடியில் முளைத்தன
ஓலைக்குடில்!
பகலின்-
இத்தனை எழில்களும்
எந்தமூ லைக்கென
எழுந்தது சித்திரா
பௌர்ணமியே!

• இக்பால் •


ங்கள் பற்கள் பல்லாண்டு வாழ்க !
பினகா ஃப்ளோரைட், வலி தரும் சொத்தை மற்றும் பற்சிதைவிலிருந்து உங்களுக்கு முழுமையான பாதுகாப்பளிக்கிறது. அதில் மிகவும் சக்தி வாய்ந்த ஃப்ளோரைட் கலவையான ஸோடியம் மோனோஃப்ளோரோபாஸ்பேட் உள்ளது. பற்களுக்கு உறுதி தருவதற்கு எனமலைக் கொண்டது. அதனால் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளின் வளர்ச்சியைத் தடுக்கிறது.
இளமைப் பருவத்திலேயே பினகா ஃப்ளோரைடை உபயோகிக்கத் துவங்குங்கள். அதை அதிக காலம் உபயோகித்தால், உங்கள் பற்கள் நீண்டகாலம் வாழும்.
Binaca Fluoride toothpaste
Binaca Fluoride toothpaste
ஸீபா–காய்கி
பல்லுக்கு உறுதி பற்சிதைவுக்கு எதிரி...
பினகா ஃப்ளோரைட்
இந்தியாவின் முதன் முதல் சக்தி வாய்ந்த ஃப்ளோரைட் பற்பசை
ULKA-BF-1/80 TAM




''பேஷ்வாவின் பிரதிநிதியான சாருவுக்குக் கோட்டை வாசிகள் அடங்கியாக வேண்டும்'' என்று.

''ஓகோ!'' என்றாள் ராணி.

''என்ன ஓகோ.'' என்று வினவினான் அனந்த்.

''உங்களுக்கு சாருவின் உதவி போதும்'' என்று ராணி கூறினாள்.

அனந்த் புன்முறுவல் செய்தான். ''ஆம். ஏனென்றால் உன் உதவி ஏற்கனவே இருக்கிறது.'' என்றான் அனந்த்.

ராணி பிரமித்தாள். ''என்ன சொல்கிறீர்கள்?'' என்று வினவினாள்.

''இந்தக் 'கடல் ராணி' காலையில் கிளம்பியதும் நடுப் பகலுக்குச் சிறிது முன்பு மால்வானுக்கு வடக்கே ஒன்றரை மைல் தூரத்திலுள்ள மலை வெடிப்பைக் கடந்தது. அந்த வெடிப்பில், கடல் உட்புகுந்து அளித்த இயற்கைத் துறைமுகத்தில் மறைந்திருந்த உன் கப்பல்கள் ஐந்து புறப்படுவதைப் பார்த்தேன். அவை இந்தக் கப்பலைத் தொடர்வதையும் பார்த்தேன். இந்தக் கப்பல் எந்த நடவடிக்கையில் இறங்கினாலும் அந்த ஐந்து கப்பல்களும் சமயம் வரும்போது கலந்துகொள்ளும். அது பெரிய உதவி ராணி. எங்களைக் கேட்காமலே இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறாய். அதற்கு நன்றி. உன் கப்பல்கள், அவற்றின் போர்த் திறமை, நமது கடல் பலத்தை அதிகப்படுத்துகின்றன. ஆனால் நில பலமும் வேண்டும். அதற்குத் தான் பூர்ணகட்டைத் தேர்ந்தெடுத்தேன். அதன் பீரங்கிகளின் பலம் என்பது ஒரு பாதுகாப்பு நமக்கு. அதை விட அதிக பாதுகாப்பு அதற்குத் தெற்கே உள்ள விஜயதுர்க்கம். கடல் ராணியும் காஸண்ட்ராவும் உனது ஐந்து கப்பல்களும் தமது துறைமுகத்தைத் தாண்டுவதை கனோஜி ஆங்கரே கவனிக்காமல் இருக்க மாட்டார். கவனித்த பின்பு கையைக் கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கவும் மாட்டார். அவர் சும்மா உட்கார்ந்திருந்தாலும் அவரை எழுப்ப ஒருவன் நேற்றே புறப்பட்டிருப்பான்'' என்று விளக்கினான்.

''யாரவன்?'' என்று ராணி கேட்டாள்.

''துலாஜி ஆங்கரே. கனோஜியின் மகன். எனது நண்பன். நாங்கள் இருவரும் ஒன்றாகத்தான் அரபிக்கடலிலிருந்து கொள்ளைக்காரர்களை விரட்டக் கிளம்பினோம். ஒன்றாகவே அந்தப் பணியை முடிப்போம்.'' என்றான்.

அவன் சொற்களில் உறுதி பலமாக இருந்ததை மற்ற மூவரும் கவனிக்கவே செய்தார்கள். காஸண்ட்ராவில் ஏற்கனவே நடந்த நிகழ்ச்சிகள் ராணியின் நினைவுக்கு வந்தன. அனந்தின் ஏற்பாடுகள் திட்டமாக ஒரு தொடர்ச்சியுடன் தொகுக்கப்பட்டிருப்பதை உணர்ந்ததால் வியப்பின் வசப்பட்டாள். ''ஆம், ஆம். இருவரும் இணைபிரியாத ஜோடிகள்'' என்று சொன்னாள் ராணி வியப்பு குரலிலும் ஒலிக்க.

அதற்குப் பிறகு அனந்த் பேசவில்லை. ''லிவானியர்! இன் அனதர் டென் டேஸ் அட் த மோஸ்ட் ஐ வில் ஸ்மாஷ் டெய்லர் இங்க்லண்ட் அண்ட் லில்வர் (லிவானியர்! இன்னும் பத்தே நாள்; டெய்லர், இங்க்லண்ட், லில்வர் இந்தத் திரிமூர்த்திகளை ஒழித்துக் கட்டுகிறேன்)'' என்று கூறிக் கையை முஷ்டியாகப்பிடித்து மேஜைமீதிருந்த படத்தில் குத்தினான். ''அண்ட் ஐ வில் க்ளிப் த விங்ஸ் ஆப் காஸண்ட்ரா டூ யர் (காஸண்ட்ராவின் இறக்கைகளையும் இந்த இடத்தில் வெட்டிவிடுகிறேன்)'' என்றும் ஆவேசத்துடன் சொல்லி மீண்டும் பூர்ணக் கோட்டையின் பகுதியில் ஆள்காட்டி விரலை ஊன்றினான்.

(தொடரும்)



எழுத்தாளர் : ஆறு மாசத்துக்கு முந்தி ஒரு சிறு கதை அனுப்பி இருந்தேன்!

ஆசிரியர் : சரி!

எழுத்தாளர் : அது திரும்பியும் வரலே, பிரசுரமும் ஆகலே! அது என்ன ஆச்சுன்னு...!

ஆசிரியர் : கதை பேரு?

எழுத்தாளர் : ''கிணற்றிலே போட்ட கல்!''

-வெ. சீதாராமன்

# சினிமா அரசியல்!

ஸ்ரீவித்யா

## சிந்தனைச் சிதறல்கள்



✖ சத்யன்

ஸ்ரீதாஞ்சலியின் தகப்பனார் எனக்கு ஜோஸியம் பார்த்து என்ன சொன்னார் தெரியுமா? 'நீ பெரிய ஆர்ட்டிஸ்டா வருவே' என்றார். எனக்கு ஒரே சந்தோஷம்.

அந்தப் படத்தில் ஸ்ரீதாஞ்சலி கண் தெரியாதவராக நடித்ததால் அவர் பாடி நடித்தால் நன்றாக இருக்காது; எனவே வித்யா பாடுவதை அவர் உட்கார்ந்து கேட்பதுபோல் காட்சியை மாற்றலாம் என்று இயக்குனர் முடிவு செய்தார். இந்த விஷயம் ஸ்ரீதாஞ்சலிக்குத் தெரிந்து தன் தந்தையிடம் கூறி யிருப்பார் போலிருக்கிறது. அவர் தந்தை மறுபடியும் என் கையைப் பார்த்தார். 'உனக்குப் பிராப்தமே கிடையாது நீ நடிப்பில் முன்னேறவே முடியாது' என்று கூறிவிட்டார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. 'நேற்றைக்கு ஒரு ரேகை இன்று ஒரு ரேகையா கையில் இருக்கும்?' என்று எண்ணினேன். அதற்குள் அருகில் நின்றிருந்த புரொடக்ஷன் உதவியாளர் ''அதெல்லாம் ஒன்றுமில்லை; பாட்டு மாறிவிட்டதில்லையா? அதுதான் உன் தலையெழுத்தை மாற்றிவிட்டார்!'' என்று கூறினார். சினிமா அரசியலை முதன் முதலாக அன்றுதான் நான் அனுபவித்தேன்.

தமிழில் மூன்றெழுத்து முடிந்த பிறகு பல வாய்ப்புக்கள் வந்தன. ஆனால் எல்லாம் இரண்டாவது கதாநாயகியாக இருந்ததால் எங்கள் வீட்டில் வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். என் தந்தை ''எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தால் தான் இனி நீ நடிக்கலாம்! பரீட்சையில் தோல்வியுற்றால் உனக்குக் கல்யாணம் செய்து விடுவோம்!'' என்று கூறினார். அதற்காகவே கஷ்டப்பட்டுப் படித்தேன்.

ஒரு நாள் திரு வின்சென்ட் நான் நடிக்க வேண்டும் என்று கேட்டு வந்தார். படம் 'செண்டா'. கதாநாயகி பாகம். நடனத்தோடு ஒட்டியது. அவர் விளக்கிக் கூறியதும் சரி என ஒப்புக்கொண்டேன். பிறகு என் தந்தையிடம் கூறினேன். ''என்னைக் கல்யாணம் செய்து கொடுத்து விடுவதாகக் கூறினீர்களே எனக்குப் பிராப்தம் இருப்பதால்தான் பரீட்சையில் பாஸ் செய்தேன். இந்த வாய்ப்பும் கிடைத்துள்ளது'' என்றேன். 'செண்டா' வுக்குப் பிறகு சுமார் இருபது படங்களில் நான் ஒப்பந்தமாகி 'பிஸி' ஆனேன். மலையாளத்தில் நடிக்கிறேன் என்றவுடன் கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழிலும் அழைப்பு வந்தது. 'டெல்லி டு மதராஸ்' என்ற படத்தில் ஜெய்சங்கருடன் நடித்தேன், கதாநாயகியாக. திரு. சத்யன் இறப்பதற்கு முன்னால் அவருடன் இரண்டாவது படத்துக்கு ஒப்பந்தமானேன். முதல் சீன் எடுத்த இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர் இறந்து போனார். அதனால் அந்தப் படம் நின்றுபோயிற்று.

தமது தொழிலில் பக்தி, உழைப்பில் ஆர்வம் ஆகியவற்றை உடையவர் சத்யன். அவருக்குச் சம்பந்தமே இல்லாத நடிகராக இருக்கலாம். அவரைப் பற்றி அவர் காதுபடத் தப்பாக ஏதாவது பேசினால் கோபம் வந்து விடும். அடிக்கவே போய்விடுவார். ''எதற்காக இன்னொருவரைப் பற்றி மற்றவரிடம் பேச வேண்டும்? அதற்கா வந்திருக்கிறாய்? நடிக்கத்தானே வந்திருக்கிறாய்?'' என்பார். பிரேம் நசீர் கூட அவரிடம் மரியாதையுடன் தள்ளியே நிற்பார். வசனம் சரியாகச் சொல்லவில்லையானால் கோபப்பட்டு அடித்து விடுவார். சரியான பள்ளிக்கூட வாத்தியார் போல நடந்து கொள்வார். படப் பிடிப்பு முடிந்த பின்னரும் அடுத்த காட்சிக்கான வசனங்களை எடுத்து வரச் செய்து இந்தக் காட்சியில் இப்படிப் பேச வேண்டும், இதை இப்படி நடிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுப்பார். ஷூட்டிங் முடிந்ததும் வீடு திரும்ப மாட்டார். என்னைக் கூப்பிட்டு வசனங்களைப் பேசச் சொல்லிக் கேட்பார். ''உனக்கு நன்கு மலையாளம் பேச வருகிறது. உனக்கு யாரும் டப்பிங் குரல் கொடுக்கக் கூடாது. படம் முடிவதற்குள் மலையாளத்தை நன்கு கற்றுக் கொண்டு நீயே டப்பிங் செய்யப் போகிறாய்'' என்றார். சொன்னதைச் செயலாக்கியும் காட்டினார். எனக்குப் பயிற்சி கொடுத்து என்னைப் பேச வைத்த பெருமை திரு. சத்யனையும் திரு. திக்குரிசியையும்தான் சேரும்.

பேட்டி: **சலன்**



# கடிகாரத்தின் பெரியமுள்

எழுதுகிறார் கண்ணதாசன்



**நா**ளொன்றுக்குப் பதினைந்து மணி நேரம் வேலை பார்க்கும் பழக்கம் எனக்கு முன்பிருந்தது.

காலை ஏழு மணிக்குக் குளித்துவிட்டுப் புறப்பட்டால், அந்தச் சுகமான காற்றில் மள மளவென்று காரியங்களை முடிப்பேன். அவை அற்புதமான நாட்கள்.

உதயத்தையும் அஸ்தமனத்தையும் ஒரு நாள் பாராவிட்டால் அன்றையப் பொழுது வீண்.

மனித வாழ்நாள் நிச்சயமற்றது. ஆகவே இருக்கின்ற நாளில் ஒன்றுகூட மிச்சமாகக் கூடாது.

ஒவ்வொரு நாளிலும் ஏதாவது எழுதுவது என் பழக்கம். ஆனால் கடந்த ஓராண்டுக் காலமாக ஒரு புதுவகைச் சோர்வு. நாள் ஒன்றுக்குப் பன்னிரண்டு மணி நேரம் தூக்கம் வருகிறது. எப்பொழுது எங்கு படுத்தாலும் சுகமான தூக்கம் வருகிறது. 'இது ஒரு வரப்பிரசாதம்' என்கிறார்கள் டாக்டர்கள்.

நல்லதுதான். ஆனால் காலை பத்து மணிக்குப் படுத்து, இரண்டு மணிக்கு எழும்போது பொழுது வீணாகிவிட்ட உணர்ச்சி தோன்றுகிறது.

மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவன் பிறப்பின் நோக்கம் நிறைவேற்றப் படுகிறது.

சர்ச்சில் ஒரு நாளைக்கு முழு பாட்டில் 'காக்டெயில்' குடிக்கும் பழக்கம் உள்ளவராம். ஆனால் அவரது சுறுசுறுப்புத்தான் பிரிட்டனைக் காப்பாற்றியது.

எண்பது வயதான காஞ்சிப் பெரியவரின் சாப்பாட்டில் என்ன புரதம் இருக்கிறது? அவரது சுறுசுறுப்பு இருபது வயது இளைஞனுக்கு வராதே!

உடம்பு ஆரோக்கியமாக இருப்பது முக்கியமல்ல; உடம்பும் உள்ளமும் சுறுசுறுப்பாக இயங்க வேண்டும். இருபது படிகள் ஏறும்போது ஒரு சிறு நாய்க்குட்டி ஏறுவது போல் மடமடவென்று ஏறவேண்டும்.

அவ்வளவு பெரிய ஹிட்லர், உலகத்தை வென்றிருக்க வேண்டியவன், ஒரு நாள் அலுப்பு அதிகமாகித் தூக்க மாத்திரை போட்டு நான்கு மணி நேரம் தூங்கினான். அன்றைக்குத்தான் அவனுடைய தோல்வி ஆரம்பமாயிற்று. அன்றைக்குத்தான் ஐஸன் ஹோவரின் தலைமையில் நேசப் படைகள் நார்மண்டியை முற்றுகை இட்டன.

அலுத்துப்போய் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று ஒன்றை ஒத்தி வைத்தால் ஒருபடி கம்மியாகவேதான் முடிகிறது.

1955ல் மவுண்ட் ரோடிலே என் பத்திரிகை இருந்த கட்டிடத்தை முப்பத்தையாயிரம் ரூபாய்க்கு என்னை எடுத்துக்கொள்ளச் சொன்னார்கள். என்னிடமும் பணம் இருந்தது; சோம்பேறித்தனத்தால் விட்டுவிட்டேன். இன்று அதன் மதிப்பு மூன்று லட்சம் ரூபாய்!

சினிமா உலகில் ஏ. வி. எம்., நாகிரெட்டி, பத்திரிகை உலகில் வாசன், கல்கி — இவர்கள் சுறுசுறுப்பால் முன்னேறியவர்கள்.

கலைஞர் கருணாநிதி எனக்கு விரோதிதான்; என்னை ஒழிக்கத்தான் அவர் விரும்புகிறார்; ஆனால் இந்தியாவிலேயே அரசியலில் கருணாநிதியின் சுறுசுறுப்பு யாருக்கும் வராது.

எடுத்துக்கொள்ளும் எந்த முயற்சியிலும் எம். ஜி. ஆர். சுறுசுறுப்பானவர்.

சினுக்காரன் படை எடுக்கும்வரை நேருவுக்கு நிகரான சுறுசுறுப்பாளர் எவருமில்லை.

சினிமா டைரக்டர்களில் (கிருஷ்ணன்)— பஞ்சு, கே. பாலசந்தர் போன்றோர் மிகவும் சுறுசுறுப்பானவர்கள்.

நான் தூக்கத்தைக் குறைத்துச் சுறுசுறுப்பாக இருந்திருப்பேனானால் என் கவிதைகள் பத்தாயிரத்தைத்தாண்டியிருக்கும்.

பாரதி சோம்பலைச் சாடினான்; சுறு சுறுப்பைப் பாராட்டினான்.

ராமாயணத்தைப் படிக்கும்போது ராமனை விட, அனுமானே சுறுசுறுப்பானவனாகத் தோன்றுகிறது.

குறைந்த படிப்புப் படித்தவர்கள் பலர் விடாமுயற்சியிலும், சுறுசுறுப்பிலுமே முன்னுக்கு வந்திருக்கிறார்கள்.

மூளைச் சுறுசுறுப்புக்கு நல்ல உதாரணம் கலைவாணர் என். எஸ். கே.

எதிலும் சரியான நேரத்தில் சரியான காலத்தில் முடிவெடுப்பதில் வல்லவர் அச்சுத மேனன்.

இந்தியக் கிராமங்கள் முழுவதையும் ஏழே நாட்களில் சுற்றிவந்த இந்திரா காந்தியை விடவா சுறுசுறுப்புக்கு ஒரு பெண்மணி வேண்டும்?

என் குழந்தைகளுக்கு அந்தச் சுறுசுறுப்பை இறைவா நீ அருள்வாயாக!

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

# மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



**...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.**

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேளை தவறாத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே **தனி.**
இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை.
காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.




**நீங்களே கண்டுகொள்வீர்கள்**

இதை வெளுத்தது வேறுசில டிட்டர்ஜெண்ட பார்



இதை வெளுத்தது ஸூப்பர் ரின்

<u>அதிக</u>
வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லிண்டாஸ்-RIN.40-2012 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

அம்மா உங்கள் கவனிப்பு கரை கடந்தது.

பார்லே

# உலகிலோர் ஒப்பிலா மணி யென அவளுக்கு உணர்த்திடும் அன்புறவே.




எல்லையற்றதம்மா உங்கள் இனிய கவனிப்பு... அவளுக்காக நீங்கள் தேர்ந்தெடுக்கும் பிஸ்கட்டே அதன் தாமுரைக்கட்டுமே. திண்ணம் அதுவே. தீவிர சுகாதார முறையில் கைபடாத் தூய்மையோடு தயாரித்த பிஸ்கட்—சுவை மிக்கது. கரகரப்பானது. அவளுடைய தேவைக்கு நிகரான ஊட்டச்சத்து உள்ளது. எண்ணிப் பாருங்கள், தரத்திற்காக 7, உலக விருதுகளை வென்ற பிஸ்கட்—பார்லே க்ளூகோ—இந்தியாவின் அதி நவீன பிஸ்கட் தயாரிப்பாளர்களின் படைப்பு.

பார்லே
க்ளூகோ

உங்கள் பாசத்தைப் பேசிடும் குழந்தை பராமரிப்பு பிஸ்கட்.

everest/80/PP/331-tm